ஸ்ரீ:

# சங்கசிந்தாமணி

அகநானூற்றுப் பதிப்பாசிரியர்

வே. இராஜகோபாலையங்கார்

எழுதியது

சென்னை: மயிலாப்பூர்

கம்பர் விலாஸம்

1939.

1st. Edition: ருதிரோத்காரி௵ மாசி௴.

2nd. ,, பிரமாதி௵ ஆடி௴.

ஸ்ரீ:

# முகவுரை

சங்கசிந்தாமணி என்பது தலை இடை கடை என வழங்கிய முச் சங்கங்களின் சமபந்தமான வெல்லாவற்றையும் கூறும் நூலென்று கொள்க. இக் காலத்து அறிஞர் பலர் பண்டைத் தமிழ் மக்களின் அக்கால நிலையினையும் ஒழுகலாற்றினையும் பிறவற்றையும் அறிய முயன்று, தாம் கண்டதனைத் தனி நூல்களாகவும் வியாசங்களாகவும் எழுதி உலகினுக்குத் தந்து மகிழ்வூட்டி வருகின்றனர். அவர்களது நன் முயற்சியினைக் கண்டு யானொருபத்து வருடங்களாகநம்பண்டைத் தமிழ்மக்களின் சரிதைகளிற் சிலவற்றை இளஞ்சிறுர்கள் பள்ளியிற் பயிலுமாறு கதைக்கோத்து என்னும் பெயருடன் எழுதி வந்திருக்கிறேன். இப்போது நம் நாட்டின் இளையரேயன்றி முதியரும் அச் சரிதைகளைத் தொடர்ச்சியாக அறியுமாறு இந்நூல் எழுதலாயினேன்.

நெடுங்காலத்திற்கு முன் நிகழ்ந்த அச் செய்திகளை உள்ளவாறு அறிந்துரைப்பதற்குப் போதிய சான்றுகள் இக் காலத்தே இல்லை யென்பதை அறிந்த விவேகிகள் இச்சிறு நூலிற் காணப்படும் பிழைகளைப் பொறுத்தருள்வாராக. என்னை இம் முயற்சியிற் புகுத்திய ஸர்வேச்வரன் இதனை முற்றுவித்தருள்கவென அவன் சரண கமலங்களை உபாஸிக்கின்றேன்.

கம்பர் விலாசம்
மயிலாப்பூர்
ருதிரோத்காரி௵, மாசிமீ

இங்ஙனம்,
வே. இராஜகோபாலையங்கார்

ஸ்ரீ:

# உள்ளுறை

பக்கம்


தமிழ் நாடு சேரசோழ பாண்டியர்க்கு உரியது ... 1

தேவர்கள் மேருவிற் கூடியிருந்து ஆலோசித்தது ... 2

அகஸ்தியர் தென்னாட்டுக்குப் புறப்பட்டது ... 3

காவிரியை அகத்தியர் தென்னாடு கொணர்ந்தது ... 3

அகஸ்தியர் திரணதூமாக்கினியாரைத் (தொல்காப்பியனாரை)ப் பெற்றுக் கொண்டது ... ... 3

அகஸ்தியர் உலோபா முத்திரையை மணந்தது ... 3

அகஸ்தியர் சிலங்கடந்த நெடுமுடி யணணல் வழி அரசர் வேளிர் முதலியோரைத் தென்னாட்டிற் கொணர்ந்தது ... ... ... ... 4

அகஸ்தியர் இராவணனைக் கந்தருவத்தாற் பிணித்து இராக்கதரைத் தென்னாட்டினின்றும் விலக்கியது ...5

அகஸ்தியர் பதினெண்குடி அரசர் முதலியோரைத் தென்னாட்டிற் குடி ஏற்றியது ... ... 5

அகஸ்தியர் பொதியில் மலையிலிருந்தது ... ... 5

அகஸ்தியர், தொல்காப்பியர் பனம்பாரர் காக்கை பாடினியார் முதலிய பன்னிருவர்க்கும் தமிழ் கற்பித்தது ... ... ... ... 6

அகஸ்தியர் ஆணைப்படித் தொல்காப்பியர் குமரியாரைத் தென்னாடு கொணர்ந்தது ... ... 6

குமரியாரை வையை இழுத்துச் சென்றது ... ...

அகஸ்தியர், தொல்காப்பியனாரையும் குமரியாரையும் சபித்தது ... ... ... ... 7

பக்கம்

தொல்காப்பியர் அகஸ்தியரோடு மாறுபட்டுப் பனை
நாட்டில் தனித்திருந்தது ... ... ... 8
காய்சினவழுதி தலைச்சங்கம் கூட்டியது ... ... 8
சிவபெருமான், முருகவேள், குபேரன், மார்க்கண்
டேயனார், கௌதமனார் முதலியோர் தலைச்
சங்கத்தில் வீற்றிருந்தது ... ... ... 9
ஜயமாகீர்த்தி கவியரங்கேறியது ... ... 9
தேவரும் அசுரரும் கலகப்பட்டு மாகீர்த்தியை மதி
யஸ்தனாக விருக்க வேண்டியது ... .. 10
மாகீர்த்தி தீர்ப்பளித்தது ... ... ... 10
பாண்டிநாட்டின் தென்பாகமும் தலைச்சங்கமுமழிந்தது...10
கடுங்கோன் தலைச்சங்கத்துக் கடைசிப் பாண்டியன்
என்பது ... ... ... ... 11
வெண்டேர்ச் செழியன் இடைச்சங்கம் நிறுவியது ... 11
அகஸ்தியர் இடைச்சங்கத்தும் தலைமை வகித்தது .. 11
தொல்காப்பியர் இலக்கணம் செய்தது ... . 12
ஜயமாகீர்த்திக்குத் தொல்காப்பிய ரிலக்கணஞ் செய்
திருப்பது தெரியவந்தது .. .. ... 12
தொல்காப்பியர் தம் நூலைக் கேட்கும்படி அதங்
கோட்டு ஆசிரியரை வேண்டியதும் அகஸ்
தியர் தடுத்ததும் ... ... ... 13
மாகீர்த்தி தொல்காப்பியரைக் கண்டு அவர் நூலை
அரங்கேற்றுமாறு வேண்டியது ... ... 13
அதங்கோட்டாசிரியர் கடாவுக்குத் தொல்காப்பியர்
விடை இறுத்தது ... ... .. 14
மாகீர்த்தி தொல்காப்பியம் புலப்படுத்தது .. ... 14
அநாகுலன், சாரகுமாரன் என்ற இவர் வரலாறு .. 15
அகஸ்தியர் மாணாக்கர் பன்னிருவர் பெயர் ... ... 15
மாபுராணம் பூதபுராணம் முதலியன இடைச்சங்க
நூல்கள் என்பது ... ... ... 15

பக்கம்
முடத்திருமாறன் கடைச் சங்கத்தை நிறுவியது ... 16
கடைச்சங்கப் புலவர்களும் அவர் நூல்களும் ... 16
உதியன்சேரல் வரலாறு ... ... ...17—19
இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் வரலாறு ...20—21
பல்யானைச் செல்கெழுகுட்டுவன் வீரம் ...21—22
பல்யானைச செல்கெழுகுட்டுவன் பாலைக்
கௌதமனார்க்கு வீடளித்தது ... ...23—25
நன்மாறன் கதை ... ... ... ...25—27
பூதப்பாண்டியன் தேவி பெருங்கோப்
பெண்டின் கதை ... ... ...27—29
கௌணியன் விண்ணந்தாயன் கதை ... ...29—31
கள்ளூர் அவையின் சிறப்பு ... ... ...31—32
கோப்பெருஞ் சோழன் துறந்தது ... ...33—34
பிசிராந்தையார் துறந்தது ... .. ...34—36
பொத்தியார் துறந்தது ... ... ...37—38
கல்வியாற் சிறப்பெய்திய பார்ப்பான் ... ...39—40
செல்வக் கடுங்கோ ஆழியாதனும் கபிலரும் ...40—42
கிள்ளிவளவனும் வெள்ளைக்குடி நாகனாரும் ...42—45
பராசரன், தக்ஷிணாமூர்த்தி, கார்த்திகை வார்த்தி
கன் முதலியோர் கதை ... ...45—48
தன்கை குறைத்த பாண்டியன் கதை ... ...48—51
நக்கீரரும் கோடனும் ... ... ...51—53
நக்கீரர் இறையனார் களவியலுரை கண்டது ...53—56
களவழி பாடிப் பொய்கையார் கணைக்கால் இரும்
பொறையை மீட்டது ... ... ...56—59
கணைக்கால் இரும்பொறை உயிர் விட்டது ...59—60
இராஜசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் மலைய
மானும் யானைகட்சேஎய் மாந்தரஞ் சேரல்
இரும்பொறையும் ... ... ...60—62
பெருஞ்சேரல் இரும்பொறையும் மோசிகீரனாரும் ...62—64

பக்கம்

ஆய் நீலநாகத்தை உபாவித்தது ... ... 64

ஆய்நீலவாடையைச் சிவபெருமானுக்குச் சாத்தியது... 65

பேகன் கணிகை வயத்தனுயது ... ...66—68

கண்ணகியின் துயரைக் கபிலர் பரணர் முதலியோர் களைத்தது ... ... ... ...68—70

வெற்பஃறடக்கைப் பெருவிறற்கிள்ளி இரணகளத்திற் பட்டது... ... ... ... 71

நலங்கிள்ளி ஒளித்து வளர்ந்தது ... ...72—73

நலங்கிள்ளி உறையூரை முற்றியது ... ...73—74

நலங்கிள்ளி ஆவூரை முற்றியது ... ...75—76

நெடுங்கிள்ளி இளந்ததனைக் கொல்லப் புக்கது ...77—78

நெடுங்கிள்ளியின் மரணம் ... ... ... 78

நலங்கிள்ளியின் குணதிசயம்... ... ... 79

மாவளத்தானும் தாமப்பல் கண்ணனும் ...79—81

குடக்கோ நெடுஞ்சேரலாதனும் கழாத்தலையாரும் ... 81—84

செங்குட்டுவனும் இளங்கோவும் ... ...84—86

அந்துவன் சேரல் இரும்பொறையும் முடித்தலைக் கோப்பெரு நற்கிள்ளியும்... ... ..86—88

செல்வக் கடுங்கோ ஆழியாதன் கிள்ளிவளவனையும் பழையன் மாறனையும் வென்றது ... 88

செல்வக் கடுங்கோவின் குணதிசயம் ... ...89—90

யானைக்கட்சேய் மாந்தரன் சேரலிரும்பொறையும் நெடுஞ்செழியனும் ... ... ...90—91

யானைக்கட்சேய் மாந்தரன் சேரலிரும்பொறையின் மரணம் ... ... ... ...91—93

தித்தன் வரலாறு ... ... ... ...93—96

போர்வைக் கோப்பெரு நற்கிள்ளி ஆமூர் மல்லனை வென்றது ... ... ... ... 95

கட்டியும் பாணனும் தித்தனோடு பொர வந்து பொராது ஓடியது ... ... ... 96

பக்கம்

மலையமான் திருமுடிக்காரியின் கதை ... 97—103
காரி ஆரியரை வென்றோட்டியது ... ... 97
காரி ஆனிரை கவர்ந்து வருவது ... ... 98
காரி அஞ்சியை வென்றது ... ... 98—99
மத்தி அஞ்சி (எழினி) பல்லைப்பிடுங்கியது ... 99
களங்காய்கண்ணி நார்முடிச் சேரலைக் குளமுற்றத்
துத் துஞ்சிய கிள்ளிவளவன் வென்று கரு
வூர்க் கோட்டையை அழித்தது ... 99—101
மலையமான் மக்களைக் குளமுற்றத்துத் துஞ்சிய
கிள்ளிவளவன் யானைக்கிடத் தொடங்கக்
கோவூர்கிழார் அவர்களை உய்யக்கொண்டது 101—102
அஞ்சி திருக்கோவலூரை அழித்தது ... ... 102—103
கரிகால் வளவன் கதை ... ... .. 103—137
கரிகாலன் ஜனனம் ... ... ... 104—106
கரிகாலன் சுடப்பட்டு இரும்பிடர்த் தலையாரால்
உயிர் உய்ந்து கருவூரில் வசித்தது ... 106—108
கருவூரில் இருந்த கரிகாலனை யானை அரசுக்கு
உரிமை யாக்கியது ... ... ... 108—111
கருங்கை ஒள்வாட் பெரும்பெயர் வழுதி இரும்
பிடர்த்தலையார் வேண்டுகோட்படிக் கரி
காலனுக்கு உதவியது ... ... 109—111
கரிகாலன்நாங்கூர்வேளிடை மகட்கொண்டது... 111
கரிகாலன் சொல்லான் முறை செய்தது ... 111—113
கரிகாலன் புகார்ப் பூமியின் அளவைக் கண்டு
அறிந்தது ... ... ... ... 113—114
தான்பிறந்த குலத்தை மறைத்த இடைப்பெண
குலத்தைக் கரிகாலன் அறிந்தது ... 114—116
ஆதிமந்தி வரலாறு ... ... ... 116—122
ஆதிமந்தியை ஆட்டனத்தி மணந்தது... ... 117

பக்கம்

ஆட்டனத்தி காவிரியாலிழுத்துச் செல்லப்பெற்றுக் கடலில் உய்க்கப் பெற்றது ... 118
ஆதிமந்தி தன் கணவனைத் தேடி யலைந்தது ... 119—120
ஆட்டனத்திமருதியால் காக்கப்பெற்றிருந்தது... 120—121
ஆதிமந்தி ஆட்டனத்தியைக் கண்டு மகிழ்ந்தது... 121
மருதி ஆட்டனத்தியை ஆதிமந்திபால் ஒப்படைத்துக் கடலிற் புக்கிறந்தது ... ... 121—122
நெடுஞ்சேரலாதனுக்கும் கரிகாலனுக்கும் நிகழ்ந்த போரில் நெடுஞ் சேரலாதன் புறப்புண்ணுற்று வாளோடு வடக்கிருந்தது ... 122—124
கரிகாலன் ஒளியர் முதலியோரை ஒடுக்கியது ... 124—126
கரிகாலன் கச்சிக் காமக்கோட்டத்து ஐயனுரை வழிப்பட, அவர் செண்டாயுதம் நல்கியது 125
கரிகாலன் இமயத்தைத் திரித்துப் புலிபொறித்தது 126—127
கரிகாலன் வச்சிரம், மகதம், அவந்தி முதலிய நாட்டரசர்பால் அரும்பொருள் பெற்றது ... 127—128
புகாரிலுள்ள ஐவகை மன்றங்களின் விவரணம்... 128—129
சோம குண்டம்சூரியகுண்டங்களின் விவரணம்... 129—130
கரிகாலன் காவிரிக்கு அணைகட்டுவித்ததும் முகரியை அடக்கிப் பரிகரணுக்கியதும் ... ... 130—132
கரிகாலன் ஆளுகையில் உழவு வாணிகம் முதலியவற்றின் நிலைமை ... ... ... 132—135
கரிகாலன் ஆளுகையில் கல்வியின் நிலைமை ... 135—137
கரிகாலனது வைதிக ஒழுக்கம் ... ... 136
கரிகாலனது புத்திரர்களும் புத்திரிகளும் ... 136
கரிகாலனைக் குறித்துப் பாடிய புலவர்கள் ... 137
கடியலூர் உருத்திரங்கண்ணனர்பெற்ற பரிசில்... 137
காவிரிப்பூம்பட்டினத்துக் கற்புடையமங்கையர் .. 138—144

ஸ்ரீ:

# இந்நூலுள் எடுத்துக்காட்டிய நூல், பெயர் முதலியவற்றின் குறிப்பு விளக்கம்.

அட்ட—அஷ்டப்பிரபந்தம்
அகத்திணை—அகத்திணையியல்
அகத்தி—அகத்தியப்படலம்
அகப்—நாற்கவிராஜநம்பியகப்பொருள்; ஷை உரை
அகம்—அகநானூறு
அடியார்—அடியார்க்கு நல்லார், அடியார்க்கு நல்லாருரை
ஆற்று—ஆற்றுப்படலம்
இல-கொத—இலக்கணக் கொத்து
இரணி—இரணியவதைப்படலம்
இராச—இராசபாரம்பரியம்
இல-விள—இலக்கணவிளக்கம்
இளம்—இளம்பூரணம், இளம்பூரணருரை
இறை-களவு—இறையனார் களவியல்
இன்னா—இன்னாநாற்பது
இனிது—இனியது நாற்பது
உத்தர—உத்தரகாண்டம்
உ-ம்—உதாரணம்
எ-து—என்பது
ஐங்—ஐங்குறுநூறு
கடவுள்—கடவுள் வாழ்த்து
கந்த—கந்தபுராணம்
கம்ப—கம்பராமாயணம்
கல்லா—கல்லாடம், கல்லாடருரை
கலி—கலித்தொகை

குறள்—திருக்குறள்
குறிஞ்சி—குறிஞ்சிப்பாட்டு
குறுந்—குறுந்தொகை
கொத்து—கதைக்கொத்து
கோவை—திருக்கோவையார்
சங்-சிந்—சங்கசிந்தாமணி
சிந்—சீவகசிந்தாமணி
சிலப்—சிலப்பதிகாரம்
சிறுபஞ்—சிறுபஞ்சமூலம்
சிறுபாண்—சிறுபாணாற்றுப்படை
சூ—சூத்திரம்
சூளா—சூளாமணி
சேனா—சேனாவரையம், சேனாவரையர்
தணிகை—திருத்தணிகைப்புராணம்
திணை மா—திணைமாலை நூற்றைம்பது
திருவி—திருவிளையாடற்புராணம்
திவ்ய—திவ்யப்பிரபந்தம்
தொகை—தொகைப்படலம்
தொல்—தொல்காப்பியம்
நச—நச்சினார்க்கினியம், நச்சினார்க்கினியர்
நன்—நன்னூல்
நன்-வி—நன்னூல்விருத்தியுரை; ஷை உரைகாரர்
நற்—நற்றிணை
நாலடி—நாலடியார்
நான்மணி—நான்மணிக்கடிகை
நீல—நீலகேசித்தெருட்டு
நெடுநல்—நெடுநல்வாடை
பக்—பக்கம்
பதிற்—பதிற்றுப்பத்து
பரி—பரிபாடல்
பரிமே—பரிமேலழகர்

பரிப்பெ—பரிப்பெருமாள், பரிப்பெருமாளுரை
பழ—மொழி
பாட—பாடபேதம்
பி-ம்—பிரதிபேதம
புறம்—புறநானூறு
பெரிய—பெரிய திருமொழி
பெரி-பு—பெரிய புராணம
பெருங—பெருங்கதை
பெரும்பா—பெரும்பாணாற்றுப்படை
பேரா—பேராசிரியம், பேராசிரியர்
பொருந்—பொருநராற்றுப்படை
மணி—மணிமேகலை
மதுரை—மதுரைக்காஞ்சி
மயிலே—மயிலேறும்பெருமாள், ஷை யாருரை
மயிலை—மயிலைநாதருரை
மலைபடு—மலைபடுகடாம்
முருகு—திருமுருகாற்றுப்படை
முல்லை—முல்லைப்பாட்டு
மேற்—மேற்கோள்
யா-கா—யாப்பருங்கலக்காரிகை
யா-வி—யாப்பருங்கல விருத்தி
விக்-உலா—விக்கிரமசோழனுலா
வியா-பா—வியாஸ பாரதம்
வில்லி—வில்லிபுத்தூரார்; ஷையார் பாரதம்
வெண்-மா—புறப்பொருள் வெண்பாமாலை - ஷையுரை

ஸ்ரீ:

# சங்க சிந்தாமணி.

## கடவுள் வாழ்த்து

நலந்திகழ் கல்வியொடு ஞானமும்யான் மேவிப்
பலந்திகழ்ந் துய்யப் பணித்து—மலந்தவிர்த்தே
னெஞ்சி னமர்ந்து நெடிது துயர்தீர்ப்பாய்
கஞ்ச மலராய் கடிது

---

## அத்தியாயம் 1

பொன்னி நாடென்றும், கன்னி நாடென்றும், குடகொங்கு நாடென்றும் மூன்று வகையாகப் பகுக்கப்பெற்று உலகம் புகழ விளங்கிய நம் தமிழ் நாடானது, *படைப்புக்காலந்தொட்டு நீதியே ஆபரணமாகக் கொண்ட சோழர் பாண்டியர் சேரர் என்ற மூவேந்தர்களாலும் ஆளப்பெற்று வந்தது. † அம் மூவேந்தருள் பொன்னி நாட்டு இறைவரான சோழர் அறமே உறுதியெனக் கைப்பற்றித் தம் இராசதானி நகரான

* குறள் 955. பரிமே. "தமிழ்கெழு மூவர்" அகம் 31.
† "வண்புகழ் மூவர் தணபொழில் வரைப்பு"
தொல். பொருள். 391.

உறையூரில் தர்ம சபையை ஸ்தாபித்தார். * கன்னி நாட்டு அரசரான பாண்டியர் கல்வியே தலை சிறந்த தென்று தெளிந்து, தம் தலைநகரான மதுரையில் தமிழ்ச் சங்கத்தை நிறுவினர். † குடகொங்கு மன்னரான சேரர் கொடையே மேம்பட்டதென் றாராய்ந்து, தம் பிராசதானி நகர்களான கருவூரிலும் குழுமூரிலும் பசித்து வந்தோர்க்கு உணவளிக்க அட்டிற்சாலையைச் சமைத்தார். ‡ இவ்வாறு நம் தமிழ் வேந்தர் மூவரும், தமிழகத்தில் அநீதி அறிவின்மை பஞ்சம் என்பன தலையெடா வண்ணம் செய்து, ஓதல் வேட்டல் ஈதல் காத்தல் தண்டஞ்செய்தல் என்ற ஐவகை மரபின் அரச நீதியிற் பிறழாது, விரோதிகளும் புகழுமாறு அரசு நடாத்தி வந்தனர். அம் மூவேந்தருள் கல்விக்குப் பாடுபட்ட பாண்டியர் சரிதையினைக் கூறுவான் தொடங்கி, முதற்கண் அப்பாண்டியர் நிறுவிய தமிழ்ச் சங்கத்தின் தோற்றம் முதலிய வரலாறுகளைக் கூறுவோம்.

ஆதி நல்லூழியாகிய கிருதயுகத்தின் அந்தத்திலே ¶ வடமகாமேருவின் கண்ணே கூடியிருந்த தேவரெல்லாரும் தாம் அவவாறு சேரவிருத்தலினாலே வட

* நற்றிணை 400ஆம பாட்டு; அகம 93ஆம பாட்டு; சிலப்பதிகாரம இந்திரவிழ வூரெடுத்தகாதை அடிகள், 135-8.

† இறை. களவியல் முகவுரை. சிலப். அடியார். உரைப்பாயிரம்.

‡ பதிற். 21; அகம். 168; புறம். 2.

¶ தொல. பொருள். சூ. 154. நச் உரை; ஷை ஷை சூ. 649-பேரா. உரை; சிலப். வேனிற். அடியார, உரை.

திசை நாளுக்கு நாள் தாழ்ந்து, தென்றிசை உயரவாரம்பித்ததுகண்டு, இப் பிறழ்ச்சியைச் சமன் செய்யக்கருதி, தென்றிசைக்கு யாரை யனுப்பினால் காரியம் சித்தியாகுமென்று மனத்திலாராய்ந்து, "அகத்தியனாரே ஆண்டிருக்கத் தக்கார்; அவரை வேண்டிக்கொள்வாம்" என்று முடிவுசெய்து, குறுமுனியை வணங்கி, "நீர் தென்றிசைக்கண் சென்று உலகினைச் சமன்செய்து காக்கவேண்டும்" என்றனர்.*

அகத்தியனாரும் அவர் வேண்டுகோட்படி தென்றிசைக்குப் போகின்றவர், கங்கையாருழைச் சென்று காவிரியாரை வாங்கிக்கொண்டு, யமதங்கி மகரிஷியைக் கண்டு, "முனிச்சிரேஷ்டரே! நான் தென்றிசைக்குச் செல்கின்றேனாதலால், உமது புத்திரருள் ஒருவனை என்னோடு அனுப்பக்கூடுமோ?" என்ன, அவரும், "தேவரெல்லாரும் செய்த தீர்மானப்படி நீர் போகின்றீராதலால், நான் உமக்கு உதவி செய்யக் கடமைப்பட்டுள்ளேன்; எனது குமாரன் திரணதூமாக்கினியை நீர் அழைத்துப் போகலாம்" என்று அவரைக் கொடுத்தார். இவர்க்குத் தொல்காப்பியர் என்று தமிழ் நாட்டிற் பெயர்.

அத் திரணதூமாக்கினியாரைப் பெற்றுக் கொண்ட பிறகு, அவ்வகத்தியனார் புலத்தியனாரிடஞ் சென்று, தாம் தென்றிசைக்குப் போதலைத் தெரிவிக்க, அவர் மிகக் களித்து, "நீர் வடதிசைக்குப் பேருபகாரம் செய்கின்றீராதலால், உமக்கு நானும் இயன்றவரை

---

* தொல். பாயி. நச. உரை. 'மன்னியசிறப்பி' னென்னும் பாட்டு வெண்பாமாலைச்சிறப்புப்பாயிரம்.

உதவி புரிகின்றேன்; என்னுடன் பிறந்தாளான உலோபா முத்திரையை நீர் மணந்துகொண்டு செல்லும்'' என்று அவளை நீர் வார்த்துத் தந்தார்.

பெற்றுக்கொண்ட அகத்தியனார், "ஓ! புலத்திய னாரே! நான் முன்பின் அறியாத் தேயம் செல்கின்றே னாதலால், ஆங்கு இவளை இப்போதே உடன் கொண்டுபோதல் உசிதமன்று; ஆங்குச் சென்று இடம் பொருள் ஏவல்களைச் சம்பாதித்துக்கொண்டு பிறகு அழைத்துப் போகிறேன்; அதுகாறும் உமது வசமே இவளிருக்கட்டும்'' என்று, அவ் வுலோபா முத்திரையை (இவளுக்குக் குமரி என்று தமிழ் நாட்டிற் பெயர்.) அங்கே நிறுத்திவிட்டுத் துவராபதிக்குச் சென்றார். அங்கே நிலங்கடந்த நெடுமுடியண்ணல் வழித் தோன்றிய பதினெண்குடி அரசரையும், பதினெண் குடி வேளிரையும், அருவாளர் முதலிய பிற படைத் தலைவரையுங் கூட்டிக்கொண்டு தென்திசை வந்து சேர்ந்தார்.

அக்காலத்தே அப் பாகத்தை இராவணனென்னு மரக்கன் தன் இராக்கதப் பெரும்படையுடன ஆண்டு வந்தான். அவன் அக் குறுமுனியோடு வந்த அரசர் வேளிர் முதலியோர் தன் குலப்பகைவராகிய தேவர் மரபினரெனக்கண்டு, மிகச் சினந்து, போர் தொடுக்கும் எண்ணத்தை முதலிற் கொண்டானேனும் பின்பு அவ்வெண்ணத்தைச் சட்டென விட்டொழித்து, அகத் தியனாரை நோக்கித் தர்மம் பேசுவான்போல, "முனி வரே! இப் பிரதேசத்தைப் பன்னெடுங் காலமாக யான் அடிப்படுத்து ஆண்டுவர, இன்று நீர் இங்குப் பிரவேசிப்-

பது நியாயமன்றே'' என்றான். அதற்கு அக் குறுமுனி, ''நாடு முதலியன வலியான் மிக்கார்க்கே உரியவாகின்றன. என் வன்மையினால் இப் பிரதேசத்தைக் கைக்கொள்ளத் துணிந்தேன்'' என்றார்.

கேட்ட இராவணன் அவ்வகத்தியர்க்குத் துணை வலி மிக்குள்ளதையோர்ந்து, போரினால் அவரை வெல்ல வொண்ணா தெனத்தெளிந்து, தனது சங்கீதவன்மையால் அவரை வென்று துரத்த எண்ணி, ''முனிவரே! நீரோ படை எடாத தவசி; யானோ 'விழுப்புண் படாத நாளெல்லாம் வழுக்கினுள் வைத்' தெண்ணும் அமர்வெய்யோன்; நீயிரும் யானும் போர்க்கருவிகளால் வன்மையைக்காட்டுதல் ஒத்த தன்று. உமக்கு இசைபாட வருமென்று அறிவேன்; எனக்கும் அதனிற் சிறிது தேர்ச்சியுண்டென்று சொல்லுவேன்; இருவேமும் அவ்வித்தையில் நம சக்தியைக்காட்டி வென்றார் இப்பிரதேசத்தை யாளவும், தோற்றார் இதனைத் துறந்து ஏகவும் உடன்படுவோம்'' என்றான்.

கேட்ட குறுமுனி அதற்கு உடன்பட்டு, முதலில் இராவணனை யாழ்கொண்டு மிழற்றச்சொல்ல, அவன் அது கொண்டு கானஞ்செய்தவளவில், புள் விலங்கு முதலியன கேட்டு அப்படியே ஸ்தம்பித்து நின்றுவிட்டன. அதை அகஸ்தியர் கண்டு புன்முறுவல் செய்து, தாமும் யாழ்கொண்டு கந்தருவ இசைபாட, புல் மரம முதலியன தளிர்த்தன. பொதியில் மலை உருகியே விட்டது. *கண்ட இராவணன் நாணித் தலைவணங்கி, நின்றான்..

---

* தஞ்சைவாணன். 345ஆம் பாட்டும் உரையும்.

அவ் விராவணனைக் கந்தருவத்தாற் பிணித்த குறுமுனி, இராக்கதர் எவரையும் ஆண்டு இயங்காமை விலக்கி, * ஆங்கே மண்டிக்கிடந்த பெருங்காடுகளை அழித்து, நாடுகளாக்கி, அவ்வரசர் பதினெண் குடியினரையும், பதினெண்குடி வேளிரையும குடியேற்றினார். பின்பு அம்மகரிஷி தமக்கு இருந்து தவஞ்செய்ய எவ்விடம் ஏற்றதென்று ஆலோசிக்கையில், பொதியில் மலை சிறந்ததென்று கண்டு, அங்கு ஆச்சிரமம் நிருமித்துக் கொண்டார். அங்குத் தொல்காப்பியனார் பனம்பாரனார் காக்கைபாடினியார் சிகண்டியார் அதங்கோட்டாசிரியர் முதலிய பலமாணாக்கருக்குத் தமிழ் கற்பித்துப் பெரும் புலவராக்கினார் †

இவ்வளவும் ஆனபின்பு, அவர் தமது மனையாளை யழைத்துவரக் கருதித் தமது சீடருள் முதன்மை வாய்ந்தவரான தொல்காப்பியனாரை அழைத்து, "நீ வடநாடு சென்று, புலத்தியனாருக்கு அறிவித்து, எனது மனையாளை இங்கு அழைத்துவருக" என்று கட்டளையிட்டார். அப்போது தொல்காப்பியனார், "ஆசாரியரே! நான் தனியாக எம்பெருமாட்டியை எவ்வாறு அழைத்து வருவேன்?" என, அவர், "உனக்கும் அவளுக்கும் முன்னாலேயோ பின்னாலேயோ பக்கமாகவோ நாற்கோல் தூரமிருக்கும்படிச் செய்துகொண்டு அழைத்து வருக" என்றார்.

அவ் வாணைப்படியே தொல்காபபியனார் நாடு மலையாறு முதலியவற்றைக் கடந்து, புலத்தியனாருழைச்

---

* மதுரைக. அடி 40—41.

† கம்பரா. கிட்கிந். நாடவிட்ட. 33.

சென்று, அகத்தியனார் உத்தரவை விண்ணப்பஞ்செய்ய, அவர், "அழைத்துப்போகலாம்" என்று அனுமதி கொடுத்ததன்மேல் உலோபா முத்திரையாரைத் தம் குருமொழிந்த நியமப்பிரகாரம் நெடுந்தூரம் அழைத்து வந்துவிட்டார்.

எல்லா நாடுங்கடந்து பாண்டிநாட்டினிடையே வருகையில், வையையைக் கடந்து செல்லவேண்டிய தவசியமாதலால், இருவரும் அதில் இறங்கினார்கள். இறங்கி நட்டாற்றில் வரும்போது, நீர் பெருகிக் கடுவிசை கொண்டு குமரியாரை நெடுந்தூரம் இழுத்துக்கொண்டு போய்விட்டது. தொல்காப்பியனார் என்னசெய்வார்? எவ்வாறு தம் ஆசாரியர் பத்தினியைக் காப்பார்? அவளைத் தொட்டிழுத்தன்றோ கரையேற்றல்வேண்டும்? கரையேற்றாது விட்டாலும் ஒரு ஸ்திரீயைக் கொன்ற பாவமன்றோ அவரைச் சூழ்ந்துகொள்ளும்!

இந்தத் தர்ம சங்கடத்தில் அவர் சிறிது ஆலோசித்து, அருகிலிருந்த ஒருமூங்கிற்கோலை முறித்து நீட்டினார். நீட்டவே குமரியார் அதைப் பற்றிக்கொண்டு கரையேறினார். அதன் பின்பு இருவரும் பொதியில் மலையை அணுகி, அகத்தியர்பாற் சென்று நமஸ்கரிக்க, அவர் தொல்காப்பியனாரை நோக்கி, "நீ நான் சொன்னவாறே செய்து அழைத்து வந்தனையா?" என்றார். அதற்குத் தொல்காப்பியனார், "எம்பெரும! தங்கள் ஆணைப்படியே இப் பாண்டிநாடு வருமளவும் நடந்து வந்தேன்; வையையில் இறங்கினவுடன் நீர் கடுகி எம் பெருமாட்டியை ஈர்த்துக்கொண்டு போயிற்று; அப்போது நான் ஒருமூங்கிற்கோலை முறித்து நீட்டினேன்.

அது பற்றி எம்பெருமாட்டி கரையேறினர்; இச்செயல் தங்கள் கட்டளையைக்கடந்ததே; ஆயினும் அப்படிச் செய்யவேண்டியது ஆவசியகமாயிற்று'' என்றார். கேட்ட அகத்தியனார் மிக்க கோபங்கொண்டு, "ஓ! தொல்காப்பியா! நான் உனக்கிட்ட உத்தரவென்ன, நீ செய்ததென்ன? இவள்தான் எப்படிப் பிறனொருவன் உதவியைப்பெற்றுக் கரையேறுவள்? நீவிர் இருவீரும் செய்தது பெரும்பிழை; நீவிர் இருவீரும் சுவர்க்கம் புகாப்பீர்'' என்று சபித்துவிட்டார்.

கேட்ட தொல்காப்பியனார் தாமும் மிக வெகுண்டு, "ஒரு குற்றமுஞ் செய்யாது, ஆபத்துக் காலத்தில் செய்யத்தக்கது எதுவோ அதனைச் செய்த எம்மை அநீதியாகச் சபித்தமையால், நீவிரும் சுவர்க்கம் புகாப் பீர்'' என்று பிரதி சாபங் கொடுத்துவிட்டார். இவ்வாறு அவ்விருவர்க்கும் பெரும் பகையுண்டாகி, இருவரும் பிரிந்தனர். அகத்தியர் பொதியில மலையிலேயும் தொல்காப்பியனார் பனை நாட்டிலேயும் சென்று தவம் செய்வாராயினர்.

அக்காலத்திலே * பாண்டி நாட்டிலே காய்சின வழுதி என்று ஓர் அரசன் ஆண்டுவந்தான். அவன் தமிழில் மிக்க விருப்பமுடையவன். பெரியோர்களிடத்தும் பெரிதும் விசுவாசமுடையவன். அவன் பொதியில் மலையை அணுகிப் பெருந்தவசியான அகத்தியரைக் கண்டு நமஸ்கரித்து, "சுவாமீ! தேவரீர் ஆரிய பாஷையில் மிக்கத் தேர்ச்சிபெற்றவர் என்பது உலகப் பிரசித்தம்; அஃதோடும் தமிழும் சிவபெருமான்பாற்

* இறை. களவு. மூகவுரை.

கற்றுத் தேர்ந்துள்ளீர்* என்று கேள்வியுற்றிருக்கிறேன். ஆதலால் நீவிர் என் அவைக்குப் போந்து தமிழிற பல நூல்கள் செய்யவேண்டும்; மகரிஷியாகிய தேவரீரால் இத் தமிழ் எடுத்தாண்டு நூல்கள் செய்யப் பெறுமானால், தேவ பாஷையாகிய வடமொழியோடொப்ப இதுவும் சிறந்தோங்கி, தேவார்கமாக விளங்குமன்றோ? ஆதலால் தேவரீர் இன்றே என் சபைக்குப் போந்தருள்க" என்று வேண்டிக்கொண்டான்.

கேட்ட அகத்தியர், "திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுளானசிவபெருமான் அறிவுறுத்தியதேயாகும் இத் தமிழ்; இஃதும் ஆரியபாஷையை யொப்பத் தேவார்கமானதே. இத்தமிழில் நூல்கள் செய்யவும் அச்சிவ பெருமான் பால் எனக்குக்கட்டளை பிறந்துளது. நான் உன் அவைக்குவந்து தமிழ் கற்றூர்பலரோடும் கூடி, நூல்கள் இயற்றுவேன். நீ உன் நாட்டிலுள்ள தமிழ் வித்வான்கள் எல்லாரையும் கூட்டு. சங்கம் என்று அதற்குப்பெயர் நாட்டு" என்றூர். கேட்ட பாண்டியன் பெரிதும் களித்து, அவ்வாறே செய்கிறேன் என்று போய்ப் பல தமிழ்ப் புலவர்களைக் கூட்டினன் அவ்வாறு காய்சின வழுதியாற் கூட்டப்பட்ட புலவர்கள் கூடிய சபைக்குத் "தலைச்சங்கம்" என்று பிற்காலத்துப் பெயர் வழங்கலாயிற்று. அச்சங்கத்தே சிவபெருமானும் முருகவேளும, முரஞ்சியூர் முடிநாகராயரும், நிதியின் கிழவனும், பிறரும் அககாய்சின வழுதியின் வேண்டுகோளுக்கு உடன்பட்டு வீற்றிருந்தனர். அகத்தியரும் தம்மை யொத்த இருடிகளிற் பலரை அத் தலைச்சங்

* கம்பராமாயணம் ஆரணியகாண்டம அகத்தியப்படலம்.

41. தொல். சொல். சேனவரையர்பாயிரம்.

கத்தே சேர்த்திருந்தார். அவருள் மார்க்கண்டேயனார், கௌதமனார், வான்மீகனார் முதலிய பலர் பலபல நூல்களியற்றித் தமிழ் மக்கட்குப்பெரு நன்மை செய்தனர். பாண்டிய அரசருள்ளும் ஏழுபேர் கற்றுத் தேர்ந்து, பெரும் புலவராய் அச் சங்கத்தே திகழ்ந்தனர். அவ்வெழுவரும் தத்தம் பெயரான காவியங்களியற்றிப் பெருமையுற்றனர். அவ்வெழுவரையும் கவியரங்கேறிய பாண்டியர் என்றல் மரபு. அவருள் "நிலந்தரு திருவிற பாண்டியன்" என்னும் சிறப்புப்பெயரையுடைய சயமாகீர்த்தி என்ற பாண்டியன் தமிழிற் பெரும் புலவனாய் இருந்ததோடு, அறிவு, நிறை, ஓர்ப்பு, கடைப்பிடி, நடு நிலைமை, ஈகை என்ற பல குணங்களாலும் மாட்சிமைப்பட்டு விளங்கினான்.

அவன் புத்தியும், சௌரியமும், சொல்வன்மையும் எவ்வுலகத்தும் பிரசித்தியாயிருந்தன. ஒரு காலத்துத் தேவர்க்கும் அசுரர்க்கும் போர் நிகழ்ந்தபோது, அவ்விருவரும் அம்மாகீர்த்தியைத் தமக்குக் காரணிகனாக வைத்து, அவன் சொற்படி நடப்பதாய் ஒப்புக்கொண்டனர். அப்போது அப்பாண்டியன் தெய்வலோகஞ் சென்று இருதிறத்தார் வழக்கையும் கேட்டு, இருவர் மேலும் பிழையுள்ளதென்று அவர்க்கு அறியக்காட்டி, நீவிர் இருவீரும் பிழைத்துள்ளீர்; ஆதலால் ஒருவீர் ஒருவீரோடு போர் தொடுத்தல் அறமாகாது. இருவீரும் போரொழிதல் வேண்டும். நும் இருவீருள் ஒருவீர் ஒருவீர் மிகை செய்தாரை யானே சென்றொறுப்

* தொல். பொருள். சூ. 75 நச். உரை.

பல்'' என்று கூறினன். அவனாணையைக்கேட்ட தேவரும் அசுரரும் அஞ்சி அடங்கி நின்றனர். *

இப்படியாகத் தெய்வலோகத்திலே நம் மாகீர்த்தி மேம்பாடுற்று, இந்திரனும் பிறரானும் உபசரிக்கப் பெற்றுச் செம்மாந்திருப்பப் பூவுலகின்கண்ணே தமிழ் மக்களாகிய நாம் செய்த தௌர்ப்பாக்கியத்தால் கடல் பொங்கிப் பாண்டிநாட்டின் தென்பகுதியாகிய பனை நாட்டை அழித்து விட்டது. அதன் தென் எல்லை பஃறுளியாறு. அது தென்பாலி எனப்படும் நாட்டிற்கு வடவெல்லையாம். அக்கடல் கோளிற் பாண்டி நாட்டின் கண்ணுள்ள குமரிக்கோடு முதலாகப் பஃறுளியாறு ஈறாக எழுநூறு காத பிரதேசமும், † தென் மதுரையும், ஆண்டு நிறுவப்பெற்றிருந்த தலைச்சங்கத்தினோடு அச்சங்கத்திற் றோன்றிய பல பல நூல்களும் அழிந்தொழிந்தன. அப்போதிருந்த பாண்டியன் கடுங்கோன் என்பான். அவனும் அக்கடல் கோளில் இறந்தான் போலும்.

அதனால் அகத்தியரும் பிற இருடிகளும் வருந்தித் தத்தம் இருப்பிடஞ்சென்று தவமுயல்வாராயினர். சில காலத்திற்குள் அக்கடுங்கோனது சந்ததியில் வெண்டேர்ச்செழியன் என்றொரு பாண்டியன் தோன்றினன். அவன் தமிழில் மிகவும் விருப்பமுடையவன். அவன் பொதியிலையடைந்து அகத்தியரை வணங்கி, மறுபடியும் ஒரு சங்கத்தைக் கூட்டவேண்டு மென்றான். அவர்

---

* இறை. களவு. சூ. 36 உரை.

† ஷை சூ. 1. உரை. சிலப். வேனிற். நாடுகாண். தொல். பொருள். 649. பேரா. உரை.

அதற்குடன்பட்டுக் கபாடபுரத்திற் புதியதாய் ஒரு சங் கத்தைக் கூட்டுமாறு பணித்தார். அவ்வாறே அவன் அக்கபாடபுரத்துப் பல புலவரை வருவித்துத் தமி ழாராயுமாறு செய்தான். அதற்குஇடைச்சங்க மென்று பிற்காலத்துப் பெயர் வழங்கிற்று. அச்சங்கத்தும் அகத்தியர் தலைமைப்புலவராய் வீற்றிருந்தார். அவ ரோடு வீற்றிருந்த மற்றப்புலவராவார் இருந்தையூர்க் கருங்கோழி மோசியார், வெள்ளூர்க்காப்பியனார், சிறு பாண்டரங்கனார், மதுரையாசிரியன் மாறனார், துவரைக் கோமான், கீரந்தையார் என்பார் முதலாக ஐம்பத் தொன்பதின்மரென்பார்.*

நிற்க, அகத்தியரோடு முரணித் தனித்துச் சென்ற தொல்காப்பியர் தவஞ்செய்து கொண்டிருந்தனரென முன்னம் கூறினோம். அத்தொல்காப்பியர் தம் ஆத்ம லாபம் ஒன்றனையுமே கருதினரல்லர். அவர் தாம் உறைந்த தமிழ்நாட்டின் பகுதியையும், வடவேங்கடம் தென்குமரி† என்ற ஈரெல்லைக்கும் குணகடல் குடகடல் என்ற ஈரெல்லைக்கும் இடைப்பட்ட தமிழ் கூறும் நல் லுலகத்து வழக்கையும் செய்யுளையும் பன்முறை நன்கு ஆராய்ந்து, முன்னோர் நூலுக்கு மாறுகோளின்றி, எழுத்து சொல் பொருள் என்னும் முறைமையோடு ஐந்திர வியாகரணத்தையும் ஒருபுடை தழுவி ஓரிலக்க ணஞ் ‡ செய்திருந்தார். அவ்விலக்கணம் அகத்தியர் செய்த அகத்திய மென்னும் இலக்கணத்தினும் மிகச் சிறந்து கற்றோர் யாவரானும் மெச்சத்தக்கதாய் விளங்

* இறை. களவு. சூ. 1. உரை. † இது குமரியாறு.

‡ தொல், பாயிரமும். நச். உரையும்.

கிற்று. இந்திரன்கூட இவ்விலக்கணம் தன் கருத்துக்கு ஒரு புடை ஒத்திருத்தலை நோக்கிப் பெரிதும் கொண் டாடினன். இஃதிப்படியாகத் தேவலோகத்திற்குத் தேவாசுரர் காரியமாகச் சயமாகீர்த்தி என்பான் சென் றிருந்தனனென முன்னம் கூறினேமல்லவா? ஆங்கு அவனுக்குப் போன காரியங்கள் முடிந்ததும் இந்திர னோடு அவன் அளவளாவிக்கொண்டு அவன் மாளிகை யான வைசயந்தத்தில் இன்புற்றிருக்கையில், கபாடபுரத் துள்ள சங்கத்தின் பிரஸ்தாபம் வந்தது அப்போது இந் திரன் தொல்காப்பியர் இயற்றிய இலக்கணத்தின் ஒரு பகுதியை எடுத்துக் கூறினன். அதனைக்கேட்ட நிதி யின் கிழவனான குபேரனும், முருகக்கடவுளும் பிறரும் பெரிதும் கொண்டாடினர். சயமாகீர்த்தியும் மிகவும் திருப்தியடைந்தான். தான் தன் நாட்டிற்குத் திரும்பிய வுடன் தொல்காப்பியரைக்கண்டு அவரைச் சங்கத்தில் வீற்றிருக்குமாறு வேண்டுவதோடு, அவர் செய்த இலக் கண நூலை அரங்கேற்றுமாறு வேண்டுதலும் தன் முதற் கடமையாகும் என்று தீர்மானித்துக்கொண்டான்.

இதனிடையில் கபாடபுரத்தில் சங்கத்தே இருந்த அதங்கோட்டு ஆசிரியரை நம் தொல்காப்பியர் ஒரு நாட் கண்டு, "ஆசிரியரே! இச்சங்கத்து என் இலக்கண நூல் அரங்கேறுமாறு செய்தல்வேண்டும். அகத்தியர் என் நூல் புலப்படுதலை விரும்பார்" என்று வேண்டி னர். அதற்கு, அவர், "ஆகட்டும்; பின் பொருநாட் செய்யலாம்" என்ன, இதனை அறிந்த அகத்தியர் அதங் கோட்டு முனிவர் பாற்சென்று, "நீ தொல்காப்பியன் நூலைக் கேளற்க. யான் உனக்கு ஆசிரியன் என்பது னையு மறவற்க" என்றார்.

அதங்கோட்டாசாற்கு இன்னது செய்வதென்று புலப்படவில்லை. தொல்காப்பியர் பன்னூளும் சென்று கேள் கேள் என வேண்டவும், அகத்தியர் கேளற்க என ஆணையிடவும், அவர் "இருதலைக்கொள்ளி இடைநின்று வருந்தி ஒருதலைப்படா" எறும்புபோல மனம் கலங்கினர். இருமுனிவர்களும் பெருங்கோபமுடையராதல் நோக்கிச் சபிப்பரோ எனவும் அஞ்சினர்.

இக்காலத்தே *இடைச்சங்கத்தை நிறுவியவெண்டேர்ச்செழியன் காலகதியால் சுவர்க்கஞ் சென்றான். தமிழ் மக்களாகிய நாம் செய்த நல்வினைப் பெரும்பாக்கியத்தால் தேவலோகத்திலிருந்தும் மாகீர்த்தி திரும்பினன். திரும்பியவன் முதன் முதலாகத் தொல்காப்பியரைக்கண்டு, "நீர் செய்த இலக்கணம எங்கே! அதனை நான் காண ஆவலுற்றிருக்கிறேன்" என்று கேட்டு வாங்கி, முற்றும் படித்துப்பார்த்தான். அவனுக்கு உண்டான மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. "நீரேன் இத்தனை காலமாக இந்நூலைஉலகிற்குத்தந்து தமிழ் மக்களை உய்யக்கொள்ளவில்லை?" என்றான்.

அதற்குத் தொல்காப்பியர் தமக்கும் அகத்தியற்குமுள்ள பழைய பகைமையையும், அப்போது அதன் மூலமாக நடந்துள்ள சம்பவத்தையும் கூறினர். உடனே மாகீர்த்தி அரசன் அதங்கோட்டாசிரியர்பாற் சென்று, "முனிவரே! தொல்காப்பியர் நூலில் சிறிது குற்றம் காணப்படினும் நீர் அதனைத் தள்ளிவிடலாம். அஃதே அறமன்றி, அதனைக்கேளாதிருத்தல் முறையா

* இஃது இரண்டாவது ஊழியினிறுதியாகிய இராமபிரான் திருவவதரித்த காலம். தொல். பாயி. நச். உரை.

காது. ஆதலால், நீர் நாளையே சங்கத்தில் அதனை வருவித்துக் கேட்டருள்க'' என்று வேண்டினான்.

அதற்கு அதங்கோட் டந்தணர். "இருவரும் வெகுளாமைத் தொல்காப்பியன் நூலிற் குற்றங்கூறி விடுவல்'' எனக்கொண்டு, "அரசே! அவ்வாறே செய்வேன்'' என்று, பிற்றைஞான்று சங்கத்தில் அகத்தியர் பனம்பாரர், சிகண்டியார் முதலிய பல்லோர் முன் மாகீர்த்தி கேட்டிருப்பத் தொல்காப்பியர் இலக்கணத்தைக் கேட்டார்.

கேட்கின்றவர் அகத்தியற்கு முகோல்லாச முண்டாகும் வண்ணம் தொல்காப்பியத்து ஒவ்வொரு சூத்திரத்தும் ஆக்ஷேபனைகள் பலபல வெழுப்பினர். தொல்காப்பியரோ அத்தனைகட்கெல்லாம சிறிதும் பின்வாஙகாது, குற்றந்தீர விடைகொடுத்து, அகத்தியரும் வியக்கும் வண்ணம் தம் கோள் நிறீஇயினர்.

கேட்டிருந்த சயமாகீர்த்தி முதல் பல்லாயிரம்புலவரும் ஆனந்த பரவசராகித் தொல்காப்பிய ரிலக்கணத்தை அகத்தியததை ஒப்ப வேதம்போலப்பிரமாணநூலாகக்கொண்டனா. அன்று தொட்டு அஃது அவ்விடைச்சங்கத்திறகு இலக்கணமாயிற்று. மாகீாத்திநம் தொல்காபபியரைப் பெரிதும் கௌரவித்தான். இவனுக்குப்பிறகு, அவ் விடைச்சங்கத்துக் கவி அரங்கேறிய பாண்டியர் ஐவருள அநாகுலனும் அவன் மகன் சாரகுமாரனும் * அச் சங்கத்தை வளர்த்துவந்தனர். அந்தச் சாரகுமாரன் அநாகுலனுக்கு ஊர்வசி வயிற்றிற்

* சிலப்; அடியார்க்; உரைப்பாயிரம்.

பிறந்தவன். அவ் வநாகுலன் தெய்வசக்தி வாய்ந்த வனாய், விமானத்திடை ஆகாயமார்க்கத்தே செல்லு கையில், ஆண்டுச் சஞ்சரித்துக்கொண்டிருந்த ஊர்வசி யைக்கண்டு விரும்பிக் கூடியகாலத்துச் சனித்தான். விமானம் சரியாநின்றாழிச் சனித்தமையின் அவனுக் குச் சாரகுமாரனென்று பெயராயிற்று. அச் சார குமாரனுக்கு ஆசிரியர் சிகண்டி என்ற ஒரு முனிவர். இவர் அகத்தியர் சீடருள் ஒருவர். இவர் தம் மாணுக்க னை அச் சாரகுமாரன் இசையறிதற் பொருட்டு இசை நுணுக்கம் என்னும் ஒரு நூலை யியற்றினர். அகத்தியர் சீடருள் பன்னிருவர் பிரசித்தராக விளங்குகின்றனர். அவர் தொல்காப்பியர், அதங்கோட்டு ஆசிரியர், துரா லிங்கர், செம்பூட்சேஎய், வையாபிகனார், வாயப்பிய னார்,* பனம்பாரனார், கழாஅரம்பனார், அவிநயனார், காக்கை பாடினியார், நற்றத்தனார், வாமனனார் என்பர்.

இப் பன்னிருவருஞ் சேர்ந்து செய்த நூல் பன் னிரு படல மெனப்படும். இப் பன்னிருபடலமும் மாபுராணமும் பூதபுராணமும் இசை நுணுக்கமும் அக் காலத்துப் பெரு நூல்களாய் விளங்கின. அவையனைத் தும் கபாடபுரம் அழிந்தபோது கூடவே அழிந்தொழிந் தன. அவற்றுட்சிற்சில பகுதிகளே பண்டை உரை யாசிரியர்களாகிய அடியார்க்கு நல்லார், நச்சினார்க்கினி யர் முதலியோருக்கு அகப்பட்டன. அச்சிறு பகுதியும் நமக்கு இப்போது கிடைத்திலது. அதனால் நாம் அக் கால வழக்க ஒழுக்கங்களையும் சரிதைகளையும் அறிந்து கொள்ள இயலவில்லை.

---

* வாய பேயனார் என்றும் பாடம்.

இனி, இக் கபாடபுரத்துச் சங்கமாகிய இடைச் சங்கம் அழிந்து, இப்போதுள்ள மதுரையில் முடத்திருமாறனால் மூன்றாவதாகச் சங்கம் நாட்டப்பெற, அதனில் சிறு மேதாவியார் சேந்தம்பூதனார் அறிவுடையரனார்,பெருங்குன்றூர்கிழார், இளந்திருமாறன்,மதுரையாசிரியர் நல்லந்துவனார், மதுரை மருதனிளநாகனார், கணக்காயனார் மகனார் நக்கீரனார் முதலிய நானூற்று நாற்பத்தொன்பதின்மர் கூடினர்.

பாண்டிய அரசருள்ளும் மூவர் இச் சங்கத்துக் கவியரங் கேறியவராய்த் திகழ்ந்தனர். அம் மூவருள் மதிவாணனார் என்பார் ஒருவர். அவர் ஒரு நாடகத் தமிழ் நூல் இயற்றினார். மற்றை யோராலியற்றப்பட்டன முத்தொள்ளாயிரமும், கூத்தும், வரியும், சிற்றிசையும், பேரிசையும் ஆம்; தொகுக்கப் பெற்றன நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, பரிபாடல், கலித்தொகை, அகநானூறு, புறநானூறு என்ற எட்டுத் தொகையும், திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, பெரும்பாணாற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, முல்லைப்பாட்டு, மதுரைக்காஞ்சி, நெடுநல்வாடை, குறிஞ்சிப்பாட்டு, பட்டினப்பாலை, மலைபடுகடாம் என்பன அடங்கிய பத்துப்பாட்டும், நாலடியார் இனியதுநாற்பது, இன்னாநாற்பது, கார்நாற்பது, களவழிநாற்பது, ஐந்திணையைம்பது, ஐந்திணையெழுபது, திணைமொழியைம்பது, திணைமாலை நூற்றைம்பது, திருக்குறள், திரிகடுகம், ஆசாரக்கோவை, பழமொழி சிறுபஞ்சமூலம், முதுமொழிக்காஞ்சி, ஏலாதி, கைந்நிலை என்பன அடங்கிய பதினெண் கீழ்க்கணக்கும் பிறவுமாம்.

இனி இந் நூல்களுள் பல நமக்குக் கிடைத்தலி ஞல் நம் தமிழ் நாட்டின் வழக்க ஒழுக்கங்களை அறிந்து அதன் சரிதையிற் சில கூறப்புகுவாம்.

## அத்தியாயம் 2

இந்நூலின் தொடக்கத்தில் சேரர் கொடையே மேம்பட்டதென்று கருதி, அன்னதானம பூமிதானம் முதலிய பல தானங்களைச் செய்து வந்தனரென்று சொன்னேம். அதற்குச் சான்முக அச்சேரர்களிற் சிலர் சரிதையை ஈண்டுக் கூறுவோம். நாம் நூல் களால் அறிந்த சேரர்களில் மிகப் பழைய சேரன் பேர் உதியஞ்சேரல் என்பது. இவன் சந்திர சூரியர் கள் திசை மாறினும், வேதம் நெறி பிறழ்ந்தாலும் தன் மொழியிற் பிறழாத வாய்மையோன்.* இவனே குழுமூரில் அன்னசத்திரம் ஸ்தாபித்து யார் எந் நேரத்து வந்தாலும் உணவளித்து வந்தான். அந்தச் சத்திரத்தில் அகோராத்ரம் சமைக்கப் பெறும் சோற் றலையின் முழக்கம் மலையருவியின் முழக்கம் போல இடையரு முழங்கிக்கொண்டிருக்குமெனப் புலவர் புகழ்ந்திருக்கின்றனர். மற்றும் இவன் பிறர்நாடு களை வென்று, தன் குலத்திலுள்ள பெரியோர்க்கு ஈந்து புறந்தந்து வந்ததோடு, அவர் துறக்க மெய்திய பின்னர், அவர்க்குப் பிண்டக் கிரியைகளும் மிக்க விசேஷமாகச் செய்தவன்.†

* பதிற். 2 ஆம் பத்து, பதிகம்.

† அகம். 65, 168, 233.

இவனுக்கு 'வானவரம்பன்' என்றும் சிறப்புப் பெயரும், * இவன் குடியினரான சேரரெல்லாருக்கும் வானவர் என்ற பொதுப்பெயரும் நூல்களில் வழங்கப் படுகின்றன. இவ்வாறு சேரரெல்லாரும் அப்பெயரால் வழங்கப்பட்டதற்கு அவர் வானவர் (தேவர்) மரபின ராதல் வேண்டுமே. அவர் அம்மரபினர்தாமா என்று ஆராயப்புகுவோமாயின், அவர் அகத்தியனூரால் துவரா பதியினின்றும் கொண்டு போந்து தென்னாட்டில் நிறு வப்பெற்ற நிலங்கடந்த நெடுமுடியண்ணல்வழித்தோன் றிய அரசர்களும் அவர் வழித்தோன்றல்களு மாதல் வேண்டும்.

அஃதெவ்வாறாயினு மாகுக; அவன் கோல்கோ டாது அரசு நடாத்திவருங்காலத்தில் அவனை வெல் லக்கருதிய வேற்றுப்புலத்தரசர், வஞ்சியாது எதிர் நின்று பொரமாட்டாது, அவனுடைய மந்திரி பிரதானி முதலியோருக்கு இரகசியத்தில் பொருள் கொடுத்துத் தம் வசமாக்கிக்கொண்டு,தம் மெண்ணத்தை முடித்துக் கொள்ளச் சீர்த்தவொரு காலத்தை எதிர்பார்த்திருந்தனர். அவ்விஷயத்தை மிகத்தந்திரமாய் அறிந்துகொண்ட "நாகராயர்" என்ற ஒரு புலவர், ஒரு நாள் அவ்வுதி யன் சேரலின் அவைக்களம்போந்து, "வேந்தே! நீ மிக்க நுண்ணறிவுடையாய்; நின்மந்திரி பிரதானி முதலியோர் நின்பால் அன்புதிரியாதவராக இருக்கும் படி செய்துகொண்டு, க்ஷேமமாக வாழ்க" என்று குறிப் பாகச் சொல்லிவிட்டுப்போனார். இப்புலவர் முரஞ்சி யூர் என்னும் ஊரினர். இவரை முரஞ்சியூர் முடிநாக ராயர் என்றல் மரபு. இப் பெயர்க்குக்காரணம் இவர்

* அகம். 359, 389, புறம் 2.

தம்முடியில் நாகத்தை யணிந்திருந்தனர் போலும். அன்றி நாகத்தினை முடியிலணிந்த சிவபெருமான் பெயர் இவருக்கு இடப்பட்டது எனினும் பொருந்துவதே யாம்.*

கேட்ட சேரலன் தான் தன் பகைவர்க்கு அஞ்சி ஜாக்ரதையாயிருந்து வருவதற்கு ஏற்ப இப்புலவர் கூற்றும் மனத்திற் புதிய எண்ணத்தையுண்டாக்க, அவன் தக்க சமயத்தில் தனது† ஐம்பெருங்குழுவையும் எண் பேராயத்தையும் நாடு முதலியன கொடுத்தலினாலும், ஏனாதி, காவிதி முதலிய பட்டஞ் செறித்தலானும் தன் வசமாக்கிக்கொண்டு, மாற்றார் சூழ்ச்சி பயனறுமாறு செய்து விட்டான். அதனால்அவன் எல்லா அரசரினும் வலியிலும் செல்வத்திலும் மிக்கோனாகி, வடநாட்டிலுள்ள அரசர்களாலும் நன்குமதிக்கப்பெற்றான்.

ஒருகாலத்திலே குருக்ஷேத்திரத்திலே நடந்தபாரதப்போரிலே பாண்டவர் துரியோதனாதியர் என்ற இருதிறத்துப் படைகளுக்கும் அவன் உணவளிப்பதாக ஒப்புக்கொண்டு, அவ்வாறே சலிப்பின்றி உணவளித்து இருதிறத்தாராலும் புகழ்ப்பெற்றான். ‡

---

* புறம். 2. தொல. பொருள். சூ. 91. நச. உரை. இவர் கடைச் சஙகத்திருந்த ஒரு புலவா; தலைச சஙகத்தும் இப் பெயரினர் ஒருவருணடு.

† அவை: 'அமைச்சர், புரோகிதர், சேனுபதியர், தூதர், ஒற்றர் என்ற ஐவரும, கரணத்தியலவர், கருமகாரர், கனகச் சுற்றங, கடைகாப்பாளர், நகரமாந்தர், நளிபடைத் தலைவர், யானைவீரர், இவுளிமறவர். என்ற எண்மரும்.

‡ புறம். 2.

அவனுக்கு வெளியமென்னும்நகரத்திற்கு உரியவனான "வெளியன் வேண்மான்". * என்பானது மகள் வாழ்க்கைத்துணைவியாயினள். இவள் பெயர் 'நல்லினி' என்பது. இவள் தன் பெயருக்கேற்ப நல்ல இனிய தன்மையும், கற்பும், கணவன் இன்புறும் வகைச்செயலுமுடையவளாய் விளங்கினள். †

இத்தகைய நல்லோளுக்கு 'நெடுஞ்சேரலாதன்' என்றும், 'பல்யானைச்செல்கெழுகுட்டுவன்' என்றும இரண்டு ஸத்புத்திரர் தோன்றினர். இவ்விருவரும் தம் பிதாவைப்போலவே தார்மிகர். இவருள் நெடுஞ்சேரலாதனே, பெரும்பிழை செய்த தன் பகைவரிடத்தும் இரங்கும் தயாளகுணமுடையவன். அப்பகைவர் வீணே பொருது அழிகின்றனரே என்று இரங்கி, முதலில் இவன் தன் வீர முரசத்தை முழக்கிக் காட்டுவான். ‡ அதற்கும் அவர் அடங்காராய்ப் போர் வேட்டு எழுவராயிற், பின்பு பொருது, அவர் நாட்டை எரித்து, ஆண்டுள்ள பொன், மணி, அணி முதலியவற்றைக் கவர்ந்துவந்து, தேவாலயங்கட்குக் கொடுத்துத் தெய்வ வழிபாடு விசேஷமாக நடாத்திப் பெரிதும் மகிழ்வான். ¶ இவன் நாட்டிலே அத்தெய்வத்தின் ஆணையால் முளளுடைய முருக்கு மரமும பிறரைக் குத்தி வருத்தா. அதனால், தன் மயிர்க்கு ஏதம்வரின் உயிர்வாழாத கவரி யான்கூட அச்சமற்றும் முண்முருங்கைக் காட்டில் தன் மயிரை இழ

---

* வெளியன் வேணமான் என்னும பெயருடையார் பலருள்; அகம். 208. அவர் சரிதைகளைப்பின்பு கூறுவோம்.

† பதிற். 2 ஆம் பத்து, பதி.

‡ பதிற். 17. ¶ ஷை 15.

வாது சஞ்சரித்து, இரவில் அச்சமற்று உறங்கும் ஓரறிவுயிராகிய முண்முருக்கும் பிற வுயிர்க்கு ஏதம் செய்வதில்லை யென்றால், சிங்கம் புலி முதலிய கொடிய விலங்கினால் நாட்டில் ஏதமில்லை யென்பது சொல்லாமலே அமையும் ஆதலால் அக் கவரிமான், உழைமான், பசு, யாடு முதலியன இரவில் உறங்கும்பொழுது பகற் காலத்துத் தாம் உண்ட அருவியையும், கறித்த நரந்தம் புல்லையுமே நுகர்வதாகக் கனவுகாணும். *

இவன் தன் நாட்டில் பதினெண் கூலமும் விற்கும் வணிகர் இயங்கும் மார்க்கங்களை ஆறலை கள்வர்களே யில்லாமற் செய்ததோடு, அவ் வணிகர்க்கும் தன் கீழ் வாழும் காணியாளர்க்கும் இவன் மிக்க ஸௌகரியங்கள் செய்தும், பாழான விடங்களை நாடுகளாகவும் நகரங்களாகவுமாக்கியும், உழவை விருத்திசெய்தும் வந்தான். †

இவன் குணமும், சௌரியமும் ஆட்சியு மிப்படியாக, இவன் தம்பி பல்யானைச் செல்கெழுகுட்டுவன் செய்தி என்னவென்று பார்ப்போம். அவன் வியாகரணம், அலங்காரம், சோதிடம், வேதம் முதலிய ஸகல சாஸ்திரங்களிலும் பாரங்கதனாகி, வேதாந்த ஞானம் நிரம்பி, இந்திரியங்களின்வழி போகாது அடங்கிய மனத்தனாய் ஸத்ஸங்க ஸகவாஸஞ் செய்து கொண்டு, பரிசுத்தனாய் விளங்கியவன். அவன் தேவர்க்குச் செய்யும் யாகத்தோடு அதிதி ஸத்காரஞ் செய்தலையும் ஒரு சிறந்த வேள்வியாகக் கருதி, நெய்யைத் தேவ வேள்வியிடத்துச் சொரிவது போலச் சொரிந்து, தாளிப்புடன் கூடிய கறி, பக்ஷியங்களோடு

---

* பதிற். 11. † ஷை 13.

அன்ன மளித்து வந்தான். அதனைக்கண்ட தேவரும், "இவ்வாறு நாமும அறஞ்செய்யப் பெற்றிலமே!" என்று இரங்குவாராயினர். *

இஃது இப்படியாக, அவன் சௌரியமும் போர் விருப்பமும் மிகவும் பாராட்டற்பாலன. அவன் தன் வீரமுரசத்தை நீராட்டி, மந்திரத்துடன் அம் முரசுறை கடவுளைப் பேணி, அதற்குப் பிண்டபலிக ளிடும்பொழுது, எறும்பும் அப்பிண்டத்தை மொய்ப்ப தில்லை; பேய் மகளும் அணுக நடுங்குவள். காக்கை யும் கழுகுமே போரில் வெற்றிக்கு முன் சூசகமாக அவற்றை உண்ணும். அக்காலத்து அவ் வீர முரசம் கடுங்குரலோடு விசும்படைந்து அதிரும்படி முழக்கப் பெறும். அம் முழக்கங் கேட்ட வேந்தரும் வேளிரும் நடுநடுங்கி ஒரே மொழியாய், "இனி நாம் இக் குட்டு வனைப் பகைப்பதில்லை; இவனுக்குப் பணிந்து திறை கொடுத்துவிடுவோம்" என்று நிச்சயித்துவிடுவர். †

இவ்வாறு அவர் செய்துவந்தமையால், சோழ பாண்டியர்க்கும் மற்ற சிற்றரசர்க்கும் உரிய நாடு களும் கீழ்கடலும் அவனுக்கு உரிமையாயிற்று. கடைச்சங்கம் நிலையிட்ட முடத்திருமாறன் இவன் வீரத்தினுக்கும் குணங்கல்விமுதலியவற்றினுக்கும் வச மாகி இவனைவாயாரப புகழ்ந்துள்ளான். அவன் பல யானைகளை நிரைத்து, ஒரே பகலில் இருகடல் நீரையும் கொணர்வித்து, தமிழ்நாட்டின் ஏகசக்ராதிபதியென

---

* பதிற். 21.

† நற். 105. பதிற். 30. வீரமுரசத்தின் வரலாற்றினை கதைக்கொத்து மலா ஐந்திற் பார்க்க.

அபிஷேகஞ் செய்து கொண்டான். கொண்டவன் தன் மரபிலுள்ள பெரியோரை மதியாதிருந்தானல்லன். அவர்களை அவன் அன்புடன் புறந்தந்து தான் ஜயித்துப் பெற்ற நாடுகளிற் பாகம் கொடுத்து உவப்பித்தான். அவனுக்குக் கடவுளிடம் அன்பு அதிகமாதலால், அவன் தன் நாட்டு அயிரைமலையிலுள்ள கொற்றவைக் கடவுளுக்கு நித்திய நைமித்திகங்களில் யாதும் குறைவுவாராமல் விழாக்கள் செய்து வழிபட்டு வந்தான். *

இவ்வாறு நம் செல்கெழுகுட்டுவன் கோல்கோடாது, தமிழ்நாடு முழுவதும் ஆண்டு வருகையில், அவன் கொடைத்திறம் உலகமுழுவதும் பிரசித்தியாக, கௌதமன் என்னும் ஓர் ஏழைப் பார்ப்பான் அவன்பாற் பொருள் பெறலாமென்று, தன் பார்ப்பனியோடு அவன் ஸபைக்குச்சென்றான். அக் கௌதமனே தமிழிற் பெரும்புலவன். பாலைத் திணையைச் சுவைபடுத்திப் பாடுவதில் இணையற்றவன். அதனால் அவனுக்குப் "பாலைக்கௌதமனார்" என்று பெயர். பாலைத் திணையாவது: யுவா ஒருவனும் யுவதி ஒருத்தியும் தெய்வச் செயலான் எதிர்ப்பட்டுப் புணர்ந்த பிறகு அவளை வெளிப் படையாக மணஞ் செய்து கோடற்கு அவள் பெற்றோர் அறியாமல் அவளைத் தன் ஊர்க்குக் கொண்டுபோகும் ஒழுக்கத்தைக் கூறுவது.

அப்பாலைக்கௌதமன் நம் குட்டுவனை நெருங்கிச் சம்பாஷணை செய்யவே, அவனுக்கும், அவன் மனைவிக்கும் இம்மைப் பொருளில் ஆசை அற்று விட்டது.

* பதிற. 3-ஆம பத்து. பதி.

அதன்மேல் அப் பார்ப்பான் அச் சேரலனைப் பத்துப் பாடல்களாற் புகழ்ந்து உவப்பித்தான். அப்பாடல்களின் சொற்சுவையும் பொருட் பொலியும் அக் குட்டுவன் உள்ளத்தைக் கவர்ந்து விட்டமையால், அவன், "அந்தணீர்! உமக்கு வேண்டியதென்னை? கூசாமற் கேளும், தடையின்றித் தருவேன்" என்றனன். கேட்ட பார்ப்பான், "வேந்தே! நீதான் யான் விரும்புவதை அளிக்கவல்லை. நீ அளியாயேல், என் குறை பிறரால் தீர்தலின்று. யான் விரும்புவதோ ஏனைப் புலவர் விரும்பும் பொருளன்று" என்றான்.

கேட்ட சேரலன், "நீர் எதைக் கேட்பீராலும் தந்தகல்வேன்" என்றனன். அதன்மேல் அப்பார்ப்பான் ஒரு வகையாக மனத்தைத் திடப் படுத்திக் கொண்டு, ஓ! தர்மந் தெரிந்த வேந்தே! யானும், என் பார்ப்பனியும் சுவர்க்கம் புகல் வேண்டும். அதனைத் தருக" என்றான்.

எனவே, சேரலன் திடுக்கிட்டு விட்டான்! "நாம் என்ன கடவுளா? கடவுளால் தரத்தக்க தன்றோ சுவர்க்கப் பேறு! இப்போது இதற்கென்ன செய்வோம்?" என்று அவன் சிந்திப்பானாயினன். அப்போது அவனுக்கு ஒரு விஷயம் நினைவுக்கு வந்தது: "பூர்வத்தில் அரசர்கள் சுவர்க்கம் வேண்டி, அஃது அளிக்கவல்ல யாகங்களைச் செய்திருக்கின்றனர். நாமும் அத்தகைய வேள்விகளைச் செய்து இவ் வந்தணனைச் சுவர்க்கத்தில் ஏற்றுவோம்" என்று முடிவு செய்தான். உடனே பல நாடுகட்கும் ஓலை போக்கி, வேத வேதாங்கங்களில் வல்ல பிராமணச் சிரேஷ்டரை வருவித்து உசாவினன்.

அவர்கள் பத்துப்பெரு வேள்வி வேட்பிக்கவேண்டும் என, அவன் பெரிதும் மகிழ்ந்து, தன் கோயிலாளுடன் யாக தீட்சை பெற்றுக்கொண்டு, விரதங்களை அனுஷ்டித்து, ஒன்பது பெரிய யாகங்களை வேத விதி வழுவாமல் தேவர் உவப்பச் செய்து முடித்தான்.*

அப்போது அருந்ததிக் கற்புடைய அவன் கோயிலாள் தன் கணவன் வழி ஒழுகி, இன்சொல்லும், ஈகையுமுடையவளாய், விருந்து புறந்தந்து, அதிதிகள் யாவரையும் உவப்பித்தாள். பத்தாம் பெரு வேள்வி தொடங்கிற்று. அஃது யாதோ ரிடையூறுமின்றி நிறைவேற வேண்டுமே யென்று, அவன் மிகக் கவலையுடனும், ஜாக்ரதையுடனும் ஆகவேண்டியவற்றை முன்னதாகவே கடைப்பிடித்து, விதிப் பிரகாரம் மந்திரலோபமின்றி, பக்தியுடன ஆவுதி சொரிந்து வந்தான். பூர்ணாவுதியும் சொரிந்தாயிற்று. அப்போது அரசன் தன் பக்கத்தே யிருந்த கௌதமன் புறந் திரும்பினான். திரும்பவே, ஆகாயத்திலே ஒரு விமானந் தென்பட்டது! அவ் விமானத்திலே அக் கௌதமனும், அவன் பார்ப்பனியும் திவ்ய ரூபத்துடன் காணப்பட்டனர்.

தேவ வாத்தியங்களுடன் சுவர்க்கத்திற்குச் செல்கின்ற அவ்விருவரும் அரசனையும், அவன் கோயிலாளையும் ஆசீர்வதித்து, "நீயிரும் சிறிது காலத்தில் எம்மோடு சுவர்க்கம் புகுவீர்" என்று வரந் தந்தனர். ஆங்

---

* பழமொழி 316, சிலப். 28-ஆம் காதை. அடிகள் 137-8. தொல். பொருள். 80 - ஆம் சூ. உரை. நச. பதிற். 3 - ஆம் பத்துப் பதி.

குள்ள முனிவரும், பிறரும் பேராச்சரியமுற்று, நம் குட்டுவனையும், அவனது கோயிலாளையும் பெரிதும் புகழ்ந்து, "உங்கள் நாட்டில் மாதம் மும்மாரி பெய்ய என்ன தடை? உங்களைத் தரிசித்தவர்க்கும் பாவம் அறும்" என்று கொண்டாடித் தம் ஊர் சென்றனர்.

இவ்வளவுக்கும் மேலாக அவன் சரிதையில் ஒரு பெரிய விசேஷத்தைக் காண்கின்றோம். அவனுக்குப் புரோகிதராய்ப் பல்காலும் தர்மோபதேசஞ் செய்து வந்தவர் ஒருவருண்டு. அவர் 'நெடும்பாரத்வாஜன்' என்பார். அவர் கிருகத்தாச்சிரமத்தைத் துறந்து, வானப்பிரத்தாச்சிரமங்கொண்டு காடுசெல்ல, அதனைக்கண்டு தானும் துறவுள்ளம் பிறந்து, தன் பேரரசையும் பெருந்திருவையும், துறந்து, தவஞ் செய்யக் காட்டிற்குச் சென்று விட்டான்.

## அத்தியாயம் 3

'மாடமலி மறுகிற் கூட லாங்கண்' சிறந்த வீரனாய் நன்மாறன் என்று ஒரு வேந்தன் இருந்தான். அவன் உருத்திரன் போலப் பகைவர்மேற் சீற்றமும், பலதேவன்போல அணுக ஒண்ணாத வலிமையும், கண்ணபிரான்போல இகழ்கின்றவரைக் களையும் ஆற்றலும், முருகன்போலக் கருதியது முடிக்கும் வன்மையும் உடையவன். அவன் மாற்றரசர் பலரை வென்று, அவர்கள் நாட்டிற் கொள்ளையடித்து, ஏராளமான பொருள்களைக் கவர்ந்து கொண்டுவந்து தன் னாட்டிற்

சேமித்து வருவான். அவனுக்கு யவனர் குப்பிகளிற் கொணர்ந்து தரும் மதுவில் மிகப் பிரியம். அதை அவன் தன் மனைவியர் பொற்றட்டில் ஊற்ற, தானும் தன் இளம் புதல்வருமாகக் கூடிக் குடித்துக்களிப்புற்று ஆடிவந்தான். யவனர்களாவார் ஐரோப்பா கண்டத்தின் தென்பாலுள்ள கிரேக்க தேசத்தினர்.

ஒருகாலத்தில் புலவர் திலகர்களான பெரிசாத்தனாரும், மூலங்கிழாரும் அந்நன்மாறனிடம் வந்து, தமது வறுமையை விரித்துக் கூறிப் பரிசில் வேண்டினர். வேண்ட அப் பாண்டியன் தருவான் போல நெடுநாள் ஆசை காட்டி வந்து, முடிவில் ஒன்றுங் கொடாது அனுப்பிவிட்டான். விடவே, அவர்கள் பெரிதும் வருந்தி, "அரசே! ஒருவர் தம்மால் இயலும்பொருளை இயலுமென்று கொடுத்தலும், இயலாத பொருளை இல்லை யென்று சொல்லுதலும் உலக இயற்கை; அப்படியின்றி, தமக்கு இயலாததனை இயலு மென்றலும், இயலும். பொருளை இல்லையென மறுத்தலுமாகிய இவவிரண்டும் இரப்போரை வாட்டுவதன்றியும், ஈவோரது புகழைக் கெடுக்கும்வழிகளுமாகும். இப்பொழுது நீ எம் விஷயமாகச் செய்த தீங்கினால் உன் பிள்ளைகள் நோயின்றி இருப்பாராக! நீயும் நெடுநாள் சீவித்திருப்பையாக! நாங்கள் எவ்வளவுதான் வெயிலிலும் பனியிலும் உழந்தாலும் வருத்தமுற்றம். கூரையில்லாத எங்கள் குட்டிச்சுவர் வீட்டையும், அதன்கண் உறையும் எமது கற்புடைய மனைவியரையும் நினைத்துக்கொண்டு செல்வோம். கல்லால் அடித்துப் பதித்தாற்போன்று எங்களைவிட்டு நீங்காத தரித்திரம் உடன்வர வெய்யில், பனியென்று பாராமல்

நாங்கள் ஊர்சென்றடைவோம். எமது மனைவியர்உடம் பிலோ நாணம் என்ற ஒன்றைத் தவிர வேறு யாதும் இல்லை. உனது மக்கள் உன்னையேபோலப் பகைவரை வென்று, பொன்னும் மணியும் பிறவும் கொள்ளையடித்துவந்து, நின்னகரில் சேமித்து வைக்கக் கடவர்; நீயும் புத்திர பௌத்திரர்களுடன் இன்புறக்கடவாய்'' என்று வெறுத்துக் கூறிவிட்டுப் போயினர்.

இவர்களை யன்றி இடைக்காடனாரும், மதுரை மருதனிள நாகனாரும், மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனாரும், காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக்கண்ணனாரும் இவனை யடைந்து பரிசில் வேண்டவும் இவன் யாதுங் கொடாது அனுப்பிவிட்டான்.

இவ்வெழுவரும் இவ்வாறு வெறுப்புற்றுப் போன மிகச் சிறிது காலத்திற்குள்ளேயே அப் பாண்டியன் தான் ஈட்டிய பொற்குவியல்களை அனுபவியாமலே இலவந்திகைப்பள்ளியிலே மரித்துப்போயினான். * இலவந்திகைப் பள்ளியாவது, காற்றும் மழையும் வேண்டிய காலங்களில் வருவித்துக்கொள்ளும் நீராவி இயந்திரங்களமைந்த சிங்கார வனத்திலுள்ளே சமைத்த மாளிகை. இனி வேறொரு கதை கூறுவோம்.

செந்தமிழ் நிலமெனப்படும் பாண்டி நாட்டிலே பஞ்சவர் வழியினனாய் உதித்த பூதப் பாண்டியன் என்பானொருவன் சிறந்த கல்வியாளனும், வீரனுமாய் விளங்கினான். அவன் தனக்கு மனமொத்த மித்திரர்களான மாவன், ஆந்தை, அந்துவன் சாத்தன்,

* புறம். 42, 55, 56, 57, 196, 198.

ஆதன் அழிசி, இயக்கன் என்ற ஐவரையும் துணையாயக் கொண்டு பகை வென்று, ஒல்லையூர் முதலிய நாடுகளைக் கைப்பற்றி, நல்லறிவாளரும், நீதி சாஸ்திரம் வல்லாரும், அறிவால் மூத்தவருமான சான்றோரை நீதிபதிகளாகத் தேர்ந்தெடுத்து, தன்நாட்டை முறை பிறழாமல் ஆண்டு வந்தான். அவனுக்கு அருந்ததிக் கற்பினளும், சிறந்த வனப்புடையாளும், நிறைந்த கல்வியுடையாளுமான 'பெருங் கோப் பெண்டு' என்பாள் மனையாளாகி, அவன்பால் மனமொத்த அன்பினளாய் ஒழுகி வர, அவன் அவளை விட்டுச் சிறிதும் பிரியாது, அறநூலிற் கூறியபடி இல்லறம் நடாத்தி வந்தான்.

இத்தகைய மன்னன் காலகதியால் மரணமடைய, அவனது மனையாளான பெருங் கோப் பெண்டு, சீவித்திருக்கச் சகியாளாய், தீப் பாய்ந்து உயிர் விடத் துணிந்தாள். அவ்வளவில், ஆங்கிருந்தோர் சிலர், "ஆ! இராசமாதேவி! நீ இவ்வளவு இளமையில் உயிர் துறப்பது தகுதியன்று; உனக்கு நாடும் ஊரும் செல்வமும் உளவே; சில காலம் அவற்றை வைத்து ஆண்ட பிறகு, எல்லாரையும்போல நீ மூத்து விளியலாமே; மேலும் தீப் பாய்வது ஒரொளிதான காரியமன்றே; தீ உன் அழகிய உடம்பைத் தகிக்கும் போது, நீ மிகவும் துன்புறுவாயே" என்றனர்.

கேட்ட அவ் வுத்தமி மிகக் கோபித்து, "ஓ! ஓ! நன்று, சொன்னீர்! சுத்தவீரனும், அழகனும், வித்துவானுமான என் அருமைக் கணவன் இறக்க என்னை அவனோடுகூட இறந்தொழி என்று சொல்லாது, உயிர்

வைத்திரு என்று தீப் பாயவொட்டாது என்னை விலக்குகின்ற நீங்களோ அறிவுடையீர்! இவ்வுடல் பலவிதமான துன்பங்களுக்கும் ஏதுவாய், உள்ளே யிருக்கும் ஆபாசத்தை மறைத்து நிற்கின்ற தோலினாற் போர்க்கப் பெற்றுள்ளது; இதனை விரும்புவோர் புல்லறிவாளரே யாவர்; என் ஆருயிர் நாதனை இழந்த எனக்குக் குளிர்ந்த தாமரைப் பொய்கையின் நீரும், தீயும் ஒரு தன்மையவே யாகும்!'' என்று, விரித்த கூந்தலோடுஞ் சுடுகாட்டிற்குச் சென்று, ஆங்குத் தன் கணவன் உடல் மண்டி எரியும் சிதையில் விழுந்து உயிர் நீத்தனள். *

இவள் பேரறிவுடைய விதுஷியாதலால், உடம்பின் தூய்தன்மையைக் கண்டறிந்து, அதைப் பரிகரிக்கச் சந்தர்ப்பம் நேர்ந்ததும், மகிழ்ச்சியோடு அதனைப் பரிகரித்தாள். மேலே வேறொரு கதை கூறுவோம்.

பொன் கொழிக்கும் காவிரி புரக்கும் சோழவள நாட்டிலே † பூஞ்சாற்றூர் எனஒரூர் அந்தணக்கிராமம் உண்டு. அக் கிராமத்திலே நான்கு வேதங்களையும் ஆறு அங்கங்களையும், ஐயந்திரிபற ஓதி யுணர்ந்தவனும், வைதிக மத ஒழுககங்களில் பதிந்த பக்தி யுடையவனும், சிறந்த கொடையாளியும் கௌண்டினியனுமான விஷ்ணுதாஸன் என்று ஒரு பாப்பனச்சிட்டன் இருந்தான். அவன் தனது கற்புடையரான மனைவியர் பலருடன் இல்லறம் வழுவாது ஒழுகிவரு நாளில சத்தியமாகிய வைதிக மதத்துக்குப் புறம்பான பொய்ம்

---

* புறம். 71, 246, 247.

† இது தஞ்சையிலுள்ளது.

மதத்தைப் பௌத்தர்கள் ஜனங்களுக்கு உபதேசித்து, வேள்விகளின் சிறப்பை இழித்துக் கூறி, அவர் மனத்தைப் பேதித்து வந்தனர்.

அதைக் கண்ட அவன் மனஞ் சகியாது, "நாம் பல யாகங்களைச் செய்து, வேதத்தின் உண்மையையும், வேள்வியின் மகிமையையும் ஜனங்களுக்குக் காட்டி, வஞ்சிக்கப் பெற்ற அவர்களை உய்யக்கொள்ள வேண்டும்" என்று முடிவு செய்தான். ஆனால் அடுத்த நிமிஷத்தில், "ஆ, ஆ! யாகங்கள் செய்வதென்றால், பத்தினி யில்லாமல், புருஷன் மாத்திரம் எப்படிச் செய்யக் கூடும்? நம் மனைவிமார் கஷ்டங்களைச் சகிக்கமாட்டாத இளையவ ராயினரே! அவர் எப்படிப் பன்னாள் பட்டினி கிடந்தும், காட்டிலே வெயில், மழை முதலியவற்றைப் பொறுத்தும், நாட்டிலே சோம்பலின்றி வந்த விருந்தினரைப் பேணியும் நமக்குத் துணை புரியப் போகின்றனர். அஃது அவர்களாற் கூடாத காரிய மாயிற்றே! நாம் கொண்ட இவ்வெண்ணத்தைத் தவிர்த்தொழியத்தான் வேண்டும்" என்று துக்கித்தவனாய் ஓரிடத்தில் சிந்தித்திருந்தான்.

இவ்வாறவன் முகவாட்ட முற்றிருக்கக்கண்ட அவன் மனைவியர் அதன் காரணத்தை ஊகித்தறிந்து கொண்டு, அவன்பாற் சென்று, "நாதா! அடியேங்கள் உமது மனம்போல எதையும் செய்யச் சித்தமாயிருக்கும்போது நீங்களேன் கவலை கொள்ளவேண்டும்? கணவன் கருதிய அதனையே கருதுவ தன்றோ ஸ்திரீகளின் தருமமாகும்? எழுந்திருக்கலாம்; நீங்கள் எவ்வளவு யாகங்கள் செய்தாலும், நாங்கள் உம்மை நிழல்

போல அநுஸரித்து,உமதுகுறிப்பறிந்து ஒழுகுவோம்'' என்றனர்.

கேட்ட விஷ்ணுதாஸன் மிகவும் களித்தவனாய், கிருஷ்ணாஜினம் பொருந்திய யஜ்ஞோபவீத தாரியாய், தன்மனைவியர்க்கு யாக பூஷணங்களான 'ஜாலகம்' முதலிய அணிகலன்களை, அணிவித்து, காட்டிலே ஏழு நாளும் நாட்டிலே ஏழுநாளு மிருந்து, அறத்தைக்கரை கண்டவரும் மந்திர தந்திர ஸ்வர வர்ண விதிகளை நன்கு உணர்ந்தவருமான பிராமணோத்தமர் முன்னிலையிலே ஹோமம் வளர்த்து, மழையேபோல நெய் அன்னம் முதலிய ஆவுதிகள் சொரிந்தான். பின்னும் அதிதி போஜனங்களினாலும், உத்தமர்களுக்குப் பசு பொன் முதலிய திரவியதானங்களினாலும், கூன் குருடு சப்பாணிகளுக்கு யானை குதிரை முதலிய வாகன தானங்களினாலும் வேத வேள்வித் தொழிலை நிறைவேற்றி, அவபிரத ஸ்நானமும் செய்து முடித்தான். *

யாகங்கள் நடந்து வந்த காலங்களிலே அவ்விஷ்ணுதாஸன் மனைவிமார் கொண்டான் குறிப்பறிந்து, அதிதிகளுக்கு மெத்தென்ற சொல்லினாலும், சுவைமிக்க உணவினாலும் மகிழ்வூட்டி, ஆசாரங்களில் சிறிதும் பிறழாது ஒழுகி வந்தனர். அப் பார்ப்பனிமாரையும் விஷ்ணுதாஸனையும் கண்ணுற்ற பெரியோர் யாவரும், "இவர்களே இல்லறம் நடாத்துதற்குத் தகுதி யுடையார். கண்ணிரண்டும் ஒன்றையே நோக்குமாறுபோல இத்தம்பதிகளும் எவ்விஷயத்திலும் ஒருமனப்பட்டுக் காரியங்களை முடித்தனர். உலகம் இவ்

* புறம். 166.

வாறே இல்லறம் நடாத்துமானால், 'கடுங் கேடெனும் நாமமும் இல்லை; நரகமும் இல்லையே' என்று கொண்டாடி ஆர்ப்பரித்தனர். இனி மிகக் கொடியனும் பாவியுமான ஒருவன் கதையினைக் கூறுவோம்.

செந்தமிழ் நாடெனப்படும் பாண்டி நாட்டிலே கள்ளூர் என்று ஓர் ஊர் உண்டு. அவ்வூர் கருப்பஞ் சோலை, வாழைச்சோலை, மாஞ்சோலை முதலிய சோலைகள் சூழ்ந்து செழித்தும், காண்டற்கினிய வயல்கள் நிறைந்துவனப்புற்றுமிருந்தது. அதன்கண் ஒரு கிருஹஸ்தன் தன் இல்லாளுடன் இல்லறம் நடாத்தி வந்தான். அக் காலையில் அவனுக்குப் பாலிய சிநேகிதனாயிருந்த ஒருவன் யாதோ ஒருகாரணத்தை முன்னிட்டு அக்கள்ளூருக்கு வந்தவனைச் சந்தித்தான். உடனே அக் கிருஹஸ்தன் அவனிடத்துப் பழைமை பாராட்டி அளவளாவிய பின்பு, தன் இல்லத்துக்கு வந்து உண்டுபோமாறு வேண்டினான்.

வந்தவனோ நிறையும் ஒழுக்கமு மற்றவன். அஃது அக்கிரஹஸ்தனுக்குத் தெரியும். தெரிந்தும் அவன் அறிவீனத்தால அவனைத் தன் வீட்டினுள் அழைத்துக் கொணடு புகுந்தான. அன்றுதொட்டே அத்தீயோன் வேறு ஒன்றையும் கருதாது, தன் நட்பாளன் மனைவியையே கருதுபவனாய், அவளை மயக்கி, சமயம் பார்த்திருந்து அவள் கற்பை அழித்து விட்டான்.

இச்செய்தியை அக்கிருஹஸ்தன் அறிந்துகொண்டான். பல சாக்ஷிகளும் அவனுக்கு இருந்தன; உடனே அவன் அவ்வறனிலாளன் மேல் அவ்வூர்ச் சபையார்

முன் வழக்கிட்டான். அச்சபையார் அவனை வருவித்து உருக்கி வினவ, அவன், 'ஐயோ! நான் யாதொன்றும் அறியேனே!'' என்று பொய்ச் சத்தியம் செய்தான். அதன்மேல் அப்பெருஞ் சபையார் சாக்ஷிகளை வருவித்து விசாரிக்குமளவில் குற்றம் வெளிப்படவே, அவர்கள் அவனை நாற்சந்தியில்நிறுத்தி இலையோடுந்தளிரோடுங்கூடிய பெருங்கொம்புகளை அவன் உடம்பிற் சேர்த்துக்கட்டி, ஊரெல்லாஞ் சுற்றியடிப்பித்துக் கடைசியில் சுண்ணாம்புநீற்று அறையிற்போட்டு எரித்துவிட்டனர்.

## அத்தியாயம் 4

காவிரிபாயும் சோணாட்டிலே உறையூரிலே கோப்பெருஞ் சோழன் என்றொரு மன்னவன் அரசாண்டு வந்தான். அவன் சிறந்த புலவனும், வீரனும், ஞானியுமாய்ப் புல்லாற்றூர் எயிற்றியார், பொத்தியார், கருவூர்ப் பெருஞ் சதுக்குப் பூதநாதனார் என்ற பல புலவர்களோடு நட்புடைமைபூண்டு, அவர்களோடுபலகாலும் தத்துவ விசாரஞ் செய்துகொண் டிருந்தான். இத்தகைய நல்லோனுக்குப் பழவினை வசத்தால் கல்லாமடையரும் பொல்லா நடையருமாய் இரண்டு புதல்வர் பிறந்து, வறியவர்களான குடிகளை வருத்துவதனாலும், பெரியோர்களை நிந்திப்பதனாலும் தம் தந்தையான அச்சோழனுக்குப் பெரும்பழி விளைத்து, அவன் மனம் புண்ணாகும்படி பலப் பல கொடுமைகளைச் செய்து வந்தனர். அதைக்கண்ட அச்சோழன் அவ்விருவரையும் பலபடியாலும் நல்வழிப்படுத்த முயன்றும் கூடா

மற்போயினமையாலே, அவர்களை அவன் கடிந்து கூறித், தன் நாட்டினின்றும் வெளியே துரத்திவிட்டான்.

அக் கொடியர்கள் தம் தந்தை கூறுவன தமது நன்மைக் கென்பதை உணராது, கல்வியில் மிக்கவனும் ஞானியுமான தமது தந்தையைப் பகைத்து, அவனை வென்று ராச்சியத்தைக் கைப்பற்றிக்கொண்டு விடுகிறதென்று முடிவு செய்து கோசர், வடுகர் முதலிய கூலிப் படையாளர்களையும் இளஞ்சேரலிரும்பொறையென்ற சேரவேந்தனையும் * துணைசேர்த்துக் கொண்டு, உறையூர்மீது படை யெடுத்து வந்தார்கள். கோசர் ஆவார் வீரத்திலும், சொல்லுறுதியிலும் மிக்கவரென்றுபுகழப்பெற்றவர்கள். நட்பினரைக்கைவிடாத பெருங் குணம் உடையவர்கள். அவர்கள் நான்கு வகையினர். அவர்களைப் பற்றிப் பின்பு கூறுவோம்.

நிற்க, அதைக்கண்ட சோழன் முதலில் மிகக் கோப முடையவனாகி, அப்பிள்ளைகள்மேற் போர் தொடுக்க ஆயத்தப்பட்டான். ஆனால், எயிற்றியார் என்ற விதுஷி "ஓ சோழனே! இவ் வரசுரிமை நினக்குப் பின் இப்பிள்ளைகட்கு உரிமை யென்பதை நீ மறந்தனையே! போரில் நீ ஜயித்து இப்புதல்வர் மாண்டாலோ உன்செல்வத்தையும் அரசையும் யாருக்கு வைத்துவிட்டு லோகாந்தரம் செல்வை? இப்புதல்வர் ஜயித்து நீ மாண்டாலோ உன் புகழுக்குப் பங்கம் வருமே. ஆதலால் கோபம் வேண்டாம். மோக்ஷத்தை யடைய வேறு மார்க்கமுண்டாதலால், அம் மார்க்கத்தில் புத்தியைச் செலுத்து" என்று கூறினள். அவ்

* புறம். 191, 212, 213, 219. பதிற். 9 ஆம் பத்துப்பதி.

வுறுதி மொழியைக் கைக்கொண்டு அவன், "நமக்கு நெடுங்காலம் இந்த இளமை நிலைத்திராது; உடம்பில வலிமை யற்றுப்போனால் பின்பு அறங்களைச் செய்ய இயலாது, இப்போதே தவஞ் செய்யப் புறப்படுவோம்" என்று தேறி, உடனே தன் அரசினைத் துறந்து தன்னை ஒத்த ஞானிகள் பலரோடு வடதேசஞ் சேர்ந்து, இரண்டு ஆற்றின் இடையிலே உள்ள ஒரு தீவிலே இருந்து யோகஞ் செய்து, தன் பூத உடம்பை நீத்து, முத்தியை நாடத் தொடங்கி விட்டான்.

இவன் ஆங்கு அவ்வாறிருக்க, பாண்டி நாட்டின் கண்ணேயுள்ள பிசிர் என்னும் ஊரிலே உறைபவரான ஆந்தையார் என்ற ஞானவைராக்கியங்களில் முதிர்ந்த புலவர் ஒருவா தம் ஞானதிருஷ்டியினால் நம் சோழன் வடக்கிருத்தலை யுணர்ந்து, பேருவகை யெய்தி, மனைவி மக்களையும் நாடு முதலியவற்றையும் ஒரு நொடியில் துறந்து, வட நாட்டில் நம் சோழனிருக்கு மிடத்தை நோக்கிப் புறப்பட்டு விட்டார். இவர் நம் சோழனை நேரிற் பார்த்தவரே யன்று; இவன் கல்வியும் ஞான முதிர்ச்சியும் பலர் சொல்லக் கேட்டதுதான். இவ்வாறிருந்தும் ஒத்த உணர்ச்சியே இவர்க்குச் சோழனுடனுயிர் நீத்தற்கு உரிமைத்தாகிய பெரு நட்பைத் தந்து விட்டது. இவர் இவ்வாறு வடதிசை நோக்கிச் சென்று கொண்டிருக்க, ஆங்கு ஆற்றிடைக் குறையில் பலசான்றோரோடு யோகஞ் செயதுகொண் டிருந்த சோழன், தன் ஞானத்திருஷ்டியினால் ஆந்தையார் புறப்பட்டு வருவதனைக் கண்டு, தன் பக்கத்திருந்த சான்றோரை நோக்கி, "ஆந்தையார் இதோ எனனோடிருந்து தவஞ் செய்ய வந்துகொண் டிருக்கிறார்; அவருக்கு என் பக்கமாக இடனொழித்துவையும்" என்றான்.

கேட்ட அச் சான்றோர், "என்ன அரசே' ஆந்தையார் உன்னைக் காண்டலுஞ் செய்திலரே! அவர்க்குநீ இவ்விடம் வந்திருக்கும் செய்தியும் தெரிவித்திருக்க வில்லையே! அவர் எவ்வாறு வருவர்?" என்றார். சோழன், "ஆ! ஆ! ஆந்தையார் வரவே செய்வார்; அவர் நான் அரசாண்ட காலத்துவரவில்லையே என்று நீவிர் ஐயங்கொள்ளல் வேண்டாம். அப்போது அவர் நாட்டில் அரசு செய்த 'நம்பி' என்ற பாண்டியன் முறைசெய்யானாய்ப் பரிவுதப வெடுக்கும் பிண்டம் நச்சினமையால் அவனை நல்வழிப்படுத்த வேண்டியது அவர் கடமையாயிற்று; இப்போது * அவன் அல்லவை செய்யானாய்க் குடிகளைக் காக்கும்; அவருக்கு இடனொழிக்க" என்றான்.

அவ்வாறு பேசி வாய்மூடுமுன் ஆந்தையார் அங்கு வந்து தோன்றினர். அப்போது அவ் ஆந்தையாருடைய முதுமையுறாத உடம்பைக் கண்டு, "ஓ! ஓ! ஆந்தையாரே! நீர் நிரம்பிய மூப்புடையீர் என்று பலரும் சொல்ல யாங்கள் நெடுங்காலமாகக் கேளவியுற்றிருக்க, உமது உடம்பை நோக்குங்கால், ஒரு மயிர்கூட நரையுற்றிருக்கக் கண்டிலமே! இத்தகைய கட்டிளமை வாய்ந்த நீர் உலகத்தைத் துறக்க எவ்வாறு மனமியைந்தீர்?" என்று அச் சான்றோர் கேட்டனர்.

அதற்கு ஆந்தையார், "ஓ' சான்றவிரே! நற்குணமும், கற்பும் மிக்க எனது மனைவியும் மக்களும் அறிவால் நிரம்பியிருக்கின்றனர்; என்னுடைய ஏவலாளரோ யான் கருதிய அதனையே கருதுவார்; என் நாட்டு அரசனான அறிவுடை நம்பியும் முறையல்

* புறம். 184, 215, 216, 218.

லாதன செய்யானாய்க் குடிகளைக் காக்கும் அன்புடையான். அதற்குமேலே யானிருக்கும் ஊரின்கண் நற்குணங்களால் அமைந்து, பணியவேண்டும் உயர்ந்தோரிடத்துப் பணிந்து, ஐம்புலனும் அடங்கிய வைராக்கியமுடைய சான்றோர் பலருளர்; ஆதலால், எனக்கு ஒரு குறைவுமில்லை; இவ்யாக்கை எத்தனை காலந்தான் நிலைத்திருக்கும்? இவ் யாக்கையால் பெறக்கூடிய பயனை யான் பெற்றாய் விட்டது. சாறு பிழிந்த பிறகு எஞ்சிய சக்கைபோன்று இராநின்றது இவ்வுடம்பு; அதைப் பரிகரித்துவிடத் துணிந்தேன்'' என்று கூறி, அச்சோழனோடு சேர்ந்து, பிராணாயாமத்தினால் தம்முடம்பை நீத்து முத்தி அடையத் தொடங்கினார்.

மேற் சொன்ன கோப்பெருஞ் சோழனுக்கு நெருங்கிய நண்பரும், நிரம்பிய கல்வியுடையாரும் ஞானியுமாய்ப்பொத்தியாரென்று ஒருவருண்டல்லவா? அவர் நம் சோழனும் ஆந்தையார் முதலியோரும் ஒன்றுசேர்ந்து தவஞ்செய்கின்றார்களெனக் கேள்வியுற்று, அவர் தவஞ்செய்யுமிடத்தை அணுகி, அச்சோழனது வைராக்கியத்தைக் கண்டு அதிசயித்து, 'வேந்தே! சிறந்த ராஜபோகங்கள் அனைத்தையும், அனுபவித்துவந்த நீ அவற்றையெல்லாம் துறந்து இவ்விடத்துவந்து இருத்தலை நினைக்குங்காலை மருட்கையுடைத்து! நீயே இப்படி உலகை வெறுத்தனையானால், என்போன்றவர் துறவாதிருத்தல் மிக இழிவன்றோ? நானும் உன்னோடுகூட இங்கிருந்து தவஞ்செய்து, முத்திபெற விரும்புகிறேன்'' என்றார்.

கேட்ட சோழன், ''ஓ! பொத்தியாரே, உமக்குத் தவஞ்செய்ய இஃது ஏற்ற காலமன்று; நீர் நும்மூர்

65170

சென்று, சிறந்த கற்புடையாளும், நிழல்போல உம்மை அநுசரிப்பாளும், கட்டிளமை வாய்ந்தாளுமான நும் மனையாள் வயிற்றில் 'தென்புலம் வாழ்நர்க் கருங்கடன் இறுக்கும் பொன்போற் புதல்வ' னொருவனைப் பிறப்பித்துவிட்டு வாரும்; தவம் செய்யலாம்' என்றார்.

கேட்ட பொத்தியார், 'இம்மை உலகத்து இசையொடும் விளங்கி, மறுமையுலகமும் மறுவின்றெய்துப, செறுநரும் விழையும் செயிர்தீர் காட்சிச் சிறுவர்ப் பயந்த செம்மலோரென' உட்கொண்டு, மறுத்தொன்றுஞ் சொல்லக் கூடாமையால், சோழனை அரிதிற் பிரிந்து, அவனில்லாமையால் பாழ்பட்டுக் காணப்பட்ட உறையூரில் துக்கமுற் றிருந்தார். * பின்பு தேறிச் சில காலம் இல்லறத்தில் ஒழுகிவர, கடவுளருளால் அவருக்கு ஒரு மகன் பிறந்தான். பிறந்ததுதான் தாமதம்! அப்புலவர், "ஆ ஆ! சோழன் நமக்கு விதித்தகால அவதி கடந்துவிட்டது! இனிநாம் ஒரு நிமிஷமேனும் இங்குத் தரிக்கக் கூடாது!" என்று, அன்றே புறப்பட்டு, அச்சோழ னிருந்தவிடம் சென்று பார்த்தார்.

அங்கே அச்சோழன் சமாதி கூடிவிட்டமையால், அவன் இருந்த விடத்தில் ஒரு கல்லைப் பிரதிஷ்டை செய்திருந்தனர். அதைக் கண்டதும் பொத்தியார் பெருந் துக்க முடையவராய், "ஓ! ஓ! சோழனே! 'மகன் ஒருவனைப் பிறப்பித்தபின் வா; தவஞ்செய்ய இங்கு இடம் தருவேன்' என்று, அக்காலத்து என்னை உன்னோடு சேர்த்துவைத்துக் கொள்ளாது ஊருக்கு அனுப்பினையே! நீ சொன்னபடி செய்து வந்திருக்கி

* புறம் 217, 220, 222.

றேனே! நான் இருந்து தவஞ்செய்ய நீ வைத்த இடம் எங்கே? நீ மாத்திரம் என்னையின்றி விண்ணுலகம் போய் விடலாமோ?'' என்று அழுதார்.

உடனே, அச் சோழனைப் பிரதிஷ்டித்திருந்த சிலை 'படீர்' என வெடித்து, ஒருவர் புகுந்துகொள்ளக் கூடிய அளவு திறந்துகொண்டது. உடனே பொத்தியார் மிக மகிழ்ந்து அதில இறங்கிச் சமாதி கூடி, தமது பூதவுடம்பை நீத்து முத்தியடைந்தார். இப் பொத்தியாரைப் போலவே அக் கோப்பெருஞ் சோழனை வற்புறுத்தி, அவனோடுகூடச் சேர்ந்து தவஞ்செய்து முத்தியடைந்த பெரியார் கருவூர்ப்பெருஞ் சதுக்கத்துப் பூதனார் என்பவரும் கண்ணகனார் என்பவருமாவர்.*

## அத்தியாயம் 5

முத்துக்கள் விசேஷமாக விளையும் பாண்டிநாட்டின்கண்ணே சிறந்த சூரனும் மானியும் புலவனுமாய் நெடுஞ்செழியன் என்னும் ஓர் அரசன் நீதியோடு செங்கோலோச்சி வருநாளிலே ஒரு பிராமணனுக்குப் பிறந்த புதல்வர் பலருள்ளே மூத்தோன் ஒருவன் ஒழிய மற்றையோர் யாவரும் படித்த புலவர்களாய் விளங்கினர். அப்போது அவர்கள் தாய் கல்லாத தன் மூத்தபிள்ளையிடத்துப் பெரிதும் மனவெறுப்புற்று, அவனை யுபேக்ஷைசெய்து, இளைய மக்களை மிக்க அன்போடும் ஆதரித்து வந்தாள். அம் மூத்தோன் தனது தாயின் அத்தகைய மனத்திரிபுக்குத் தனது

* புறம் 218, 221, 222, 223.

கல்லாமையே காரணமென்று ஊகித்து, எப்படியாவது படித்துப் புலவனாகவேண்டுமென்று உறுதிசெய்து கற்றுத்தெளிந்த நல்லாசிரியன் ஒருவனைநாடி அலைந்து, வேளாளன் ஒருவன் சிறந்த படிப்பும், நிறைந்த வாய்மையும், பரந்த அன்பும், ஆழ்ந்த தெய்வ பக்தியும், கலைபயின்ற தெளிவும், கற்பிக்கும் வன்மையும், உலகியல் அநுபவமுமாகிய பல உயர்ந்த குணங்களும் உடையனாயிருத்தலைக் கண்டு, அவனையே தனக்கு ஆசிரியனாக வகுத்துக்கொண்டான். *

கொண்டவன் தனது உயர்ந்த அந்தணக் குலத்தைப் பாராட்டாது, அவ்வேளாளப் புலவனுக்கு வழிபாடு புரிந்து சமயங்களில் உதவி செய்தும், ஏராளமான பொருளைக் கொடுத்தும், சிறிதும் கௌரவம் பாராட்டாது ஊழியஞ் செய்தும, அவன் கற்பிப்பனவற்றை நீர் நசையுற்றவன் பருகுவதுபோல உட்கொண்டும், பாடங்களைப் போற்றியும் வர, அப்பார்ப்பன மாணக்கன் மிக விரைவில் எல்லாங் கற்றுத்தனது தம்பிமார்களினும் சிறந்த புலவனாயினன்.

அப் புலமையை நோக்கிய புலவரும் பிறரும் அவனைப் பெரிதும் பூஜித்து, அவன் பேரூக்கத்தைக் கொண்டாடினர். அவன் தாயும் அவனைக் கொண்டாடினள். ஆரியப்படைதந்த நெடுஞ்செழியனென்ற அப் பாண்டியனும் அவன் பெருஞ் சிறப்புற்றான்.

சேரநாட்டிலே பண்டைக்காலத்திலே கருவூரிலே ஆழியாதன் என்னும் ஒரு சேரவேந்தன் திருமால் பக்தியிற் சிறந்தவனாய் அரசாண்டு வந்தான். அவன்

---

* புறம். 183. தொல். பொருள. சூ. 75 நச். உரை.

சோழனையும் பாண்டியனையும் விடச் செல்வத்திலும் சௌரியத்திலும் மிக்கவனாய், போரில் அன்னாரை வென்று, அவரை உரியகாலங்களில் ஏவல் கொள்வானா யினான். அதனைப் பொறாத அவ்விரு பேரரசரும் சினங் கொண்டு, "இவ்வாழியாதன் என்ன எங்களினும் சிறந்தோனா? நாங்கள் இவனைவிடப் பெருமையிற் குறைந்தவரா? மேலும் தமிழகம் மூவேந்தர்க்கும் பொதுவென்பதில்லையா?" என்று கலகஞ் செய்வாராயி னார். அதனைக் கேள்வியுற்ற அச்சேரலன், "ஆ ஆ! இவர்கள் என்னால் அரசுரிமை எய்தியிருக்க, அதனை மறந்து இப்போது என்னவோ பிதற்றுகின்றார்களே! நான் இவர்களினும் மேம்பாடுடையேன் என்பதைக் காட்டுகிறேன்" என்று, ஒரு பெரும்படையுடன் அவ் விருவர்மேலும் போர் செய்ய எழுந்து விட்டான்!

விடவே, தமிழ் நாடு முழுவதும் பெருந் தீப்பற் றினாற்போலும் ஒரு பெருங் கலக்க முண்டாயிற்று. அதைக் கண்ட கபிலர் அவ்வாழியாதனைச் சமா தானம் செய்யக் கருதி, அவன்பாற் சென்று,"வேந்தே! யாரினும் சிறந்தோனாகிய உன்னை இச் சூரியனும் நிகராகமாட்டானே! இவன் பகலிலேதானே பிற ருக்குக் காட்சிதரத் தோன்றுவான்; சந்திரன் வந் தாலோ ஓடி ஒளிந்துகொள்ளுவான். அயனங்கள் தோறும் இவன் திசை மாறிச் சஞ்சரித்து நிலையற்றவ னாய்த் தோன்றுவான். உனக்கோ அப்படிக்கொடுத்த குறைகளில்லை. நீயோ எந்தக் காலத்தும் பிறர்க்குக் காட்சி கொடுப்பாய்; எவருக்கும் தோற்று முதுகி டாய்; எங்கும் உறுதியோடு நிற்பை; உன் சிறப்பே சிறப்பு; இத்தகைய உனக்கு சூரியகுலத்தானாகிய இச்

சோழனும், சந்திர குலத்தானாகிய இப் பாண்டியனும் எம்மாத்திரம்; அவரை எதிர்த்துச் சென்று வென்றால் உனக்குப் பெருமையோ? நீ உலகு அளந்த பெருமான் குலத்தோயல்லையோ?'' என்று இனிய சொற் கூறிச் சமாதானப்படுத்தினார்.

அவன் அதனால் கோபமாறிக் கபிலர் கையைப் பிடித்துக்கொண்டு ''நீரே புலவர்'' என்று சொல்லிக் குலுக்க, அப்போது அப் புலவரது கை மிகவும் மெத் தென்றிருந்ததைக் கண்டு, ''ஆ ஆ! புலவரே! உமது கை என்ன இத்தனை மிருதுவாயிருக்கின்றதே!'' என்றனன். அதற்கும் அவர் சமத்காரமாகவே, ''வேந்தே! என் கைகளினோடு பயில்வன மென்மைத் தன்மையவான சோறும், கறியும், ஊனுமாகும்; அதனால் அவை மென்மையவாயின; உனது கைகளோடு பயில்வனவோ யானையை உய்க்கும் அங்குசமும், அம்பினை உதைக்கும் வன்சிலையும், மாற்றார் பருமம் பிளந் தெறியும் கூற்றுவன் அனையவேலுமாதலால், வன்மை மிக்கு விளங்குவன'' என்று சொல்லி, அவனது பெருமையை எடுத்துக் கூறினார்.

கேட்ட ஆழியாதன் அளவுகடந்த மகிழ்வெய்தி, அக்கபிலருக்கு ஏராளமான திரவியத்தையும், நன்றா என னும்மலைமேல் ஏறிநின்று, தான் கண்ணிற்கண்டநாடுகள் அனைத்தையும் அளித்து உவப்பித்தான்.* இத்திரவியத் தையும் நாடுகளையுந்தாம் நம் கபிலர் பாரிமகளிர்களுக் குச் சீதனமாக அளித்தனர். அவ்வரலாறு களைப்பின்பு கூறுவோம்.

---

* புறம். 8, 14. பதிற். 63 83. 7 ஆம பத்துப் பதிகம்.

கபிலர் கூறிய இன்சொல்லால் காட்டுத் தீப் போலப் பரவத்தக்க கொடிய போர்த்தீ அவிந்தது.

இனிச் சோழ நாட்டிலே சிறந்த சூரனும் புலவனுமாய் அரசாண்டுவந்த கிள்ளிவளவன் என்னும் ஒரு சோழனைப்பற்றி ஒருகதை சொல்லுவோம். அவ்வளவன் சிறுகுடியினனான பண்ணன் என்பவனோடு எக்காலமும் சேர்ந்து அளவளாவிக்கொண்டிருப்பான். அப்பண்ணனே இவ்வளவன் போலவே கவி பாடவல்ல பெரும் புலவன். அவனுக்குக் காவிரியாற்றின் வடகரையிலுள்ள சிறுகுடி யென்பது ஊராகும். அவனுடன் சேர்ந்து, நம் வளவன் மாற்றரசரை வென்று பணிவித்துத் திறை பெற்று வந்தான். வரவே, அவனது நாடு அகன்று, அவன் திரவியசாலையில் திறைப் பொருளும் மிகுதியாய் வந்து குவிந்ததனால், அச் சோழன் கவலையின்றி, தன்னை ஒத்த புலவரை வைத்துக்கொண்டு, அவர்களுக்கு ஏராளமான பொருளைக் கொடுத்து மகிழ்வித்து வந்தான். ஆனால் அவனுக்கு உழவு வாணிகம் முதலியவற்றைப்பற்றிக் கவனிக்க அவகாசம் சிறிதும் இல்லாமற்போயிற்று. அதனால் அத் தொழில்கள் அபிவிருத்தியடையாமல் க்ஷீணத்தசைக்கு வந்துகொண்டிருந்தன. உழுநர் முதலியோர் பெரிதும் வருந்துவாராயினர்.

அக்காலத்திலே அச் சோழநாட்டிலே வெள்ளைக்குடி என்னும் ஊரிலே நாகனார் என்று ஒரு புலவர் உண்டு. அவர் வேளாண்டொழில் செய்து அத் தொழிற்கு வேண்டிய சௌகரியங்கள் பெறாது இடருற்றனர். அதனால் அவர் அக் கிள்ளிவளவனிடத்து அவனது நாடு அடைந்து வரும் ஸ்திதியைத் தெரி

விக்க எண்ணங் கொண்டனர். கொண்டவர் அவன் பால் செல்லுவதற்கான முகாந்தரம் ஒன்றைச் சிந்தித்து, தாம் பயிரிடும் நிலங்களுக்கு வரி செலுத்தாது இருந்துவிட்டார். விடவே, அரசன் அதிகாரிகள் வந்து, அவரைப் பல முறை வரி கேட்டு நெருக்கினர். என்ன நெருக்கியும், அவர் கொடாமையால். அவரைக்கடைசியாய் அழைத்துக்கொண்டுபோய் அரசன்பால் விட்டனர். அவ்வளவில், கிள்ளிவளவன், "நாகனாரே! நீர் ஏன் வரிசெலுத்தவில்லை? அரசன் கடமையையும், குடிகள் கடமையையும் நன்குணர்ந்த நீரே இவ்வாறு செய்தமையால், பிறரும் செய்க் கடன் (நில வரி) கொடாமல் நின்றுவிட்டனர். என் திரவிய சாலை வறிதேயிருக்கின்றது. நீர் செய்க்கடன் கொடாதிருத்தற்கு யாதேனுங் காரணமிருத்தல் வேண்டும். உம்முடைய நிலம் விளையவில்லையா?" என்றான்.

அதற்கு அந்நாகனார் இதுதான் தருணமென்று, "ஓ! வளவ! உனது நாடு காவிரியினால் ரக்ஷிக்கப்படுதலால், சூரியன் நான்கு திசைகளிலும் நின்று எரித்தாலும், கொடிய க்ஷாமக்குறியான தூமகேது முதலியன தோன்றினாலும், விளையுள் குன்றுவதில்லை. ஆனாலும் குறையுற்றோராகிய உழுதுவாழுங் குடிகள் நின்பால் வந்து குறை சொல்லிக்கொள்ளும்போது, அவர் குறையைக் கேட்கும் வழக்கம் உன்னிடம் இல்லை. எந்த அரசன் அவ்வாறு கேட்பானோ அவ்வரசனுக்கே மேகம் ஏவல் கேட்கும் உன் படை மாற்றரசர் படையினை வென்று ஓட்டுவது எதன் வலிமையா லென்று நினைக்கிறாய்? உன் உழு நிலங்களினின்றும் வரும் தானிய பலத்தினாலே என்றறி; காலங்

களில் மழை பெய்யாமற் போனாலும், நிலத்து வரும் படி குறைந்தாலும், ஜனங்களிடத்து இயற்கைக்கு மாறு பினவை காணப்பட்டாலும், உலகம் அரசனையே பழிக்கும்; வித்துவானாகிய நீ பழிப்புறுதலை என் மனம் ஒப்பவில்லை. ஆதலால், நீ ஏரைப் பாதுகாப்பாரது குடியைப் பாதுகாத்து, அதன் பிறகு உனது மற்றக் குடிகளையும் பாது காப்பையாயின், பகைவர் நீ படை திரட்டிச் செல்லவேண்டாமலே பணிவர்'' என்றார். *

கேட்ட கிள்ளிவளவன், அப்புலவர் கூறியன முற்றும் உண்மையே யென்று கொண்டு, அவரும் பிறரும் கொடுக்கவேண்டிய நிலவரிப் பழம் பாக்கியைத் தள்ளிவிட்டதோடு, அன்றுதொட்டு நாட்டில் உழு தொழிலையும் வாணிகத்தையும் அபிவிருத்திசெய்து, வேளாளரையும் வணிகரையும் பெரிதும் அபிமானித்து வந்தான். ஆதலால் ''சோழவளநாடு சோறுடைத்து'' எனவும்,

> ''ஏரினும் ஏற்றத்தி னானும் பிறர்நாட்டு
> வாரி சுரக்கும் வளனெல்லாம் — தேரின்
> அரிகாலின் கீழ்கூஉம் அந்நெல்லே சாலும்
> கரிகாலன் காவிரிசூழ் நாடு.''

எனவும் உலகமுழுவதும் புகழக் கீர்த்திமிக்கு விளங்கி வருகின்றது. அதன்கண்ணுள்ள குடிகளும் செல்வமும் சீருமுடையவராய் வாழ்ந்து வருகின்றனர்.

---

* புறம் 35; 173, அகம் 177. நப் பண்ணனா என்று இப் பண்ணன் பரிபாடலில் 19 ஆம் பாடலைப் பாடினவனாகக் காணப்படுவதாலும், புலவனாகிய கிள்ளிவளவனால்பாடப் பெற்றிருப்பதாலும், இப் பண்ணனும் புலவனாதல் வேண்டும். இக்கதை புறம் 35 ஆம் பாடலைக்கொண்டு வரையப் பெற்றது.

# அத்தியாயம் 6

சோழராது பிரதான பட்டணமான காவிரிப்பூம் பட்டினத்திலே பராசரன் என்று ஒரு பிராமணனிருந்தான். அவன் தருக்க சாஸ்திரத்தில் சிறந்த வித்துவான். அந்தண ஒழுக்கம் சிறிதும் தவறாதவன். அவன் ஒருகால் ஆடுகோட்பாட்டுச் சேரலாதன்* என்னும்சேரராஜனிடம்சென்றுதனது பாண்டித்தியத்தைக் காட்ட, அச்சேரன் மிகமகிழ்ந்து அப் பராசரனுக்கு ஏராளமான திரவியமும் குடை கொடி முதலிய விருதுகளும் பரிசாக அளித்தான், அவற்றைப் பெற்றுக்கொண்டு,அவன் தன் ஊருக்குத் திரும்பிவரும் வழியில், திருத்தண்கால என்னும் ஸ்தலத்தில் ஒரு சாவடியில் தங்கினான்.

அப்போது அவ் ஊரிலுள்ள சிறுவர் பலர் கூட்டமாகக் கூடி அச் சாவடியில் வந்திருக்கும் பராசரனைச் சேரவரசனென்றே நினைத்துக் காண வந்தார்கள். அச் சிறுவர்களை அப் பராசரன் நோக்கி, "ஓ! பிராமணச் சிறுவர்காள்! யான் சேரனல்லேன்; உம்மை ஒத்த ஓரந்தணனேயாவேன்; உமக்கு வேதம் வருமானால் என்னொடு பின்வாங்காமல் ஓதினால், இக்குடை தண்டு முதலிய எல்லாத் திரவியத்தையும் தருவேன்" என்றான். கேட்ட அச் சிறுவர்கள், சிறிது நேரம் அவனோடு ஓதிப்பின்பு, அநுதாத்தஸ்வரத்தோடு அவனை ஒப்ப ஓதமாட்டாமல் கலங்கிக் கூச்சமுற்று, ஒருவர் பின் ஒருவர் மறைந்து நின்றனர். அப்போது தக்ஷிணா

* இவனைப்பற்றிப் பின் கூறுவோம.

மூர்த்தி என்ற ஒரு வாலிபன் மாத்திரம், "ஓ! பூஜ்யரே! அடியேன் இவ் வூரில் வசிக்கும் வார்த்திகன் என்ற ஓர் ஏழைப்பிராமணன் புதல்வன். என் தாயின் பெயர் கார்த்திகை என் பெயர் தக்ஷிணாமூர்த்தி; நான் தெரிந்த வரையில் ஓதுவதைப் பெரியோராகிய தேவரீர் கேட்க வேண்டும்" என்று, தான் கற்ற வேதசாகைகளைச் சுருதியோடு, காதுக்கு இனிமையாக உதாத்த அநுதாத்த ஸ்வரங்களோடு அப் பராசரனுக்கு இளையாமல் ஓதினான்.*

கேட்ட பராசரன் மிக மகிழ்ந்து, அச்சிறுவனைக் கட்டிக்கொண்டு, "நீயே முன்னுக்கு வரும் பிள்ளை! எனது பொருள்களையெல்லாம் உனக்கே அளித்தேன்" என்று சொல்லி, அப்படியே கொடுத்துவிட்டு, தன் ஊர் சென்றடைந்தான். அப்பொருளைப் பெற்றுக்கொண்ட அந்தத் தக்ஷிணாமூர்த்தி மிகக்களித்து, தன்மாதாபிதாக்களான வார்த்திகன் கார்த்திகை என்பார்களிடம் அவற்றைக் கொடுத்து, அவர்கள் அடிகளில விழுந்து நமஸ்காரம் செய்து, அப் பொருள்வந்த வரலாற்றைக் கூறினான். அவர்கள் அவனை ஆசிர்வதித்து, அன்று முதல் வறுமைத் துன்பத்தினின்றும் நீங்கினவராய்க் கவலையற்று உண்டு உடுத்து, விருந்தினரைப் பேணி வாழ்ந்து வந்தனர்.

அக்காலையில் அத் திருத்தங்கால் ஊரிலுள்ள இழிமக்களாகிய சிலர், வறியவர்களான அவ் வார்த்திகன் முதலியோருக்குத் திடீரென்று வந்த செல்வத்தைக் கண்டு பொறாமையுற்று, அவ்வூர் அதிகாரி

* சிலப். கட்டுரை.

யிடம் சென்று, "இவ்வார்த்திகன் நெடுநாளாக மிக்க வறியவனு யிருந்தவன்; இப்போழ்து இவன் சிறப்பாய் உண்டுடுத்து வாழ்வதை நோக்குங்கால், இவன் அரசருக்கு உரிமை யுடைய புதையற் பொருளை எடுத்திருக்க வேண்டும்; அன்றேல் எங்கேயாயினும் கொள்ளை யடித்திருக்க வேண்டும்" என்றூர்கள்.

அவ்வதிகாரிகளும் அக் கீழ் மக்களைப் போலவே கடையர்களாதலால், உடனே வந்து, அவ்வார்த்திகன் பொருள்களை யெல்லாம் பறிமுதல் செய்து, அவனை யும் சிறையிலடைத்து விட்டனர். உடனே கற்புடையாளான அவன் மனைவி கார்த்திகை கோவென அலறி அழுது, பூமிமேல் விழுந்துபுரண்டாள். புரளவே, மதுரையிலுள்ள துர்க்கை அதனைப் பொறுது, தன் கோவிற் கதவினைத் தானே சார்த்திக்கொண்டு, எவ்வகையாலும் திறக்கக் கூடாமற் செய்து விட்டாள்.

அச்செய்தி அரசனுக்கு எட்டவே, அவன் "ஓகோ! அரசு நெறியில் ஏதோ இழுக்கு நடந்திருக்கிறது! அதிகாரிகாள்! செய்ததைச் சொல்லுங்கள்" என்று ஊர்தோறும் ஓலை போக்கி, உறுக்கி வினவினுன். உடனே திருத்தண்காலூர் அதிகாரிகள்வந்து, தாம் முறைகோடிச் செய்ததைத் தெரிவித்து, அவ்வார்த்திகனைக் கொணர்ந்து அரசன்முன் விட்டனர். அரசன் அவ் வந்தணனைத் தொழுது, பிழைபொறுக்க வேண்டுமென்று இரந்து வேண்டிக்கொண்டு, அவனைச் சிறையிலிட்ட அதிகாரிகளுக்குத் தக்க தண்டனை விதித்து, அவன்மேற் குறளை கூறிய கீழ்மக்களையும் சிக்ஷித்தான்.

பிறகு அரசன், அவ்வார்த்திகனை நோக்கி, "பிராமணோத்தமா! உனக்கு எனது அதிகாரிகள் செய்தபிழை மிகப் பெரிது; நீ வசிக்கும் திருத்தண்காலையும் வயலூரையும் உனக்கு இறையிலியாக (சர்வமானியமாக) அளித்தேன்; தயைசெய்து பெற்றுக்கொள்" என்றான். கேட்ட உடனே அந்தணன் கோபமாறி, அரசனை ஆசீர்வதித்துப் போயினன். மதுரைத் துர்க்கையின் கோவிற் கதவுந் தானே திறந்துகொண்டது.

எல்லாரும் திருத்தண்காலில் உள்ள கீழ்மக்கள் செய்த அக்கிரமத்தைப் பழித்துக் கார்த்திகையின் கற்பின் மிகுதியினையும் அரசனது செங்கோலினையும் புகழ்ந்தனர்.

முத்துக்கள் மிகுதியாக விளையுங் கடற்றுறைப் பட்டினங்களையுடைய பாண்டிநாட்டிலே கொற்கைமாநகரிலே பல்லாயிரம் வருடங்களுக்கு முன்னே கிரந்தையென்று ஒரேழைப் பிராமணனிருந்தான். அவனுக்குக் கற்பிற் சிறந்த ஓர் இல்லக்கிழத்தி யுண்டு. அவளோடும் அவன் இல்லறம் நடாத்தி வருகையில், அவ்வில் வாழ்க்கைக்கு வேண்டும் பொருள்கள் முட்டுப்பட்டு, பிதிரர், தெய்வம், விருந்து, பந்துக்கள் என்றவர்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்ய இயலாதவனாயினான்.

அதனால் அவன் மிக வருந்தி, நன்கு ஆராய்ந்து, வேற்று நாட்டிற்சென்று பொருளீட்டி வருதலே கருமமெனத் துணிந்து, தன் மனைவியினிடத்தில் தன் எண்ணத்தைத் தெரிவிப்பா னாயினான். கேட்ட அவள், "ஆ! ஆ! இவ் வில்லம் உமது பிரிவால் எனக்குப் பெரும் பாழாய்த் தோன்றுமே யல்லது, பொரு

ளின்மையால் பாழாய்த் தோன்றுது. எப்படியாவது நீர் இவ்வூரிலேயே பொருளீட்டி என்னோடிருத்தல் நலம். மேலும் நம் வீட்டின் கதவிற்குத் தாழ்க்கோல் கூட இல்லையே ஊர்ப் பொதுச் சாவடிபோன்று அரணில்லாத இவ் வீட்டில் யுவதியாகிய நான் யாருந்துணையின்றி எவ்வாறு இருப்பேன்!" என்று ஏங்கினள்.

அதற்குக் கிரந்தைப் பார்ப்பான், "நீ வருந்தல் வேண்டாம். நான் ஆவணித் தொடக்கத்தில் வந்து விடுவேன். உனக்கு நம்மூர் அரசனே துணை. அவன் தர்மந் தெரிந்த உத்தமன்" என்று, மற்றும் பலவும் கூறித் தேற்றித் தேசாந்தரம் போய்விட்டான்.

அவன் போய சின்னுள்கட்கெல்லாம் பாண்டியன் மாறுவேடத்துடன் ஓரிரவு நகர்சோதனை செய்து கொண்டு, அக் கிரந்தை மனைவியிருந்த இல்லத்தருகு வந்தான். அப்போது அவனுக்கு மனத்தில் என்றுமில்லாத வொரு தீய வெண்ணம் உண்டாக, அவன் மெல்ல மெல்ல அச்சத்துடன் பார்ப்பனி இல்லத்து வாயிலருகிற் சென்று, தாளில்லாத அக் கதவினைத் தட்டினுன். தட்டவே, உள்ளே தன் காதலனையே நினைத்திருந்த அவ் வுத்தமி.தன் நாயகனுன அந்தணனே திரும்பி வந்துவிட்டானென மகிழ்ந்து, ஞெரேரென எழுந்து, "வருக, வருக! காதல வருக" என்று சொல்லிக்கொண்டு, வாயிற்புறஞ் சேர்ந்தாள்.

அப்போது அப்பாண்டியனுக்குத் தீய வெண்ணம் முதிர, அவன் அவளைப் பற்றினுன். பற்றவே, வேற்றுளின் ஸ்பரிசமென்று கண்டறிந்த அப் பார்ப்பனி திடுக்கிட்டு, "ஐயகோ, என் நாதா! பிராமணோத்தமா!

என்னை நீர்விட்டுப் பிரிந்த அன்று, எனக்கு அரசனே துணையாவன் என்று, அரணில்லா வீட்டில் இருத்திப் போனீரே! இன்று அவ்வரசன் என்னைக் காவா தொழிந்தனனே! இப்பொழுது எனக்கு யார் துணை? ஓ! வேந்தே! வேந்தே!'' என்று அரற்றினாள்.

'காய்ந்தன சலாகையன்ன அவ்வுரை' செவியில் நுழைய, கேட்ட பாண்டியன் அஞ்சி நடுக்குற்றுத் தான் பற்றிய பற்றினைத் துண்ணென விட்டுவிட்டு, ஓட்டம் பிடித்து ஓடித் திட்டிவாயில் வழியாய் அரண்மனையிற் புகுந்துகொண்டான், கொண்டவன் அன்றிர வெல்லாம் நித்திரை கொள்ளவே இல்லை. தன்னை உலகம் மதித்திருக்கும் பெருமையினையும் தான் செய்த அக்கிரமத்தினையும் நினைத்து நினைத்து உருகினான். விடிந்ததும், வேறெதுவும் செய்வதற்கு முன் அறிவிற் பெரியோரை ஸபையில் அழைத்து, "அறிஞர் காள்! கணவனைப் பிரிந்து தனித்திருந்த ஒரு கற்புடையாளை இரவிற்போய்த் தீயவெண்ணத்தோடு பற்றிய பாவிக்கு என்ன தண்டனை?'' என்றான்.

அவர்கள் நன்கு ஆராய்ந்து, "அத்தகைய கொடுவினை செய்தோனைக் கையைக் குறைத்து விடுதலே தக்கது'' என்றனர்.

அச்சொற் கேட்டதுதான் தாமதம்! உடனே அப்பாண்டியன் தன் உடைவாளை உருவித் தன்கையை வெட்டி வீழ்த்திவிட்டுத் தான்முதனாளிரவு செய்தபாதகத்தை ஊரெல்லாம் அறியச் சொன்னான். கேட்ட சான்றோரனைவரும் பெரு வியப்புற்று, "இப்பாண்டி

யன் தான் செய்த குற்றத்தை உணர்ந்து, சாக்ஷிகள் இல்லாதிருக்கவுங்கூடப் பலரறியத் தன் பிழையை வெளிப்படுத்தித் தன்னையே தண்டித்துக்கொண்டன னே இவனே புகழற்குரியனாவன்'' என்றனர். *

## அத்தியாயம் 7

மதுரைமா நகரத்திலே பல்லாயிர வருடங்களுக்கு முன் தமிழ்ச்சங்கம் நிலைத்தோங்கி யிருந்ததென்பது உங்கள் யாவருக்கும் தெரிந்ததொன்றே. அச்சங்கம் ஸ்தாபிக்கப்பெற்ற மண்டபம் மதுரைமா நகரின் வட புறமாகும். அத்தமிழ்ச் சங்கத்திற்குப் பிரதியாய், அந் நகரின் தென் புறத்தே 'ஆரிய சங்கமென' ஒரு பட்டி மண்டபம் (சங்க மண்டபம்) ஸ்தாபிக்கப் பெற்றிருந் தது. அவ் வாரிய சங்கத்திலே பல வடமொழிப் புலவர் வீற்றிருந்து வடமொழியை வளர்த்துவந்தனர். பாண்டி யன் உக்கிரப் பெருவழுதியோ அவ்விரு பாஷைகளையும் ஒப்ப மதித்து, அவ்வப் பாஷைப் புலவர்களைத் தக்க வாறு சம்மானித்து வந்தான்.

ஒரு காலத்திலே அத்தெற்கின் வாயிற்பட்டி மண்டபத்திலே கோடன் என்றொரு குயவன் வட மொழியிற் பெரும்புலவனாய், அச்சங்கத்திற் றலைமை வகித்திருந்தான். அவன் தமிழ்ப் பாஷையை நன்கு அறியாததலால், தமிழ் மொழியையும் தமிழ்ப் புலவர் களையும் இகழ்ந்து, எவரையு மதியாது, செருக்குற்றுத் திரிந்தான். அதனைக் கண்ட தமிழ்ச் சங்கத்துப் புலவர்

* சிலப். கட்டுரை. பழ. 102.

அனைவரும் மனம் வருந்தித் தமக்குத தலைவராயிருந்த நக்கீரரை நோக்கி, "புலவர் பெருமானே! நீர் தெற்கின் கண்ணுள்ள ஆரியசங்கத்திற்குச் சென்று, ஆங்குள்ள வடமொழிப் புலவர்களின் செருக்கை அடக்க வேண்டும். அன்றேல் அன்னார் நம்மை ஊரையே விட்டுஓட்டி விடுவார்" என்றனர்.

நக்கீரரும், "நீவிர் கூறுவது உண்மைதான்" எனக் கொண்டு, அவ்வடமொழிப் புலவரை வாதில் வெல்ல, அவ்வாரிய சங்கத்திற்குச் சென்றார். நக்கீரர் வரும் நோக்கத்தை அறிந்துகொண்ட அவ்வாரியப்புலவர் தம் தலைவனை கோடனிடத்துத் தெரிவிக்க, அவன், 'இக் கீரனுக்கு என்ன தெரியும்? இவன் பாஷைதான் என்ன பாஷை? அஃது ஓர் அற்பம். சிறந்த ஆரியமாமா?' என்று சொல்லித் தன் பட்டி மண்டபத்து வாயிலைத் திறவா திருந்துவிட்டான்.

கண்ட நக்கீரர், அம்மரியாதைக் குறைவுக்கு மிக வெகுண்டு, "என் பாஷை தெய்வத்தன்மை பெற்றது என்று இதோகாட்டுகிறேன்" எனச்சொல்லி, "பொதியில் மலையில் வாழும் அகஸ்தியர் வாழி, பரண கபிலர்கள் வாழி, வேட்கோக் குயக்கோடன் * ஆனந்தஞ் சேர்க சுவாகா!" என்று ஒரு பாட்டுப் பாடினர்.

அவர் பாடிமுடிந்ததுதான் தாமதம்! உடனே அக் கோடன் நின்ற விடத்திலேயே மரித்து விழுந்தான். விழவே, அவ்வாரிய சங்கப் புலவர் அனைவரும் தம் பட்டி மண்டப வாயிலைத் திறந்துகொண்டு ஓடி வந்து, நக்கீரரை வணங்கிப் பிழை பொறுக்குமாறு வேண்டி

* ஆனந்தம் - மரணம்.

னர். கீரர் உடனே கோபமாறித் தாம் செய்ததும் பிழையேயென் றுணர்ந்து, "ஆரியம் நன்று தமிழ் தீது என உரைத்த காரணத்தால்யமனுற் பற்றப்பட்டானை அகஸ்தியர் ஆணையால் தமிழே உயிர்கொடுத்துக் காக்க சுவாகா" என்று மற்றொரு பாடல் பாடினார். உடனே அக்கோடன் உறங்கி எழுந்தவன்போல எழுந்துநின்று, தன்னைச் சாவவும் வாழவும் பாடிய நக்கீரரைப் பெரிதும் புகழ்ந்து வணங்கி, அவருடன் நட்புக்கொண்டான். அன்று முதல் புலவர்களாகிய கீரர் கோடன் என்ற இருவரும், "இனி நாம் கோபித்து ஒருவரை ஒருவர் தீயசொற் சொல்லுவதில்லை" என்று முடிவு செய்து கொண்டவர்களாயினர்.*

மேற்கதையில் நக்கீரர் தமிழ்ச் சங்கத்தின் தலைமைப் புலவரா யிருந்தனரென்று கூறினோம். அவர்க்கு அத்தலைமை எவ்வாறு சித்தித்தது என்பதற்கு ஈண்டு ஒரு கதையினைச் சொல்லுவோம்.

மதுரையிலே தமிழ்ச் சங்கத்தார் கூடியிருந்து தமிழ் ஆராய்ந்துவரும் நாளிலே தமிழ் மக்கள் செய்த தவக்குறைவால் திடீரென்று பாண்டிநாடு பன்னீரியாண்டு வற்கடஞ்சென்றது. செல்லப் பசிகடுகுதலும், உக்கிரப் பெருவழுதியரசன் மிகக் கவலையுற்று, சங்கப் புலவர் எல்லாரையுங் கூவி, "சான்றவிரே! உங்களையான் புறந்தரகில்லேன்; என் தேயம் பெரிதும் வருந்துகின்றது; நீயிர் போய் நுமக்கு அறிந்த விடங்களிற்புக்கு, என் நாடு செழித்த பிறகு என்னை மறவாது வம்மின்" என்றான். கேட்ட புலவர் அனைவரும் மிகவருந்திப்

---

* தொல். பொருள். சூ. 490. நச். பேரா. உரை.

பாண்டியனை யரிதிற் பிரிந்து, பழுமர முள்ளிப்படரும் புட்கள்போலச் சோணாட்டினை யடைந்து அதன் கண்ணேயுள்ள ஆலஞ்சேரி என்னுமூரிலே அயிந்தன் என்னுங் கொடையாளி ஒருவன் 'ஊருண்கேணி நீரோரொப்பான்' என்று பலரும் புகழ்ந்து கூறக்கேட்டு, அவன் பாற்போந்து, பாண்டிநாடு படும் துன்பத்தையும் தம் ஸ்திதியையும் விரித்துரைத்தனர்.

அவ் வயிந்தனோ அப் புலவர்களைக் கண்டவுடனேயே நிதிகண்டவன் போலப் பரமஸந்தோஷ பரிதனாயினவன், அவர் சொன்னவற்றைக் கேட்டுப் பெரிதும் பரிதபித்து, அவர்களை மிக்க அன்போடும் வரவேற்றுத் தாயில்லவர்க்குத் தாயே போலவும், தந்தையில்லவர்க்குத் தந்தையே போலவும் ஒழுகி அவர்களைப் பன்னீரியாண்டு சலிப்பின்றிப் புறந்தந்தான். இவ்வயிந்தன் உழுவித் துண்ணும் வேளிர் மரபினன். அரசர்க்கு மகட்கொடைக் குரியோன்.

சங்கப் புலவர்கள் செய்தி யிவ்வாறிருக்க, பாண்டிநாடு மலிந்தோங்க மழை பெய்தது. அப்போது உக்கிரப்பெருவழுதி அரசன், "இனி நம் நாடு நாடாயிற்றாகலின் நூல் வல்லாரைக் கொணர்க" என்று எல்லாப்பக்கமும் ஆட்போக்க, அவர்கள் அவ்வாலஞ் சேரியிலிருந்தும் பிற பதிகளினின்றும் நானூற்று நாற்பத் தொன்பதின்மரைக் கொணர்ந்தனர். அவர்களுக்குள் எழுத்திலக்கணமும் சொல்லிலக்கணமும் வல்லார் பலரிருக்கப் பொருள் இலக்கணம் வலலார் யாருமில்லாமற் போயினர். அப்போது உக்கிரப் பெருவழுதி என்ற பாண்டியன், மிகக்கவலையுற்றுக் கடவுளைப் பிரார்த்தித்து,

"ஆ! ஆ! எழுத்துஞ் சொல்லும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டன்றோ! பொருள் இலக்கணம் இன்றேல் அவ்விரண்டும் பெற்று என்னபயன்?" என்று வருந்தினான். அதனைச் சிவபெருமான் கண்டு இரக்கமுற்று, பொருளிலக்கணத்தை அறுபது சூத்திரங்களாக மூன்று செப்புத் தகட்டில் எழுதித் தாம் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஆலயத்திலே தமது ஆசனத்தின் கீழே வைத்தருளினார். அப்போது ஒருநாள் கோவிற் குருக்கள் அப்பெருமானது ஆசனத்தின்கீழ்த் திருவலகு சமர்ப்பித்த வளவில், (துடைப்பத்தாற் பெருக்கியபோது) அவ்வலகோடு அச் செப்புத்தகடுகளும் வெளியேவந்து விழக்கண்டு, அவற்றைப் பார்த்து, "ஆ! ஆ! பொருளிலக்கணமன்றோ இஃது! இதனைத்தானே நம் அரசன் உக்கிரப் பெருவழுதி வேண்டி, இல்லாமையால் நைந்து உருகுகின்றான். அவனிடத்தில இதைக் கொண்டுபோய்க் கொடுப்பாம்" என்று, அவற்றை அவனிடம் எடுத்துப் போய்க் கொடுத்தான்.

பாண்டியன் பார்த்தவளவில், மிகக் களித்துச் சங்கத்தாரை அழைத்துச் "சிவபெருமான் நமது துக்கத்தைக் கண்டிரங்கியே இதனை அருளிச் செய்தான்; இந் நூற்கு உரை எழுதுங்கள்" என்று வேண்டிக் கொண்டான். உடனே சங்கப் புலவர்களெல்லாரும் தத்தமக்குத தோன்றியவாறு அதற்கு உரையெழுதிக் கொண்டு வந்து பிரசங்கிக்க, ஒருவருரை மற்றவருரையோடு மாறுபட்டுப் பொருந்தாமையால், எல்லாரும் தாம்தாம் உரைத்த உரையே மெய்யுரையென்று நெடுநாள் வாதாடி வந்தார்கள்.

அதன் பிறகு அவர்கள், "நமக்கு நூல்செய்து கொடுத்தான் சிவபெருமானல்லனோ! அவனையே நாம் நமக்கு ஒரு மத்தியஸ்தனைத் தரல்வேண்டுமென்று கேட்போம்" என்று துணிந்து, கோயிலுக்குப் போய்க் கடவுள் சந்நிதியில் நின்று பிரார்த்தித்தனர். கடவுள் அச் சங்கத்தார் நிலைமையைக் கண்டு இரங்கி, அசரீரியாய், "இவ்வூர் வணிகர் மரபினனான உப்பூரிகுடிகிழார் மகனாவான் உருத்திரசன்மன் என்பானைக் காரணிகனாகக் கொண்மின்; அவன் ஐந்து வயதுடைய ஊமையன். அத் தகையன் ஆயினனே என்று இகழல்வேண்டாம்; அவனுக்குக் கூர்மையான செவியுணர்வுண்டு. அவனை அலங்கரித்து ஆசனத்தின் மேலிருத்தி, நீயிர் கீழிருந்து சூத்திரப் பொருள் உரைத்தால், கண்ணீருகுத்து மெய்ம்மயிர் சிலிப்பான் மெய்யுரை கேட்டபோது, மெய் அல்லாத உரை கேட்டபோதோ வாளா இருப்பான்; அதனால் மெய்யுரையை அறிமின்" என்றார்.

கேட்ட அச் சங்கத்தார் பெரு மகிழ்வெய்தி, அப்பிள்ளையை உபசரித்து, மிக்க சிறப்புடன் கன்மாப் பலகை என்ற சங்கப் பலகையில் ஏற்றுவித்து, தம்தம் உரையைப் படித்துக் காட்டினர். அப்பிள்ளை எல்லார் உரைக்கும் சும்மா இருந்து, மதுரை மருதன் இளநாகனார் உரையைக் கேட்டபோது சிற்சில விடத்து மெய்மயிர் சிலிர்த்துக் கண்ணீர் சொரிந்து, நக்கீரர் உரையைக் கேட்டபோது பதந்தொறும் பதந்தொறும் கண்ணீர் பெருக்கிப் புளகாங்கிதமாயினன்.

பார்த்த சங்கத்தார் எல்லாரும், "ஆ! ஆ! மெய்யுரை பெற்றும்! மெய்யுரை பெற்றும்!" என்று ஆர்ப்

பரித்து, நக்கீரரைப் பெரிதும் புகழ்ந்தனர். அன்று முதல் அவர் அச்சங்கத்திற் றலைமைப் புலவராயினார். உக்கிரப் பெருவழுதியும் கவலை ஒழிந்தான். *

## அத்தியாயம் 8

நம் தமிழ் நாட்டிலே அரசு செய்துவந்த சோழ ரனைவரும் அறத்தையே கைக்கொண்டு அரசாண்டு வந் தனரென முன்னமே கூறியுள்ளோம். அச்சோழ அர சர்களில் மிகச்சிறந்தவனும், தெய்வபக்தியுடையவனும் போரில் மிக்காரும் ஒப்பாருமில்லையெனப் புகழ்படைத் தவனுமான "செங்கணான்" என்னும் பெயர் படைத்த ஒரு சோழன் பிரசித்தனாய் வாழ்ந்து வந்தான். அவன் புலவர்களுக்கும் யாசகர்களுக்கும் ஏராளமானபொருள் கொடுத்துக் களிப்பித்து வந்ததோடு தேவாலயங்கள் பல எடுப்பித்தும் திருவிழாக்களைக் காலந்தவறாது நடப் பித்தும் கடவுள் வழிபாடு செய்துவந்தான்.

இக்காலத்திலே, மேலைக்கடலோரத்திலே† தொண்டி யென்னும் ஒரு துறைமுகப்பட்டினத்திலே பொய்கை யார் என்ற ஒரு வித்துவானிருந்தார். அவர் சிறந்த விஷ்ணுபக்தர்‡. பிறரை வசப்படுத்தும் சொல்வன்மை படைத்தவர். எல்லாரிடத்தும் இரங்கும் தயாள குண

* இறை. களவு. முகவுரை; தொல். பொருள் சூ. 30. உரை. நச்; அகம். 'நின்ற நேமி' என்னும் பாயி.

† 'கானலந்தொண்டியஃதெம்மூரே' (தொல். பொருள். பக். 809) என்பர்.

‡ 'செஙகட்சினமால்' என்ற, திருவுடை மன்னரைக் காணின் திருமாலைக் கண்டதாக இப்பெரியார் நினைத்தவர்.

முடையவர். அத்தகையாரைக் கணைக்காலிரும்பொறை என்ற சேர வேந்தன் ஒருவன் தனக்கு ஆஸ்தான வித்துவானாக வைத்து ஆதரித்து வந்தான். அவன் சிறந்த வித்துவானும், சூரனுமாய் எக்காலத்தும் போரிலேயே ருப்பமுற்று, பலவரசர்களோடு பொருது வந்தான். ஒருகாலத்தில் அவனுக்கும் நம் செங்கணானுக்கும் பகையுண்டாகிக் கழுமலம் என்னுமிடத்தே போர் மூண்டது. அப்போரில் அச்சேரனுக்குப் படைத்தலைவர்களாய் வந்தவர்கள் பாழிக்கு அரசனான நன்னனும், ஏற்றையும், அத்தியும், கங்க நாட்டிற்குத் தலைவனான கங்கனும், வடுக அரசனான எருமையூரனும் கட்டியும், புன்றுறையுமாவர். நம் செங்கணானுக்கோ தன் படைத்தலைவன் *பழையன் ஒருவனே துணை. இப்பெரும் போரில் மகாதீர வீர சிகாமணியான தன் படைத்தலைவனும், போர்கிழவனுமான பழையனை அச் சேரன் கொன்றுவிட்டனன். அதனால், செங்கணான் பெருஞ் சீற்றங்கொண்டு, சேரனோடு பொருது வென்று, அவனைப் பிடித்துத் தன் நாட்டுக் குடவாயிற்கோட்டத்தே சிறையிட்டு, அவனது கழுமலம் என்னும் ஊரையுங் கைக்கொண்டனன்.

இவ் விஷயத்தைக் கேட்ட பொய்கையார் பெரிதும் மனம் வருந்தி, எப்படியாவது தம் அரசனை விடுவிக்க வேண்டுமென்று நெடுநேரம் சிந்தித்த பிறகு, அவன் நாடுசென்று அவன் நடாத்திய அக் கழுமலப் போரைச் சிறப்பித்துக் 'களவழி நாற்பது' என்ற பிரபந்தத்தைச் செய்து, அவன்முன் பிரசங்கம் செய்தார்.

---

* நற். 10 பார்க்க.

கேட்ட சோழன் மிகவும் திருப்தி யடைந்து, "ஓ! புலவரே! உமக்கு யாது வேண்டும் என்றனன்.

அதற்குப் பொய்கையார், "சோழ! எனது அரசனை இரும்பொறையைச் சிறையினின்றும் மீட்டுத் தந்தருளல் வேண்டும்" என்றார். *

கேட்ட செங்கணானுக்குப் பெருங் கோபமுண்டாய்விட்டது! ஆ! நம் நண்பனை மூவன்பல்லைப் பிடுங்கி அச்சேரன் தன் தொண்டிக்கோட்டை வாயிற்கதவில் அழுத்தியது ஞாபகத்திற்கு வருகிறதே! இத்தகைய கொடிய அரசனை விட்டுவிடுதல் தமிழ் நாட்டினுக்கே தீங்குவிளையும் என அவன் கவலைகொண்டான்.

ஆயினும் அத்தனை கோபத்தையும் அவன் அடக்கிக் கொண்டு, நாம் எது கேட்டாலும் தருவதாய்ச் சொன்னோமல்லவா! ஈதலினும் சிறந்த தருமம் யாதுமில்லை. பண்டைக் காலத்தில் நம் மூதாதையர் யாசகர்க்குத் தம் முயிரையும் அளித்துத் திருப்திசெய்விக்க வில்லையா?" என்று மனம் சாந்தமடைந்து, பொய்கையார் கேட்டபடி அச் சேரனது கால்கைகளிலுள்ள விலங்குகளைத் தறித்து, அவனைச் சிறையினின்றும் விடுவித்து அரசும் ஈந்தான்.

மேலே சொன்ன விருத்தாந்தம் நடந்து சில காலமே ஆயிற்று. கணைக்காலிரும் பொறைக்கு மனம் சாந்தப் படவே இல்லை. "அரசர்க்கு மானத்தின் மிக்க அறமும் புகழுமில்லையே. இச் செங்கணானால் யான் தோல்வியுற்றுப் பிறரால் விடுவிக்கப்பெற்று உயிர் வாழ்

* களவழி உரை இறுதிக் கட்டுரை; நற். 18. அகம். 44.

வதினும் இழிவானது யாது? இது அடிமைவாழ்க்கையில்லையா! ஆற்றுவரேல் தோள் வலியால் ஆற்றுவதும், ஆற்ருரேல் ரணகளத்தில்மாய்வதுந்தானே வேந்தர்க்குச் சொல்லிய நீதி. செங்கணுனேடு மற்று மொரு முறை பொருது பார்ப்போம்'' என்று துணிந்து ஒரு பெரும் படையுடன் போஜர் என்னுமிடத்தில் போர் தொடுத்தான். செங்கணுனே தன் சிறந்த படைத் தலைவனுன பழையனை முன் கழுமலப் போரிலிழந்திருந்தும், வெற்றி பெற்று, முன்போல அவனைப்பற்றிக் குடவாயிற்கோட்டத்தே சிறையிட்டு விட்டான்.

மானமென்னும் அரிய ஆபரணத்தை இழந்து செயலொழிந்து, மந்திரத்தாற் கட்டுண்ட சர்ப்பம் போலச் சீறிக்கொண்டிருந்த அம்மன்னன் சிறைக்கோட்டத்தில் நெடுநேரமாக உணவாவது நீராவது கிடைக்கப் பெருமல் வருந்தி, களைப்பினுல் சிறைகாவலரைநோக்கி, "தாகத்துக்கு நீர் தா'' என்று கேட்டான்.

அச்சிறை காவலரோ சக்கராதிபதியாக விருந்த அரசர்தலைவன் கேட்கின்ருனே என்ற மரியாதையும், நாவுலர்ந்து வாடும் சீவனன்ருே என்ற தயையும் அற்று, உடனே ஓடிப்போய் நீர் கொணர்வதை விட்டுச் சிறிது தாழ்த்துச்சென்று நீர் கொண்டு வந்து கொடுத்தனர். அதை வாங்கிக்கொண்ட அவ்வேந்தன் "சிச்சீ! நான் போரில் இறந்துபட வேண்டியவன்; ஏன் உயிருடன் பிணிப்புண்டேன்? நாய்க்கும் எனக்கும் என்ன வித்தியாசம்? அன்பிலாதார் கொடுத்த இந்நீரை நான் பருகுவேனே? மான மிழந்தவனன்ருே பருகுவான்? அப்படி உண்ணும் ஒருவனை ஒருத்தி பெறுவ

தினும் இறந்தே பிறந்த ஒரு குழவியைப் பெற்றாலும், மாமிச பிண்டமாகிய பணையைப் பெற்றாலும் நலமே" என்று சொல்லி அந்நீரைத் தரையி லூற்றிவிட்டுத் தாகத்தின் கொடுமையால் உயிர் விட்டான் *

புனல்நா டெனப்படும் சோழ வளநாட்டில் கோழி எனப்படும் உறையூரிலே, பெருநற்கிள்ளி என்னும் ஒரு சோழன் அரசு செய்துவந்தான். அக்காலத்தில் நடுநாட்டில் தென்பெண்ணை யாற்றங் கரைமேலுள்ள திருக்கோவலூரிலே மலையமான் திருமுடிக்காரி என்றொரு மன்னன் அரசாண்டு வந்தனன். இவன் மிகச் சிறந்த வீரனாய்த் தன்னை எதிர்த்த ஆரியர் முதலிய பலரையும் ஜயித்து இரவலர்க்கும் வரையாதுகொடுத் துப் பெரும்புகழ் பெற்றிருந்தான். இவன் யாரினும் சிறந்தவனாய் விளங்கினமையால், அச் சோழன் இத் திருமுடிக் காரியை நட்பினனாகக்கொண்டு பல நற்கரு மங்களியற்றி வந்தான்.

அக் காலத்தில், சேரநாட்டிலே மேலைக் கடற் கரை யோரத்திலே யுள்ள தொண்டி என்னும் பட்டி னத்திற் சேர வேந்தனான 'மேய்' என்னுமொருவன் ஆண்டு வந்தான். அவனுக்கும் இக் கிள்ளிக்கும் பகை மூள, இக்கிள்ளி அச்சேரனுக்கு உரித்தான 'விளங்கில்' என்னும் செல்வத்திற் பெருத்த ஒரு நகரத்தைக் கைப் பற்றிக் கொண்டனன். †

கொள்ளவே, அச் சேரலன் விடநாகம் போல வெகுண் டெழுந்து, ஒரு பெரும் படையோடுசென்று, அச் சோழனது படையைச் சின்ன பின்னப்படுத்தி,

* புறம். 74. † ஷை 53. அகம். 35; நற். 170.

அவனைப் புறங்கொடுத்து ஓடும்படி செய்தான். செய்தவன் அம்மட்டோடும் சின மடங்கினானில்லை; அச்சோழன் தலைநகரான கோழி யெனப்படும் உறையூர் மேலும் படை யெடுத்துச் சென்றான்.

பகைவன் வரக் கண்டதும் வலியிற் சிறியவனான அக்கிள்ளி, மிகத் திகிலடைந்து, "இப்போது என்ன செய்யலாம்? இப் பகைவனை ஜயிக்க நம்மாலாகாதே! இவனுக்குப் பணிந்து திறை கொடுத்து, இப்போது நம் நாட்டைக் காப்பதே உத்தமம்" என்று முடிவு செய்து, அவனைப் பணிந்து அவன் விரும்பும் திறைப் பொருளைக் கொடுக்க இருந்தான்.

இப்படி இருக்க, திருக்கோவலூர் அரசனாகிய காரி தனது நட்பாளனுக்கு உற்ற விபத்தைக் கேட்டறிந்து, உடனே புறப்பட்டுத் தனது பெரும் படையோடு ஆங்கு வந்து அணுகி, யமனே போலச் சீறி, அச் சேரலன் படைமேல் விழுந்து, அதை நாசம் செய்தான். செய்யவே, சேரமான் தோற்றுத் தான் செய்தது பிழை என்று பணிமொழி கூறி, அக்காரியோடும் அச் சோழனோடும் சமாதானஞ் செய்துகொண்டு, தன் நாடு சென்றடைந்தான்.*

அதன் பிறகு, அச் சோழன் அக் காரியின் உதவியால் மற்ற எல்லா அரசரையும் வணக்கி, ராஜசூயம் என்னும் பெரிய யாக மொன்றனையும் செய்து, எல்லா அரசரினும் மேலோன் என்னும் பெயருள்ள பட்டத்தைப் பெற்றான். அதனால் அவனுக்கு 'இராஜ

* புறம். 125.

ரூபம் வேட்ட பெருநற்கிள்ளி' என்னும் பெயர் வழங் கத் தலைப்பட்டது. இவனது நட்பினர் சேரமான் மாரி வேள்கோவும் பாண்டிய னுக்கிரப் பெருவழுதியுமாவர்.*

சேரநாட்டிலே, சிறந்த வீரனும், கொடையாளியு மாய்ப் 'பெருஞ்சேரல் இரும்பொறை' என்று ஒரு சேரன் அரசாண்டு வந்தான். அவன் பாண்டி நாட்டின் கண்ணுள்ள படுமாற்றூரிலே வசித்து வந்த 'கீரனார்' என்ற ஒரு பெரிய புலவரோடு விள்ளாத நட்புடைமை பூண்டிருக்கப் புலவர் அச்சேரனிடம் அடிக்கடி வந்து, பாடிச் சம்மானம் பெற்றுப் போய்க்கொண்டிருந்தார். இப்படி யிருக்கையில், ஒருநாள் அச் சேரன் தனது வீர முரசத்தை நீராட்டும்பொருட்டு ஆற்றிற்குக் கொண்டு போனான். ஆங்கு அதற்கு மயிலின் தோகையும், கொற் றான் தளிருமாய்ச் சேர்த்துத் தொடுத்த மாலையைச் சூட்டி, உதிரப் பலி தந்து, பூஜைசெய்துகொண்டிருக் கையில்,மேற்சொல்லிய கீரனார் அச் சேரலனைப் பார்க்க அவன் அரண்மனைக்கு வந்தார்.

வந்தவர் திருவோலக்க மண்டபத்தை அணுக, ஆங்கு அவ் வரசனையும்,அவன் பரிஜனங்களையும் காணு ராய்,"அரசன் வருமளவும் இங்கேயே காத்திருப்போம்" என்று நினைத்து, ஆண்டு உட்கார இடந்தேடுகையில் ஓர் ஆசனத்தைக் கண்டார். அஃதோ அச் சேரன் எடுத் துப் போயிருந்த வீரமுரசம் வைக்கும் ஆசனம். அஃ தாவது முரசுகட்டில். கண்டவர் அது முரசுகட்டில் என்று அறியாது, அதில் ஏறி உட்கார்ந்தார். இப்படி உட்காருவது பெரும்பிழை. அரசனை அவமானஞ் செய்

* புறம். 367.

வது போன்றதாகும். ஏனெனில் ஓர் அரசன் தன் பகைவனை வென்றபோது, தோற்றவன் முரசுகட்டிலினை இப்படிச்செய்து, அவமானப்படுத்துவது வழக்கம.

இஃதிப்படியாக,உட்கார்ந்த அப் புலவர் நெடுவழி நடந்து வந்த இளைப்பினால் அதிலேயே சாய்ந்து நித்திரை போய்விட்டார். சற்றுப் பொறுத்து ஆற்றினின்றும் திரும்பி வந்த சேர வேந்தன் யாரும் அணுகவொண்ணாத பரிசுத்தம் பொருந்திய தன் முரசுகட்டிலின்மேல் ஒருவன் உறங்குவதைக் கண்டான். அவ்வளவில் மிகக் கோபங் கொண்டு,உருவியவாளுடன் அவ் வுறங்குவானை நெருங்கினான். நெருங்கிப் பார்க்கவே, தனது நண்பரான கீரனாராக இருக்கக் கண்டான். கண்டதும், ஒரு நொடியிற் கோபமாறிப் பழைமையான நட்பினால், அவரிடத்துப் பேரருளுடையனாகி, "ஐயோ! இவர் நெடுந் தூரம் நடந்து இளைத்தனர் போலும்!" என்று சொல்லிச் சாமரத்தால் அவர் உடம்பு குளிர வீசுவானாயினான்.

தூங்கும் அவரோ உலகத்தையே மறந்து, நெடு நேரம் தூங்கிய பிறகு விழித்துக்கொண்டு, பார்த்தார்! அவ்வளவில்,தாம் செய்த பெரும்பிழையைக் கண்டறிந்தார்! அறிந்தவர் தாம் செய்த அப்பெரும் பிழைக்கு அரசன் செய்யும் சம்மானத்தைச் சீர்தூக்கிப் பார்த்தார். பார்த்து, தம்மினும் அறிவீனரும் அவ் வரசனினும் அருளாளனும் உலகிலில்லை என்று முடிவு செய்தார். அவனுடைய பெருங் குணத்தைப் பெரிதும் பாராட்டி, "ஓ வேந்தே! நீயே நட்பின் ருசியை யறிந்த உத்தமன்;மேலும் உனக்குத் தமிழின்மேலுள்ள பேரபி

மானமன்றோ இப்படிச் செய்யச் சொல்லிற்று!'' என்று பலவும் சொல்லி, உவப்பித்தார். இச்சேரனது பிற வரலாறுகளைப் பின்னர்க் கூறுவோம்.

பாண்டிநாட்டிலுள்ள பொதியில் மலைக்கும் அதன் பக்கத்துள்ள நாடுகட்கும் அரசனாய் 'ஆய்' என்றொரு குறுநில மன்னன் இருந்தான். அவன் சிறந்த கொடையாளியாய்த் தன்பால் வந்த இரவலருக்கெல்லாம்*முள்ளம் பன்றியின் இறைச்சியோடு சந்தனக்கட்டையும், யானைத்தந்தமும் சேர்த்துப் புலித்தோலிற்கட்டி மூட்டையாகக் கொடுத்து யானைகளும், குதிரைகளும், தேருகளுமாக அளவு கடந்து கொடுத்து வர, உலகத்தார் அவனைக் கடையெழுவள்ளல்களில் ஒருவனாக மதித்துக் கொண்டாடினர்.

'வளவனாயினும் அளவறிந்து அழித்துண்'ண வேண்டுமல்லவா? பெருஞ்செலவு செய்த அக்குறுநில மன்னனது செல்வமானது நாளுக்கு நாள் குறைந்து கொண்டுவந்து, அவன் மாளிகை பொருட்பொலிவின்றி வறியதாயிற்று. அப்போதும் அவ்'ஆய்'வள்ளல் தனது கொடைத் தொழிலைக் கைவிடாது, தன் மனைவியர் உடம்பில் அணிந்துள்ள அணிகளையும் பரிசிலர்க்கு ஈந்து மகிழ்வித்துவர, அம்மனைவியர் கழுத்தில் தாலி ஒன்றே எஞ்சியது.

அஃது ஈகைக்கு அரிதாய பொருளாதலால், அம மன்னவன் இரவலர்க்கு இட இல்லாமல் வறியனாயிருப்பது பெரும்பிழையென்று கொண்டு, பொருளீட்டும்

* புறம். 374

வழியைச் சிந்தித்து, ஒரு நாகப்பாம்பைப் பூசித்து வழி பட்டு வந்தான். அஃது ஒருநாள் அவன்முன்தோன்றி, ஒரு நீல வஸ்திரத்தைக் கொடுத்து, "ஓ ஆய் வேந்தே! இந்த வஸ்திரம் மிக்க பரிசுத்தம் பொருந்தியது. இதை உடுத்துக்கொண் டிருந்தாயானால், வற்றாத செல்வம் சாக்கும்; நீ இஷ்டம்போல இரவலருக்கு ஈந்து மகிழ் கூரலாம்" என்று சொல்லி மறைந்தது.

கேட்ட ஆய் மிகக் களித்து, அவ் வஸ்திரத்தை எடுத்துக்கொண்டு வீடு நோக்கி வருகையில், வழியிலே ஒரு சிவபெருமான் கோயிலைக் கண்டான். கடவுள் தரி சனம் பண்ணிவிட்டுப் போகலாமென்று இவன் அதன் உள்ளே நுழைந்து, சந்நிதியை அணுகவே, ஆங்கு அர்ச் சையாய் எழுந்தருளி யிருந்த பகவான் யாதொரு வஸ் திரமு மின்றி நக்கனா யிருக்கக் கண்டான். "ஆ ஆ! எம் பெருமானும், வஸ்திரமின்றி இருக்கலாமோ! இத்தனை காலமாக நான் இவ் விஷயத்தைக் கவனியா திருந்து விட்டேனே! நான் மகாபாபியாயினேனே!" என்று சொல்லிப் பதைபதைத்து, அந் நாகப் பாம்பு பெற்றுக் கொடுத்த நீலவாடையை அப் பெருமானுக்குச் சாத்தி விட்டு மகிழ்ச்சியுடன் தன் மாளிகை வந்து சேர்ந்து விட்டான்.

"கொடுத்து ஏழையாயினார் இல்லை" யாதலால், சிவபெருமான் கருணையால அவ் 'ஆய்' முன்னையினும் செல்வத்தில் மிக்கோனாகி வல்லாராயினும் வல்லவரா யினும் தன்பாற் சென்றோர்க்கு முன்னையினும் அதிக மாகக் கொடுத்து உவப்பித்தான். இவன் நாட்டிலுள்ள கவிரம் என்னும் மலை தெய்வ ஸாந்நித்திய முடையதா

யும், தலையாறு ஆய்குடி என்னும் ஊர்கள் செல்வத்தில் பெருத்தனவாயும் விளங்கின. இவன் படைவீரர் மிக்க வீரராகிய கொங்கரைப் போரில் வென்று ஓட்டி, மாற்றார் அரண்களை நூறி, இவன் திரவியகோசத்தை நன்கலன்களாலும் ரத்தினங்களாலும், நிரப்பினர். இவனுக்கு அண்டிரன் என்னும் பெயரும் உண்டு. இவன் மரணமடைந்தபோது, இவனோடுங்கூட இவன் மனைவிமார்களும் உடன்சட்டை யேறினர். அக்காலத்தில் தெய்வலோகததுக்கு இறைவனாகிய இந்திரன் இவ் 'ஆயை' யும் இவன் மனைவியரையும் எதிர்கொள்ள முரசம முதலியன முழக்கிக்கொண்டு ஆகாயத்தில் விமானத்துடன் வந்திருந்தான். அவன் முழக்கிய முரசொலி பூமியி லுள்ளார் பலர்க்கும் கேட்டது. * இவ் வாயின் சிறப்பன்றோ சிறப்பு!

## அத்தியாயம் 9

சீர்மிகுத்த பழனி மலையையும் அதனை அடுத்த நாட்டையும் பன்னூறு வருஷங்களுக்கு முன்னே பேகன் என்றோர் அரசன் ஆண்டுவந்தான். அவன் தன்னை அண்டியவருக்கு வரையாது ஈயும் வள்ளன்மை காரணமாகக் கடையெழு வள்ளல்களில் ஒருவனாக மதிக்கப் பெற்றான். அவனிடத்து இவ்வீகைக்குணமேயன்றி, அடக்கம் ஒழுக்கம் என்ற பல குணங்களும் நிரம்பியிருந்தன. அவன் ஒருகால் மலைவளங் காணும்பொருட்டு மரங்கள் நெருங்கிய காடுகள் நிறைந்த குன்றுகளி

* சிறுபாண். நற். 237; குறுந். 84; அகம் 69, 152, 198 புறம் 127-36, 158, 240, 241, 374, 375.

னூடே சஞ்சரித்துக் கொண்டிருக்க, திடீரென்று பெரு மழை பிடித்துக்கொண்டது. கொள்ளலும், அவன் குளி ரினால் நளிர் பிடித்துப் பல்லுக் கிட்ட ஒருமரத்தின் சார் பிலே வந்திருந்து, தனது உயர்ந்த கம்பளிப் போர்வை யெடுத்து விரித்துப் போர்த்துக்கொண்டான்.

அக்காலையில் அவனருகே ஆண்மயி லொன்று, அம் மேக சஞ்சாரத்தைக் கண்டு களித்துக் கூவிக்கொண்டு, தன் அழகிய சிறகைவிரித்து ஆடிற்று. அதைக் கண்ட அவன், "ஆ! ஆ! இஃது மன்றோ நம்மைப்போ லக் குளிரினால் அவஸ்தை யுற்றுக் கூவி, நடுக்கலெடுத்து ஆடுகின்றது! இதன் குளிரை நீக்குவார் யாருளர்? நாம் ஆறறி வுயிராயிருத்தலாலே போர்வை முதலியன செய்து போர்த்துக்கொண் டிருக்கிறோம்; இஃது ஐயறி வுயிர்தானே! யாது செய்யும்? நம்முன்னே வந்து இப் படித் துன்புறு மிதற்கு நாம் உதவாதிருத்தல் நியாய மோ?" என்று சொல்லித் தான் போர்த்திருந்த அப் போர்வையை எடுத்து அதன்மீது போர்த்துவிட்டுத் தான் குளிரக் குளிரத் தன் அரண்மனை நோக்கிச் சென் றடைந்தான்.

இவனது தயாள குணத்தைக் கண்ட உலகம் என்னதான் சொல்லாது! "இவனன்றோ கருணையங்கட லெனப் படுவான்!" என்று, ஆரவாரித்தது.

மேலே குறிப்பிட்ட 'பேகன்' என்ற புத்திமானுக் குக் கண்ணகி என்பாள் ஒருத்தி மனைவியாய் இருந் தாள். அவளுடன் அவன் ஒத்த அன்பினனாய் வாழ்ந்து வருகையில், கல்வியிலும், ஆடல்பாடல்களிலும் சிறந் தவளான ஒரு கணிகை மாது அவனுக்குப் பழக்க

மாகி, அவனது சபைக்குப் பலகாலும் வந்து, மதுர மான பேச்சினாலும், ஆடல் பாடல்களினாலும் அவனை மகிழ்வித்து வந்தாள். அக்காலையில் அக் கணிகை மங்கை செய்துவந்த சில குறிப்புக்களால் கண்ணகி என் பாள அவளிடத்துச் சந்தேகங்கொண்டு, தன் நாயகனை நோக்கி, "நாதா! இவ்வேசை கல்வியிலும், அறிவிலும் மிக்காள் போலக் காணப்படினும், மனத்தினால் தூய்மை யிலாதாளென்று நான் அறிகிறேன்; நீங்கள் இவளோடு அதிகமாகப் பழகுவது உசிதமன்று" என்றாள்.

கேட்ட பேகன், "ஆ! ஆ! நன்று சொன்னாய்! அவள் எவ்வாறிருந்தால்தா னென்ன? நான் என்ன மனத் திட்பமற்ற கடையனா? இவ் விலைமாது என்னை மயக்கிவிடக் கூடுமா? நீ அஞ்சாதே" என்று தைரியம் சொல்லி, அப்பரத்தையை முன் போலப் பலகாலும் வரவழைத்து அளவளாவி வந்தான். இப்படிச் சிறிது காலம் செய்துவரவே, அப் பரத்தை மாது அப்பேக னது மன உறுதியைச் சிதைத்துவிட்டாள். விடவே, அப்பேகன் ஒழுக்கங் குன்றினவனாகிப் பழி நாணாது, அவ் வரைவின் மகளோடுங் கூடிப் புனலாடுவதும், பொழிலாடுவதும், விழாவயர்வதுமாய், உன்மத்தனாய்த் திரிந்து, தன் காதலியான கண்ணகியை மறந்துவிட் டான். விடவே, அவள் மிகத் துன்புற்று வாடுவா ளாயினாள்.

இவ்வாறிவள் துன்புற்றிருக்க, அப்பேகனுக்கு நெருங்கிய நண்பர்களும பெரும் புலவர்களுமான அரி சில் கிழார், பெருங்குன்றூர் கிழார், கபிலர், பரணர், வன்பரணர் என்ற ஐவரும் பரிசில் பெற அவன் அரண்

மனைக்கு வந்தனர். அப்போது ஆங்குப் பேகனைக் காணாது, அவன் மனைவியான கண்ணகியை மாத்திரங் கண்டு, அவளது துயரத்தையும், நற்குணக் குன்றான அப்பேகனது ஒழுக்க இழுக்கத்தையும் நோக்கி, அவர் மனம் சகியாராய், "இப்பேகனது தீய ஒழுக்கத்தை மாற்றி, இக்கண்ணகியினது துயரைக் களைவதே நமது முதற்கடமையாகும்" எனத் துணிந்து, உடனே அப் பேகன்பாற்சென்று, அவன் மனமுருகும் வண்ணம் ஒவ்வொருவரும் பாட ஆரம்பித்தனர்.

முதலிற் கபிலர், "ஓ பேக! நேற்று நான் உன் மலையையும், காட்டையும் பாடிக்கொண்டு, உன் அரண் மனை வாசலில் வந்து நின்றேன். அப்போது, ஒருத்தி யைக்கண்டேன். அவள் தன் கண்ணினின்றும் வரும் நீரை அடக்கி யடக்கிப் பார்த்தும்,அஃது அடங்காமல் அவளுடம்பை யெல்லாம் நனைக்க, அவள் பேசமாட் டாது விம்மினள்! அவ்வாறு அழ உன் மனையகத்தே யாருளர்?" என்றார்.

அதன் பிறகு வன்பரணர், "அரசே! நானும் அப் படியே உன் காடு நாடு முதலியவற்றைப்பாடிக்கொண்டு வரும்போது, அழுது புலம்புகின்ற ஒருத்தியைக் கண் டேன். கண்டு,'என் நண்பனான பேகனுக்கு நீ உறவினை அல்லையோ?' என்றேன். அவள் ஒழுகுகின்ற தன் கண் ணீரைத் துடைத்துக்கொண்டு,'நான் அவனுக்கு உறவி னேன் அலலேன்; என்னைப்போன்ற வேறொருத்தியே அவனுக்கு உறவினள். அவள் அழகை நச்சி,அவன் இந் நல்லூரின்கண்ணே அவளோடுந் தேரேறி உலா வரு வான என்று பலரும் சொல்லுவர்' என்றாள். அத்தகை

யாளை நீ அருளாது துறந்து இவ்வாறு ஒழுகுதல் மிகக் கொடிது!'' என்றார்.

பின்பு பரணர்;'ஓ, வேந்தே!காட்டுமயில் ஒன்றற்கு இரங்கிப் போர்வை கொடுத்த ஈரமுடைமையையாகிய நீ இவள்பால் அருளைவிட்டு, அதர்மத்தைச் செய்ய எப்படித் துணிந்தனை? நான் யாசிக்கும் பரிசில் யாதெனில், நீ அறத்தைச் செய்யவேண்டுமென்பது ஒன்றே; ஏறுக தேரின்மேல்; அருந்துயருழக்கும் உன் மனையாளிடம் சென்று, அவள் துயரைக்களைக'' என்றார்.

அரிசில் கிழார், "இறைவனே! நீ ஏதோ பொன் ஆபரணங்களும் பிறவும் கொடுத்து, என்னை யனுப்பிவிடலாமென்று நினைக்கிறாயே! அந்த எண்ணத்தை விட்டுவிடு; யாழ்கொண்டு நின் நன்னாடு பாடியதற்கு எனக்கு யாதேனும் பரிசில்ஈய வேண்டுமென்று உனகரு விருப்பமிருந்தால், ஒன்றுதான் உன்பால் நான் பெற்றுக் கொள்வேன்;அதுதான் யாதெனில், நீ அருளாமையால் அருந்துயர் உழக்கும் உன் மனைவியின் கூந்தலானது திரும்பவும் தூபங்கமழ்ந்து, நறுமலர்மாலை சூடும்படியாக உனது குதிரைகள் தேரிற் பூட்டப்பட வேண்டுமென்பதே'' என்றார்.

பெருங்குன்றூர் கிழாரோ, "கோவே! கன் முழைகளினின்றும் விழும் அருவிகளையும், மற்றும் பல மலைகளையும் மிகச் சிரமப்பட்டுக் கடந்துவந்து, உன் நாட்டைப் புகழ்ந்து பாடியதற்கு நீ அளிக்கவேண்டிய பரிசில் ஒன்றுதான்; அஃதியாதோவெனின், உன் மூலமாய்த் துன்புற்று வாடும் உன் மனைவியின் நெய்ம்மறந்த கூந்தலானது கடைசற் பிடித்த நீலமணிபோல ஒளிவிட்

டுப் புதுப்பூவோடு விளங்கும் வண்ணம் அவள்பால் இன்றே என்னோடு நீ வரவேண்டுவதுதான்'' என்றார்.

கேட்டபேகன் அச்சான்றோர்க்கு மறுத்துரைக்கக் கூடாமல், தன் காதலிபா லடைந்து, அவளை மகிழ்வித்தான். கண்ணகியும் தனது நாயகன் தன்னை வெறுத்துப் போய்ப் பரத்தையோடு திளைத்து வந்தா னென்பதை மடமையால் மறந்து, தேசாந்தரம் போய் மீண்ட ஒரு கணவனிடத்துப் போல அன்புபாராட்டினள். பேகனும் அத்தகைய இல்லாள் விஷயமாகத் தான் முன்பு செய்த பிழைக்குப் பச்சாத்தாபமுற்றுப் பின்பு அவள்பால் திரியாத அன்பினனாய் அவளோடு ஒழுகி வந்தான்.*

## அத்தியாயம் 10

சோழ நாட்டிலே சிறந்த வீரனாய் வேற்பஃறடக் கைப் பெருவிறற் கிள்ளி என்று ஓர் அரசன் ஆண்டு வந்தான். அவனுக்கு நெடுநாளாய்ப் புத்திரப்பேறில்லா திருந்து, கடைசியில் கடவுள் அருளால் நலங்கிள்ளி என்றும் மாவளத்தான் என்றும் இரு புதல்வர் பிறந்தனர். அவர்களை அவன் மிகச் செல்வமாக வளர்த்து வருகையில், சோதிடர்கள், "இவ்வுன் புதல்வர் மிக்க பராக்கிரமசாலியாகி, எதிரிகளை வேரறுத்துப் புலவ ராற் பெரிதும் கொண்டாடப் பெறுவார்'' என்று சொன்னார்கள். கேட்ட விறற்கிள்ளி களித்து, அம் மகார்களை மார்பிலும் தோளிலும் வைத்துப் பெரிதும் சீராட்டி, இன்புற்று வந்தான்.

* சிறுபாண. புறம். 141—6, 158. அகம். 262.

வருகையில், அவனுக்கும் சேர நாட்டிலே அரசாண்டுவந்த குடக்கோ நெடுஞ்சேரலாதனுக்கும் பகைமையுண்டாகிப் * போஒர் என்னுமிடத்தில் அமர் நிகழ்ந்தது. அவ்வமரில் அவ்விரு அரசர் படையும் அழியப் பிரதானிகளும் பட்டனர். ஜயம் யாருடையதென்று தீர்மானிக்கக் கூடவில்லை. அதனால், அச்சேரனும் சோழனும் வேல் கைக்கொண்டு, பொரத் தொடங்கினர். இருதிறத்துப் படையும் பட்ட பின் அரசர் வேல் கைக்கொண்டு பொருவது பண்டைக்கால வீரவழக்கம். அப்படிப்பொரவே, ஒருவர் கையால் ஒருவர் கொலையுண்டு விழுந்தனர். விழவே, அவ விருவரது மனைவிமார்களும் உயிர் வைத்திருக்க விரும்பாராய், அக்களத்தில் வந்து, தத்தம் கணவர் மார்பினை அணைத்துக்கொண்டு, உயிர் விட்டனர்.

அதனால் மேற்சொன்ன நலங்கிள்ளியும் மாவளத்தானும் தாயும் தகப்பனுமற்ற அநாதராய் விட்டனர். அவருக்குத் தாயாதியாய்க் கொடிய பல காரியங்கள் செய்துவந்த நெடுங்கிள்ளி என்பான், அச்சிறுவர்களைப் பிடித்துக் கொல்லப் பெருமுயற்சி செய்தான். ஆனால் இறந்துபோன பெருவிறற் கிள்ளியின் சேனாபதியான திருக்கோவலூர்த் திருக்கண்ணன் என்பான் அச் சிறுவர்களையும் அவன் உறவினரையும் அந் நெடுங்கிள்ளி கைக்கு அகப்படாது காத்து, அவர்களைத் தனது திருக்கோவலூர்க்குக் கொண்டுபோய்ச் சேர்த்து, சிறந்த அரண்வலி யுடையதான தன் மூள்ளூர் மலையிடத்தே ஒரு துர்க்கத்திலே ஒளித்துவைத்து விட்டான்.

---

* காவிரிக்கரையில் பழையனுக்குரியது. அகம் 186, 326.

பெரிய இராச்சியத்தையும் பெருஞ் செல்வத்தையும் இழந்த அந் நலங்கிள்ளி சிறிது காலம் ஒளித்து வளர்ந்து, கல்வி கற்று, ஸகல ஆயுதங்களிலும் பயிற்சி செய்து, மிக விரைவில் அவற்றிலே தேர்ச்சி யடைந்தான். பின்பு அத்திருக் கண்ணனது துணையைக் கொண்டு, தனக்குப் பழைய பகையாளியான அந்நெடுங்கிள்ளியின்மீது போர் தொடுத்தான். அந் நெடுங்கிள்ளியோ இளைஞனாகிய அந் நலங்கிள்ளியை அலக்ஷியம் செய்து, ஒரு சிறிய படையோடு அவனை எதிர்த்தான். எதிர்க்கவே, மிக்கசூரனும், உட்கறுவு கொண்ட யானைபோல மறைத்த பலத்தை உடையோனும், அன்பு மிக்க படைத் தலைவர்களை யுடையோனும புலிபோல மாற்றார் படைமேற் பாய்ந்தழிக்கும் ஆற்றல் உள்ளோனுமாகிய அந் நலங்கிள்ளியால் எளிதில தோல்வியுற்று அந் நலங்கிள்ளிக்குக் காவிரிப்பூம் பட்டினத்தையும் மற்றுஞ் சில ஊர்களையும் நல்கி, அவனோடு சமாதானஞ் செய்துகொண்டான்.

அதன் பிறகு அந்நலங்கிள்ளி அவ்வூரைத் தனக்கு இராஜதானியாக ஆக்கிக்கொண்டு, தனது படையை விருத்திசெய்து அப்படை வீரரை யாண்டு அனுப்பினும் சலிப்பின்றிச்சென்று பொரத்தக்க போர்விருப்பமுடையராய்ப் பயிற்றிப் பாண்டி நாட்டின்மேற் படையெடுத்துச்சென்று, ஆங்குள்ள ஏழு வலி அரண்களைக் கைப்பற்றிக்கொண்டு, பின்பு சேர நாட்டினையும் வென்று, வட தேசத்திலேயும் புகுந்து, ஆரியர் பலரையும் ஜயித்துப் பூமியைப் பிரதக்ஷிணம் செய்துகொண்டு, மாற்றாரிடத்துத் திறையாகப்பெற்ற அளவிறந்த பொருள்களோடு தன் நாடு வந்து சேர்ந்தான்.

ஆதியில் மிகப் பெருஞ் செல்வத்திற் பிறந்து, இடையில் மிகத் துன்புற்று, ஈற்றிற் செல்வமெய்திய அவன் செல்வத்தின் நிலையாமையை உணர்ந்து, புலவர்களுக்கும் இரவலர்களுக்கும் ஏராளமான பொருளை அளித்துப் புகழுடையோனாய் விளங்கினான். அவனையும் அவன் தாயாதியான நெடுங்கிள்ளியையும் பற்றி மற்றுஞ் சில கூறுவாம்.

'மண்ணுவதுஞ் சோழ மண்டலமே' என்று கொண்டாடப்படும் சோழவள நாட்டின் திலகம்போன்றதான காவிரிப்பூம் பட்டினத்தை ஜயித்துக்கொண்டு, அதன்கண்ணே இருந்து நலங்கிள்ளி ஆண்டு வர, அவன் தாயாதியான நெடுங்கிள்ளி உறையூரிலே இருந்து அரசு செய்துவந்தான். ஒரு காலத்திலே, அந் நெடுங்கிள்ளி தன்னை ஒத்த அறிவிலிகள் பலர் போதனையால் வித்துவானான அந்நலங்கிள்ளிக்கு விரோதமாகப் பல சூழ்ச்சிகள் செய்துவர, அந் நலங்கிள்ளி கோபித்து, ஒரு பெரும் படையுடன் சென்று, உறையூரை முற்றுகையிட்டான். இடவே, உள்ளே அடைத்திருந்த நெடுங்கிள்ளியும் கதித்தெழுந்து வெளிப்பட்டு வந்து கொடும் போர் செய்தான். இருவர் படையிலும் பெருஞ் சேத முண்டாயிற்று.

இதனைப் பெரும் புலவரான கோவூர் கிழார் கேள்வியுற்று, ஐயோ! சிறந்த வித்துவானும் எல்லாம் அறிந்த புத்திமானுமான இந் நலங்கிள்ளி கோபத்தினால் தனது குடிக்கு ஒவ்வாத காரியத்தைச் செய்கின்றானே!'' என்று இரங்கி, அவன்பாற்சென்று, "ஓ வளவனே! ஒன்று கேள்: உன்னுடன் போர் செய்கின்றவன் பாண்டியனும், சேரனும் அல்லனே! உன்னைப்

போல ஒரு சோழனே என்று அறியாயோ? நீ தோற்றா லும், நின்னொடு பொருகின்ற அவன் தோற்றாலும், தோற்ற குடி சோழர் குடியே அன்றோ! சோழர் குடிதோற்றால், உனக்கும் அவமானமல்லவோ? இருவரும் தோலாமல் வெல்வதும் இயல்பல்லவே! ஆதலால், நீங்கள் இப்படிப் பொருவது உங்கள் குடிக்குப் பொருத்தம் அன்று; அல்லாமலும் நீங்கள் ஒருவருக் கொருவர் கலகப் பட்டுப் போர் தொடுப்பது உமது பகைவரான சேர பாண்டியர்க்குப் பெருமகிழ்ச்சியை விளைக்குமன்றோ! அவர் உடம்பு பூரிப்பரே" என்றார்.

கேட்ட நெடுங்கிள்ளி அப் புலவர் மொழியைப் போற்றாது, மேலும் யுத்தமே செய்ய, வித்துவானும் அறிவு நிரம்பினவனுமான நலங்கிள்ளி, "இது நியாயந் தான்; நம் குடிக்குள்ளே மனஸ்தாப மிருக்கவேண் டாம். ஒற்றுமை இன்மை வலிமையைக் குறைத்து விடும்" என்று கொண்டு, உறையூரை விட்டு நீங்கித் தனது காவிரிப்பூம் பட்டினஞ் சென்றடைந்தான். அறிஞரனைவரும் அவனது அறிவுடைமையை மெச்சினர்.

இவ்வுயர்ந்த அபிப்பிராயத்தோடு நெடுங்கிள்ளியை விட்டுவிட்டு நலங்கிள்ளி தன் நகர்க்குப் போய்விடவே, அந் நெடுங்கிள்ளி ஆலோசிப்பானாயினன்: இந் "நலங் கிள்ளி நம்மை அஞ்சியே ஓடிவிட்டான்; அற்பப் புலவ னொருவன் பேச்சை மதித்து இவ்வாறு செய்பவனும் உண்டோ?" என்று துணிந்து, உடனே அந் நலங் கிள்ளிக்கு உரியதான ஆவூரைப் பிடித்துக்கொண்டான்.

கொள்ளவே, அச்செய்தி கேட்ட நலங்கிள்ளி கூற்றுவன் போலச் சினங்கொண்டெழுந்து, ஒரு பெரும் படையுடன் சென்று, அவ்வாவூரை முற்றிக்கொண்டு, உள்ளே இருப்பார்க்கு உணவாவது நீராவது போய்ச் சேராதபடி காவல் செய்துவிட்டான்.

விடவே, உள்ளே அகப்பட்டிருந்தோர் குளித்து முழுகமாட்டாமலும், சமைக்க மாட்டாமலும் வருந்தினர். குழந்தைகள் பாலில்லாம லழுதன. யானைகள் கவளங்கொள்ளாது பிளிறின. மகளிர் பூவில்லாத வறுந் தலையை முடித்தனர். இப்படிப் பெருந் துன்பம் உண்டாக, மதிலுக்கு வெளிப் புறத்திருந்த நலங்கிள்ளியின் வீரர்கள் ஆகாயத்தை நோக்கி அம்பெய்ததனால், அவை மதிலகத்துள்ளார்மீது விழுந்துதைத்து, உயிர்ச்சேதம் பல உண்டாக்கின. ஆக்கவே, நெடுங்கிள்ளியும், பிறரும் அக் கோட்டைக்குள் அம்பு விழாத ஒருபக்கத்தே ஒதுங்கி யிருக்கும்படி யாயிற்று.

இச்சமயத்திலேயும் கோவூர்ப்புலவர் ஆங்கு வந்தார்; நெடுங்கிள்ளி படும் அவஸ்தையைப் பார்த்தார். "ஓ வேந்தே! நான் முன்னமே சொல்லியும் நீ கேளாமற்போனாய்; மற்றும் இக் கோட்டையோ உனக்கு உரித்தானதன்று; அறத்தை நினைப்பையாயின், நலங்கிள்ளியை யழைத்து, 'நினதன்றோ இஃது' என்று சொல்லி, அவனிடத்து விட்டுவிடல்வேண்டும். அப்படியின்றித் தோள் தினவுற்றுப் போர் செய்ய விரும்பினையாயின், படையுடன் புறப்பட்டு வெளிப் போந்து போர் செய்யவேண்டும்; இரண்டுமின்றி, இப்படிக் கதவை அடைத்துக்கொண்டு, ஜனங்கள் யாவரும்

துன்பப்பட, அதனை நீக்கவேண்டு மென்னும் கவலை சிறிதேனு மில்லா திருத்தல் சாலவும் நாணுத்தக வுடைத்து'' என்று இடித்துக் கூறினார்.

கேட்ட நெடுங்கிள்ளி பெரிதும் வெட்கமுற்று, நலங்கிள்ளியிடமிருந்து தப்ப வேறு மார்க்கமில்லாமை யால், கோவூர் கிழாரையே முன்னிட்டுக்கொண்டு, அவ னிடம் சென்று, "இவ்வூரும் பிறவும் உன்னுடையவே; ஆயினும் அவை எனக்கு இருக்கட்டும்'' என்று வேண் டினன். கோவூர் கிழாரும் சமாதானஞ் செய்ய, நலங் கிள்ளி கோபமாறி, "ஓ புலவரே! எந்த அரசனாகட்டும் என்னைப் பகைத்துக் கொள்ளாமல், 'எனக்கு ஈ' என்று தாழ்ந்து இரப்பானாயின், அவனுக்கு எனது பரம்பரை யாக வந்த பிதுரார்ஜிதமான பொருளையும் கொடுத்து விடுவேன்; அது மாத்திரமா? என் உயிரை வேண்டினு லும் ஈவேன். அப்படியின்றி, எனது அமைச்சர் படைத் தலைவர் முதலானோரது பலத்தை மதியாது, எனது பராக்கிரமத்தை இகழ்ந்த அறிவில்லாதோன் யாவர்க் கும் விளங்கும்படி வெட்ட வெளியிலே கிடந் துறங்கு கின்ற கொடும் புலியை இடறின குருடன்போலப் பிழைப்பது அரிதாகும். மூங்கிலைத் தின்னும் யானை யானது தன் காலின்கீழ் அகப்பட்ட இள முளையை அழிப்பதுபோல, நான் அவனை அழித்து விடுவேன்'' என்றுசொல்லி, அவ் வாவூரை அந் நெடுங்கிள்ளிக்கே கொடுத்துவிட்டுத் தன் நகருக்குப் போய்விட்டான்.

இவ்வாறு செம்மாப்போடு கூறிவிட்டு, நலங் கிள்ளி தன் பட்டினத்துக்குப் போய்விடவே, நெடுங் கிள்ளி அச்சமொழிந்தான். ஆயினும், "எச்சமயத்தில்

இந்நலங்கிள்ளி வந்து நம்மை எதிர்ப்பானோ!" என்று நடுங்கிக்கொண்டே யிருந்தான். அக் காலையில் இளந்தத்தன் என்னும் ஒரு புலவன் நம் நலங்கிள்ளிபால் ஏராளமான பரிசிலைப் பெற்றுக்கொண்டு, உறையூரிலே அரசு செய்து வந்த இந் நெடுங்கிள்ளிபாலும் ஏதேனும் பெறலாமென்று, குடை கொடி முதலிய பலபல விருதுகளோடு வந்து சேர்ந்தான்.

சேரவே, அறிவிலியாகிய அந் நெடுங்கிள்ளி அவ்விளந்தத்தப் புலவனுக்குப் பரிசில் ஈய மன மில்லாமையால், ஏதாவது ஒரு வியாஜத்தை வைத்துக்கொண்டு, அவனுக்கு யாதுங்கொடாமல் அனுப்பிவிட வேண்டுமென்று உறுதி செய்து, "இவ் விளந்தத்தன் பரிசிலன் அல்லன்: நமது பகைவனான நலங்கிள்ளி யிடமிருந்து ஒற்றனாக வந்துளான்; இத்தகையானைக் கொலை செய்தலே தகுதி; இவனை இப்போதே கொண்டுபோய்க் கொலை செய்ம்மின்" என்று, தனது கொலைஞரிடத்து அவனை ஒப்படைத்து விட்டான்.

விடவே, கொலைஞர் அவனைக் கொலைக்களம் இழுத்துச் சென்றனர். செல்லுகையில், கோவூர்கிழார் தெய்வாதீனமாக ஆங்குவந்து, நடந்த விஷயத்தை அறிந்து, நெடுங்கிள்ளிபாற்சென்று, "வேந்தே! இவன் உண்மையில் ஒரு பரிசிலனே; ஒற்றன் அல்லன். பரிசிலனது வாழ்க்கை முறையைச் சொல்லுகிறேன் கேள்: எங்கெங்கே கொடுக்கிற தாதாக்கள் இருக்கிறார்களோ அங்கங்கே யெல்லாம் அப்பரிசிலனானவன் செல்வான்; வழியின் அருமையையும் தூரத்தையும் நோக்கான். பழுத்த மரங்களை நாடிச் செல்லும் பக்ஷிகளைப்போலச் சென்று, அவ்வள்ளியோர்களைப் பலபடியாகப் புகழ்ந்து

பாடி, அவர்கள் கொடுத்தவற்றை மகிழ்வுடன் ஏற்றுத் தன் சுற்றத்தாரை உண்பிப்பான். நாளைக்கு வேண்டுமே என்று மிகுத்து வையாது, தன்னைப்போன்ற யாசகருக்கு அள்ளி அள்ளிக் கொடுப்பான். தன்னை ரக்ஷிக்கும் வள்ளியோரால் பூஜிக்கப்படுதல் ஒன்றை மாத்திரமே விரும்பி யிருப்பான். அதைத் தவிர, அவன்பிறர்க்குத் தீமை செய்வதைக் கனவிலும் நினையான். தன்னைக் கல்வி முகத்தால் எதிர்க்குமவரை மாத்திரம் வாதத்தால் ஜயித்துச் செருக்கோடு திரிவான். இந்த ஒரு விஷயத்தைத் தவிர மற்றெவ் விஷயத்திலும் பரிசிலனவன் பிறனொருவனோடு மாறுபட்டா னென்பதில்லை. கல்வி யுடைமையும் பொருளுடைமைபோல வீறுடையதென்று அறி இவனும் உன்னை ஒத்தபெரு வேந்தனே போலப் பெருமை யுடையான். இவனை இப்போதே விட்டுவிடு" என்று கடுகடுத்துக் கூறினார்.

கேட்ட நெடுங்கிள்ளி, "கோவூர் கிழார் நலங்கிள்ளியின் நட்பினராவ" ரென அஞ்சி, அவ்விளந்தத்தனை உடனே விடுவித்தான். ஆனால், அவன் அந்நலங்கிள்ளியோடு ஒருபோதும் ஒத்துவாழப் பிரியப்படாமல் சிறியவும் பெரியவுமான இடையூறுகளை அவனுக்குச்செய்து வந்தமையால், அந்நலங்கிள்ளி கடுங்கோபமூண்டு, "காரியாறு" என்னுமிடத்து அந்நெடுங்கிள்ளியோடு பொருது கொன்றழித்து, உறையூர் முதலிய அவன் ஊர்களைப் பிடித்துக்கொண்டு, சோழநாட்டினுக்கு ஏக சக்கராதிபதி யாயினன்.

முதலில் அந்நலங்கிள்ளி ராச்சிய பாரக்கவலையினாலோ, நெடுங்கிள்ளி செய்துவந்த பல இடையூறுகளி

னுலோ, தன் புத்தியைப்போரிலேயே செலுத்திவிட்டுத் தன்பால் வரும் புலவர்களுக்குச் சம்மானம் செய்யாது அனுப்பிவந்தான். அதனைக்கண்ட உறையூர்முதுகண்ணன் சாத்தன் என்ற புலவர் அவன் பாற்சென்று, "வேந்தே! அரசர்க்கு ஜயம் தருவது அவர் செய்யும் அறமேயாகும்; நீ சிறந்த புலவனுயிருந்தும் இவ்வாறு ஈகைக்குணமற்றவனுயிருத்தல் பெரிதும் வியசனிக்கத் தக்கதாயிராநின்றது" என்று இடித்துக்கூற, அவன் தெளிந்து,பற்பல யாக யக்ஞங்கள் செய்து, தக்கோரைத் தக்கவாறு ஸம்மானித்துப் புகழ்பெற்ருன். கோவூர் கிழார் என்ற புலவர் இவன் ஊரான காவிரிப் பூப் பட்டினத்து இவன் நட்ட வேள்வித் தூணங்களிற் பெரும் பாரங்க ளேற்றிவந்த கப்பல்கள் பாரந் தோண்டப் பெருமலே பிணிக்கப்பெறுகின்றன வெனச் சமத்காரமாகக் கூறியிருக்கின்ருர்.

இவன் சிறந்த வனப்பும் நல்லொழுக்கமும் இன்பச் செவ்வியு முடையனு யிருந்தா னென்றும், வடநாட்டு அரசர்க்கும் பிறநாட்டு மன்னர்க்கும் பயங்கரனுயிருந்தா னென்றும், இலவந்திகைப்பள்ளியிலே துஞ்சியவன் என்னும் அறியப்படுகிருன். ஆலத்தூர் கிழார் என்ற புலவர் இவன் மரித்தமை கேட்டு, 'வன்மை யென்பதே இறந்து சுடுகாடு சென்று விட்டது' என்று பெரிதும் வருந்தினர்.

* இனி நம் நலங்கிள்ளிக்கு மாவளத்தான் என்னும் பெயரிய தம்பி ஒருவன் உண்டென்று முன்

* குறுந். 349. புறம் 27, 28, 29, 30, 31, 32, 33, 44, 45, 47, 61, 62, 63, 68, 73, 75, 174, 225, 382, 400.

னமே கூறினோ மல்லவா? அவனைப்பற்றிய ஒரு சிறு கதையினை ஈண்டுக் கூறுவோம்.

ஸம்மாவளத்தான் தன் தமையனைப் போலவே பெரும் புலவன்; ஆனால் சூதாடுவதில் பெரிதும் விருப்ப முடையவன். ஒருகால் அவன் தனது அரண்மனைக்கு வந்த பிராமணரான தாமப்பல் கண்ணனார் என்ற ஒரு பெரிய வித்துவானுடன் சூதாடினான். அக் கண்ணனார் சூதாட்டத்தின் தந்திரங்கள் அனைத்தும் நன்றாய் அறிந்தவர். அவர் பல ஆட்டங்களில் சூதாடும் காயை மறைத்துத் தமக்கு ஜயம் என்று சொல்லி வந்தார். மாவளத்தான் அவர் செய்த சூதை அறியாது, தான் தோற்றதாகவே நினைத்து, ஒப்புக்கொண்டு வந்தான்.

இப்படி இருக்கையில் அவ்வித்துவான் ஓர் ஆட்டத்தில் *அவ் வட்டுக் காயைக் கையால் மறைக்க, அதனை மாவளத்தான் பார்த்து விட்டான். உடனே அவன், வெகுண்டு "ஆ ஆ! இப்படியேயா நீர் எல்லா ஆட்டங்களிலும் †கவறுகளை மறைத்து, ஜயித்துக்கொண்டு போகிறீர்? இதுவும் சூதாட்டத்தின் ஒரு பகுதியா" என்று அவ்வட்டினால் அவர் முகத்தில் எறிந்தான்.

எறியவே அக் கவறுபட்டு, அவர் நெற்றியில் இரத்தம் கண்டது. உடனே கண்ணனாரும் கடுங்கோபங் கொண்டு, "ஓ! மாவளத்தான்! உனது குலத்திலுள்ள முன்னோர்களில் ஒருவனாவது பிராமணருக்கு அவமானம் செய்ததில்லை; நீ இத்தகைய தகாத செய்கையைச் செய்ததனால், சிபியின் சந்ததியைச் சேர்ந்தோ

---

* வட்டுக்காய்-சூதாடும் காய். † கவறு - சூதாடும் காய்.

யல்லவென்று நினைக்கிறேன். உனது பிறப்பில் எனக்குச் சந்தேகம் உண்டாயிருக்கிறது'' என்றார்.

சிறந்த வித்துவானும், பிராமணோத்தமனுமான கண்ணனார் அவ்வாறு வெறுப்புடன் பேசவே, மாவளத்தான் ஒரு நொடியில் கோபமாறி, "ஐயோ! நாம் முன் பின் பாராமல் என்ன காரியம் செய்துவிட்டோம்! பிராமணரை அவமானம் செய்த பழி நமக்கு எப்படிப் போகும்"! என்று நினைத்து, மிக்க நாண முடையவனாய்த் தலை குனிந்து நின்றான்.

அவ் விளவரசனது அந்த நிலைமையைக் கண்ட அக்கண்ணனார் தாமும் அந்த க்ஷணத்திலேயே கோபமாறி, "ஓ! மாவளத்தான் நீதான் அந்தச் சிபியின் குலத்தில் உதித்த உத்தமன்! ஏனெனில், நான் கவறு காந்து பிழை செய்திருக்கவும், அதற்காக என்னை நீ வெறுத்துக் கொள்ளாததன்றி,'நாம்தாம் பிசகு செய்துவிட்டோம்போலும் என்று நினைத்து, மிகவும் நாணினையே; இப்படித் தமக்கு அபராதம் செய்கிறவர்களைப் பொறுத்து, 'நாம் ஒரு வேளை பிழை செய்திருப்போம்' என்று நினைக்கும் சீரிய குணம் சிபியின் குலத்தார்க்கே உளது. அக்குணத்தை நீ இபபோது விளங்கக் காட்டினையாதலால், சிபியின் சந்ததியினாய் என்பதிற் சிறிதும ஐயமில்லை'' என்று புகழ்ந்து அவனை மகிழ்வித்தார். *

பின்பு புலவர்களாகிய அவ்விருவரும் முன்போல மிக்க நட்பாளராகி, அளவளாவி வந்தார்கள்.

---

* புறம். 43.

# அத்தியாயம் 11

இக் கதையின் தொடக்கத்திலே, குடக்கோ நெடுஞ் சேரலாதனோடு வேற்பஃறடக்கைப் பெருவிறற் கிள்ளிக்குப் போர் நிகழ்ந்ததென்று கூறினோம். இப்போது அச் சேரலாதனைப் பற்றிய ஒரு வரலாற்றினைக் கூறுவோம்.

அச் சேரலாதன் சிறந்த சூரனேயன்றிக் கொடையாளியுமாய்த் தன் கையிலகப்பட்ட எந்த அபூர்வமான வஸ்துவையும் படித்த வித்துவான்களுக்குக் கொடுத்து மகிழ்வித்துவர, ஒரு காலத்திலே அவனுக்கு ஒருவராலும் வருணித்து முடியாத பேரழகும் ஒளியும் உடையதான ஒரு சிறந்த முத்தாரம் கிடைத்தது. அதனை அச்சேரன் விருப்போடு கழுத்தில் அணிந்துகொண்டிருக்க, அக் காலத்திலே அவனது அவைக்களத்திற்குக் 'கழாத்தலையார்' என்ற ஒரு புலவர் வந்தார். அவர் மிகச் சிறந்த வித்வான். கபிலர் போன்ற மகா வித்வான்களாலும் மெச்சப்பெற்ற அழகிய பாடல்சள் பாட வல்லவர். மற்றும் போர்க்களத்தையும், போரிற் பிரதாபங்காட்டி வீழ்ந்த வீரரையும் பலபடியாகப் புகழ்ந்து கூறுவதில் இணையற்றவர். மேலும் சாவவும் வாழவும் பாடவல்ல பெரியார். அவர் அச்சேரராஜனைப் புகழ்ந்து அழகிய பாடல்கள் பாடினார்.

அதைக் கேட்டதும் அச்சேரன் மிகவும் களிப்படைந்து, அவ்வித்துவானுக்கு ஏராளமான பொருள் கொடுத்தான். அப்படிக் கொடுத்தும் தான் கொடுத்தது சிறிதென்று அவ் வரசனுக்குத் தோன்ற, அவன்

"ஓ! புலவரே! உமது கவிகளுக்கு எவ்வளவு பொருள்கள் கொடுத்தாலும் பற்ரு. ஆயினும், நான் இதோ அணிந்திருக்கிற இவ் ஆரத்தைக் கொடுப்பின் ஒருவாறு என் மனம் திருப்தியாகும். நாளை எனக்கும் சோழன் பெருவிறற் கிள்ளிக்கும் போர் தொடங்கப் போகிறது. அந்த யுத்தகளத்தில் என்னை வந்து பாரும். நான் போரில் அவனை ஜயித்துவிட்டு வீரலக்ஷ்மி சமேதனுய் இவ்வாரத்தை உமக்கு அணிவேன்" என்ருன். *

கேட்ட கழாத்தலையார், "வேந்தே! நீ நிரம்பப் புத்திமான். உனக்கு நான் ஒன்றும் புதிதாகச் சொல்ல வேண்டுவதில்லை. ஆனல் ஜயாபஜயம் ஒருவர் பங்கல்ல; நாளைப்போரில் நீ தோற்றுப்போனல், மானியாகிய நீ ஆவி பேணி ஊர் திரும்பமாட்டாய். அப்பொழுது இவ் வாக்குத் தத்தம் வீணுய்ப் போய்விடும். மாலையிற்படுத்தவன் காலையில் எழுந்திருப்பது நிச்சயமில்லை. நான் அவ்வாரத்தின் மேலுள்ள ஆசையால் இவ்வாறு சொல்லுகிறேனென்று நினையாதே. அறங்களை உடனுக்குடனே செய்யவேண்டும். தருணம் தப்பினல் அவ்வறஞ் செய்யும் புண்ணியம் கிட்டாதென்று பெரியோர் கூறுகின்றனர். ஆதலால் உனக்கு விருப்பமிருந்தால், இப்பொழுதே நீ அதனை எனக்குத் தானஞ்செய்து விடு', என்ருர்.

கேட்ட சேரன், "நீர் கூறுவது சரி; ஆனல், நான் இவ்வாரம் கழுத்தி லிருக்கச்செய்தே போர் செய்ய அவாவுகின்றேன். நாளைத் தவருது நீர் போர்க்களத்

* புறம். 202, 270, 288, 289, 368.

னுக்கு வந்து சேரும்'' என்று சொல்லிவிட்டு, யுத்த ஸந்நாகனுயினுன்.

கழாத்தலையார் அவ் வாரத்தின்மேல் விருப்பங் கொண்டிலரேனும் மன்னவன் கட்டளையை மறுக்க வேண்டா மென்று மறுநாள் போர்க் களத்திற்குப் போகவே, நாம் முற்கூறியாங்கு இரு திறப்படையும் பட்டழிய, அச் சேரனும் சோழனும் கொடும்போர் செய்து, ஒருவர் கை வேலால் ஒருவர் மருமத்திற் புண்ணுற்றுக் குற்றுயிரினராய் வீழ்ந்து கிடக்க, அவ்விரு வரசர்களின் தேவிமார்களும் தத்தம் கணவன்மார் மார்பினைப் புல்லிக்கொண்டு, உயிர்விடச்சித்தராயினுர்.

அதைக்கண்டு கழாத்தலையார் மிகவும் புலம்பி வாடிநிற்க, அப்போது அச்சேரனுக்குத் தன் கழுத்தி லுள்ள ஆரத்தை யெடுத்து, அவர்க்குத் தானஞ்செய் யச் சக்தியில்லாது போயிற்று. கழுத்தின்கண் ஆரத் தோடு உயிர்போகாது துடித்துக் கிடக்கும் அவ் வேந் தனைக் கண்டு அப் புலவரும் மிகவும் வருந்தினர். அவ ரைக் கண்டு அவ் வேந்தனும் பெரிதும் துக்கித்தான். வாய்விட்டு ஒன்றும் பேசக் கூடவில்லை. புலவரோ அச் சேரனை ருணத்தினின்றுங் காக்க, அவ் வாரத்தைக் கழற்றிக் கொள்ள, சேரன் உயிர் நீத்தான்.

இவனுக்குச் செங்குட்டுவன் என்றும், இளங்கோ என்றும், ஆடுகோட்பாட்டுச் சேரலாதன் என்றும் மூன்று புதல்வருண்டு. இம் மூவருள் செங்குட்டுவன் இளங்கோ என்ற இருவரது விருத்தாந்தத்தை முத லிற் கூறுவோம்.

* குடக்கோ நெடுஞ் சேரலாதனுக்கு இரு மனைவியருண்டு. அவருள் ஒருத்தி சூரியகுலத் தரசனாகிய சோழன் மகள் நக்கிள்ளை எனப்படுவாள். இவளுடைய புத்திரரே முற்சொன்ன செங்குட்டுவனும் இளங்கோவுமாவர். மற்றொருத்தி வேள் ஆவிக்கோமான் பதுமனுடைய மகளாவள். இவள் புத்திரனே ஆடுகோட்பாட்டுச் சேரலாதன். இவனைப் பற்றிப் பின்பு கூறுவாம்.

இந்நெடுஞ் சேரலாதன் ஒருநாள் தன் புத்திரர்களில் முற்கூறிய இருவருடன் அத்தாணி மண்டபதது வீற்றிருக்கையில், ஒரு சோதிடன் அரசனை ஏற இறங்கப் பார்த்து, "வேந்தே! உனக்குச் சீக்கிரத்தில் ரணகளத்தில் மரணம் சம்பவிக்கும், உனக்குப் பின் உனது அரசினை வகிக்க இச் செஙகுட்டுவனிலும் இவ் விளங்கோவே தக்கான் ஆவன். இவனுக்கு முடி சூட்டி விடுக" என்றான்.

இப்படிச் சொல்லவே, மூத்த குமாரனான செங்குட்டுவன் மன முளைந்து, சோதிடன் மீது மிக்க கோபமும்,தம்பி இளங்கோ மீது கரைகடந்த பொறாமையும் உடையனாகி, அவ் விளங்கோவைக் கண்ணெரி தவழ நோக்கிச் சர்ப்பம் போலச் சீறிப் பெருமூச்சு விடுவானாயினன். இதைக் கண்ட இளையனான இளங்கோ, "ஆ! ஆ! நான் கல்வியில் மிக்கோனென்றும் ஞானியென்றும் பெயரெடுத் திருப்பதற்குப் பயனென்ன? ஒருவர்க்கு வலிமையும் சுகமும் மனமொத்த உடன் பிறப்பினாலேதான் உண்டாகின்றன. மன மொவ்வாத சகோதரனுடையான் வலிமையையாவது சுகத்தையாவது

* பதிற். 5, 6 ஆம் பத்துப் பதிகஙகள்.

அடைவதில்லை. அவன் எடுத்த வுடம்பு பாழ்தான். இதற்குத் திருஷ்டாந்தம் ராமன் அன்புடைய தம்பி மார்களால் சுகமடைந்ததும், பாண்டவர் பகைமையை யுடைய சகோதரர்களால் துன்பமடைந்ததுமே ஆகும். ஆதலால், நம்முடைய இவ்வுடம்பு பாழாகா திருக்க வேண்டுமானால், நமது சகோதரன் நம்மோடு மாறு கொள்ளா திருப்பதற்கு என்ன செய்ய வேண்டுமோ அதைச் செய்யவேண்டும். நமது சகோதரன் தன் இஷ்டப்படி இவ்வுலக அரசை ஏற்று ஆளட்டும், நாம் விண்ணுலக அரசை ஏற்று ஆளுவோம்; அப்படியானால் இருவரும் ஒத்து வாழலாம்'' என்று சொல்லிக் கருவூரின் கீழ்பா லுள்ள திருக்குணவாயில் என்னும் தலத்தில் சென்று, ஜைன சமயத்தைத் தழுவித் துறவு பூண்டவராய், ஓராருகன் கோயிலிற் றங்கிவிட்டார். *

அதைக்கண்ட அச் செங்குட்டுவன், தான் செய்த பிழைக்காக மனம் வருந்தித் தன்னையே நொந்து கொண்டு, தனது தம்பியின் சகோதர வாத்ஸல்யத்தை மெச்சி, அவ் விளங்கோவோடு எப்போதும் சேர்ந் திருக்க ஆவல் கொண்டவனாய், அவனது ஆலோசனையையே எப்போதும் கேட்டு' ராஜ்ய காரியத்தை நடத்தி வர, இருவரும் ஆயுளுள்ள வரையில் இன்புற்றிருந் தனர். இவ் விளங்கோ துறவு பூண்டமையால இளங் கோவடிகள் என்று வழங்கப்பட்டார். இவரே சிலப் பதிகார மென்னும் நூலை யியற்றித் தம் தமையன் பெயரை உலகுள்ளளவும் நிலைத்திருக்கச் செய்தவர்.

சேரநாட்டிலே அதன் இராஜதானியாகிய கருவூரகத்தே சிறந்த சூரனும் கல்வி கேள்விகளில் மிக்கோனு

* சிலப். பதிகம் அடியார். உரை; ஷை வரந்தரு. 173-82.

மாய் அந்துவஞ்சேரல் இரும்பொறை யென்றொரு சேரன் அரசாண்டு வந்தான். அவனுக்கு 'ஒரு தந்தை' என்பா னொருவனது மகள் வாழ்க்கைத் துணைவியா யிருந்தாள். பொறையன் பெருந்தேவி என்ற அவ ளோடும் அவன் இல்லறம் நடாத்தி வருங்காலையில் அவனுக்குச் 'செல்வக் கடுங்கோ ஆழியாதன்' என்று ஒரு தவமகன் பிறந்தான். அம் மகனை அவன் அன் போடு வளர்த்துக் கலைகள் பயிற்றுவித்துச் சிறந்த சூரனும், நல்லொழுக்க முடையோனும், சத்திய சந்த னுமாகப் பண்ணி, உலகம் புகழ விளங்கினான். *

அக் காலையில் அவனுக்கும் சோழவள நாட்டின் இராஜதானியான உறையூரகத்தே யிருந்து செங்கோ லோச்சி வந்த முடித்தலைக் கோப்பெரு நற்கிள்ளிக்கும் பகைமை யுண்டாயிற்று. அதைக் கண்டு ஆற்றாத அந் தணச் சிரேஷ்டரான மோசியார் என்ற புலவர் அவ் விருவர் மனக்கோட்டத்தையும் நீக்கி, அவர்களை நட் பினராக்கவேண்டு மென்று முயன்று, அப்படியே ஆக்கி வைத்தார். வைக்கவே, சிநேகித ராகிவிட்ட அவ்விரு வேந்தரும் சிறிதுகாலம் தத்தம் பழைய பகைமையை மறந்து, அளவளாவி வருகையில், ஒரு காலத்தில் அச் சோழன் தனது படைவீரர் பலருடன் யானைமீதேறித் தன் நட்பினனான சேரலனைக் காணக் கருவூருக்குவந்து சேர்ந்தான்.

வரவே சேரன் களித்து, அச் சோழனுக்கு மரி யாதை செய்யும் பொருட்டுத் தன் இராஜதானியாகிய கருவூரின் பக்கத்தேயுள்ள 'வேண்மாடம்' என்ற ஒரு

---

* பதிற். 7. பதி. புறம் 13. தொல். பொருள். 629. பேரா.

திறந்த மாளிகையின் வாசலிலே தனது படை வீரரிற் பலரை அணிபெற நிறுத்தி, தான் அவனை எதிர்கொள் ளும் பொருட்டு முடவரும் அவ் வுறையூரின் கண்ணே யுள்ள ஏணிச் சேரியில் வசிப்பவரும் புலவருமான அம் மோசியாரோடு அம் மாடத்தின் மேலே நின்றுகொண் டிருந்தான்.

அக்காலத்திலே அச்சோழன் ஏறிவந்த பட்டத்து யானையானது திடீரென மதம்பட்டுப் பாகன் வசத் தைக் கடந்து, அம் மாடத்து வாசலிலே அணி அணி யாய் நின்றுகொண்டிருந்த சேரன் படைவீரர்மீதே விழுந்து, அவர்களிற் பலரைத் துவைத்து விட்டது. அதைக்கண்ட சேரன் சேனாபதி, "ஆ! ஆ! இச்சோழன் கட்டாளன்போல வந்து, நம்மரசனுக்கு ஊறு செய்ய வல்லவோ சூழ்ந்தான்!" என்று விபரீதமாக எண்ணி, அச் சோழன்மீது கணைகளைப் பொழிந்தான். அதைக் கண்ட சோழன் படைத்தலைவன், "ஓகோ! இச்சேரன் நம்மரசனை வஞ்சித்துப் பற்றவல்லவோ இங்கு வருவித் தான்!" என்று மாறாக நினைத்து, "நமது உயிர்போமள வும் போர் செய்து, நம்மரசனை விடுவிப்போம்" என்று துணிந்து, சேரன் படைமேல் விழுந்து தாக்கினான். ஒரு நொடிக்குள் இரு திறத்தாரும் ஒருவரை யொரு வர் விபரீதமாக வெண்ணிக் கொடும் போர் செய்யத் தொடங்கிவிட்டனர்.

இவ்வனர்த்தத்தை அவ் வேண்மாடத்துமீதிருந்து கண்ட மோசியார் ஒரு நொடிக்குள் உண்மை இவ்வா றாகுமென ஊகித்தறிந்து, அப் போரை அமமட்டோடு நிறுத்திவிட வெண்ணி, 'வேந்தே! இச்சோழன் உன்

னைப் பகைத்து வந்தானல்லன்; அவன் யானை மதம் பட்டதால், அது வேண்டியவர் வேண்டாதவர் அறியாது பிழை செய்து விட்டது. உன் படைவீரர் அச்சோழன்மீது மாரிபோலக் கணை எய்வதால், அவன் புலி நிறக் கவசம் சிதைந்து அவன் ஊறுபாடு எய்துவான். அவன் நோயிலனாகி ஊர் சென்றடையக் கடவன்! அவனைப் பகையா திருத்தல் உனக்கு அறமாகும்'' என்று பலவுஞ் சொல்லி, அப்போரை நிறுத்துவித்து, இரு வேந்தரையும் சமாதானப்படுத்தினார்.

அதன் பின்னர் அப் பெருவேந்தர் இருவரும் தம் ஆயுளுள்ளவரையில் பகைத்துக் கொள்ளாமல் நட்பினராய் வாழ்ந்து வந்தனர். அவர்கள் காலஞ் செல்லவே, அவ் வந்துவன் மைந்தனான செல்வக் கடுங்கோ ஆழியாதனுக்கும் முடித்தலைக் கோப்பெரு நற்கிள்ளியின் புதல்வனான கிள்ளிவளவனுக்கும் பகையுண்டாயிற்று. அக் கிள்ளிவளவன் பழையன் மாறன் என்ற பாண்டியனைத் துணை சேர்த்துக்கொண்டு நம் ஆழியாதன்மீது போரேற்று வந்தான். * நம் ஆழியாதன் அவ்விருவரையும் கூடற்புறத்தே வென்று, அவர்நாடுகளைக் கைப்பற்றிக் கொண்டான். அவ் விருவரும் அவனைப் பணிந்து பிழை பொறுக்குமாறு வேண்ட ஆழியாதன் இரங்கி, அவர்களைப் பண்டுபோல அரசராக்கினான். இது நிகழ்ந்த சின்னாள்கட்குள்ளேயே, அவ் விருவரும் கலகஞ் செய்வாராயினரென்றும் அதனால் தமிழ் நாட்டில் கொடும் போர் விளைவதாயிருந்ததென்றும், அது விளையா வண்ணம் கபிலர் ஆழியாதனைச் சமாதானஞ் செய்தனரென்றும் முன்பே கூறினோம்.

* அகம். 346. பதிற். 7, 8 ஆம் பத்தும் ஷை பதிகங்களும்.

இனி இவ்வாழியாதன் திருமாலிடத்துப் பெரிதும் பக்தியுடையனு யிருந்ததோடு, அத் திருமால்போல நீலமேக ச்யாமள வண்ணனாய்க் கண்டவர் கண்கவரும் பேரழகு வாய்ந்தவனாயும் விளங்கினான். இவனுக்கு அருந்ததிக் கற்பினாளும், செந்திரு வனப்பினாளுமான ஓரில்லக் கிழத்தியுண்டு அவள் வேளாவிக் கோமான் பதுமனது மற்றொரு மகளாவள். ஆகவே குடக்கோ நெடுஞ் சேரலாதனும் இக் கடுங்கோவும் சகலர்களாவர்.

இவன் அரசு செய்த காலத்தில் பூமிஏராளமான விளையுளைப் பொழிந்தது. வியாபாரமோ பற்பல தேசங்களோடு மிக்க மேன்மையாக நடந்து வந்தது. கொடுமணம், பந்தர் என்ற இவன் நாட்டுத் துறைமுகப்பட்டினங்கள் குபேர ஸம்பத்துடன் பொலிவுற் றிருந்தன. இவன் மலைகளில் சந்தனம் தமாலம் தேக்கு மிளகு முதலிய விலையுயர்ந்த பொருள்களும், கடறுகளில் மாணிக்கங்களும், சுரங்கங்களில் பொன் வெள்ளிகளும் மிகுதியாகக் கிடைத்தன.

இவன் 'நகையினும் பொய்யா வாய்மை' யோனாய், வேள்விகள் பல செய்து தேவரைத்திருப்தி செய்வித்தும், புத்திரர்களை யீன்று பிதுரர்களை மகிழ்வித்தும், அதிதிகளைப் புறந்தந்து உலகத்தினைக் காத்தும், கலையின்று தத்துவ விசாரஞ் செய்து ஞானவைராக்கியங்களில் முற்றி இருடிகளை இன்புறுத்தியும், எப்போதும் ஸந்துஷ்டியுடையனாப் விளங்கினான். இவனுடைய புரோகிதனைக் காட்டிலும் இவன தர்மந் தெரிந்தவனென்றும், மாசற்றுப் பரந்தஉள்ளமுடையோ னென்றும் உலகம் இவனைப் புகழ்கின்றது.

இவன் புத்திரர்களுள் பெருஞ்சேர லிரும்பொறை யென்னும் சூரன் எல்லாரினும் மிக்கவன்; அவனைப் பற்றி முன்னமே ஒரு கதை கூறப்பட்டது; பின்னரும் அவனைப் பற்றிச் சில கூறுவோம்.

## அத்தியாயம் 12

முன்னம் மேலைக் கடலோரத்திலேயுள்ள தொண்டி யென்னும் பட்டினத்திலே சேர ராஜனான சேய் என் பான் செங்கோலோச்சி வந்தனன் எனச் சொன்னோம். அவன் மாந்தரன் பொறையன் கடுங்கோ என்பானது புத்திரனும், யானையினது பார்வைபோலும் பார்வை யுடையவனுமா யிருந்தமைபற்றி, யானைக்கட்சேய் மாந் தரஞ் சேரலிரும் பொறை என்று வழங்கப் பட்டான். அவன் தன் பிதாவைப் போலவே அறிவு, அருள், கண்ணோட்ட முதலிய நற்குணங்கள் நிரம்பியவனாய்க் 'குறுங்கோழியூர் கிழார், கூடலூர் கிழார், பொருந் திலிளங்கீரனார் முதலாகப் பலவித்துவான்களை ஆதரித் தும், பல நூல்கள் இயற்றுவித்தும் தொகுப்பித்தும், உலகத்திற்குப் பேருபகாரம் செய்துவந்தான். அத னால் புலவர்கள் பலரும் அவனிடத்துப் பேரன்பும் பெருமதிப்பு முடையவராய், அவனைச் சாவாத அமர னென்றும், அவன் காக்கு நாடு புத்தேளுலகத்தை யொக்கு மென்றும் புகழ்ந்தனர். *

ஒரு காலத்திலே அச் சேரனுக்கும் நெடுஞ்செழி யன் என்ற பாண்டியனுக்கும் பகைமை யுண்டாயிற்று.

* அகம். 142. புறம். 17, 18, 20, 22, 23, 24, 53, 72, 229; தொல். பொருல். சூ. 91. நச். உரை.

அப் பாண்டியனே நிரம்பப் படித்து அறிவு முதிர்ந்தவன்; மாங்குடி மருதனுர் கல்லாடனுர் முதலிய பல புலவரைத் துணையாகக்கொண்டு, பகைவர் அணுகற்கரிய வலிமையோடு மதுரையின் கண்ணே அரசாண்டு வந்தவன். அறிவில் மிக்காரும சூராருமாகிய இவ் விருவருக்கும் கொடும்போர் மூள, போரில் பெரிய தந்திரியாகிய நெடுஞ்செழியன் அச்சேரனை நுண்ணிய பல உபாயங்களாலே வென்று கைப்பற்றித் தனது நாட்டிற் கொண்டுபோய்ச் சிறையிலே அடைத்துவிட்டான். விடவே, மிக்க மானியும் ஆண்மையோனுமான அச் சேரலன் பெரிதும் மனங்கொதித்து, "இச் சிறையினின்றும், தப்பி எவவாறு வெளியேறலாம்?" என்று ஆலோசிக்கையில் அவனுக்கு ஓர் உபாயந்தோன்ற, அவ்வுபாயத்தால் தன் கைகாலகளிலுள்ள விலங்குகளைக் கழன்று விழும்படி செய்து, நடுயாமக் கருக்கிருளிலே அச்சிறைக் கோட்டத்தின் மேல்மாடத்தினின்றும் பூமியிற் குதித்து, அப்போது அவ் விடத்துக்கு வந்திருந்த தன் நண்பரும் புலவருமான குறுங்கோழியூர் கிழாருடன் கூடிப்பகைவர் யாருமட அறியாமலே தொண்டிப் பட்டினம்போய்ச் சேர்ந்தான.

இச் சிறிய வெற்றியால் இப் புலவர் திருப்தியடைந்தாரில்லை. ஏனெனில் அவர் சோதிடத்தில்மிகத் தேர்ச்சி பெற்றவ ராதலால், அச் சேய் அரசனுக்கு ஜாதகரீதியாய்ப் பீடைவருமென்று கண்டு, தினமும் கவலைகொண்டிருந்தார். ஒரு காலத்தில் அம்மாந்தை நகரத்தைச் சூழ்ந்த கடற்கழிகளிலே மேய்ந்துகொண்டிருந்த அந் நாட்டுப் பக்ஷிகளெல்லாம் வேற்றுநாட்டுக்

குப் பறந்து செல்ல, வேற்று நாட்டுப் புட்கள்பல அக் கழியிடத்தே மேய்வதற்கு வந்திறங்கின.

இவ் விஷயத்தை அக் குறுங் கோழியூர்கிழார் கவனித்த வளவில் அவருக்கு அடிவயிற்றில்இடி விழுந் ததுபோல விருந்தது! ஏனெனில், ஒரு நாட்டுப்பழம் புட்கள் அந்நாட்டை விட்டுப் போமாறுலும் வேற்று நாட்டுப் புதுப்புட்கள் அன்று வந்து சேருமாறுலும் இராஜாவுக்குப் பிராண ஹானி வருமென்பது சோதிட நூற்றுணிபு. உடனே அவர் வித்வான்கள் பலரை வரு வித்து, அப் புள் ஏதத்திற்குச் சாந்திகள் செய்யுமாறு வேண்டினூர். சேரவரசன் அப்படியே பல சாந்திகள் செய்து, எப்பொழுதும் வித்துவான்கள் மத்தியிலேயே யிருந்து தமிழ் வளர்த்து வந்தான். ஆயினும் அக்குறுங் கோழியூர்கிழார் தம் மரசனுக்கு இனி ஆபத்தில்லை யென்று மன வமைதிகொண் டிருந்தாரில்லை. அந்தவரு ஷம் பங்குனி மாதத்தில் ஒரு நக்ஷத்திரம் விழப்போ கின்றதென்றும், அஃது அச் சேரனது ஜன்ம நக்ஷத் திரத்தை நலிந்துவிடப் போகிறதென்றும் சோதிடம் கணித்திருந்தார். அஃது அப்படி நேராவண்ணம் நவக் கிரகங்களுக்குப் பூஜையும், ஆலயங்களுக்கு விசேஷ உற் உற்சவமும், வறியவர்க்குத் திலம், மகிஷம் முதலிய தானங்களும் செய்வித்து வந்தார்.

என்ன செய்துதான் என்ன! வினைப்பயனை வெல்ல யாராலாகும்? முன் கணித்திருந்தபடி அப் பங்குனி மாதத்திலே ஒருகொடிய நக்ஷத்திரம் விழ, அது சேய் அரசனது ஜன்ம நக்ஷத்திரத்தை நலிந்தமையால் ஏழு நாள்களுக்குள் இவன் மரண மடைந்தான்.

இச் சேரனால் தொகுக்கப் பெற்றது ஐங்குறுநூறு என்னும் அரிய வொரு நூலாகும். தொகுத்தவர் கூடலூர் கிழாராவர். இவனை மிக்க வீரனென்றுபரணர் புகழ, கபிலரை இவன் 'வெறுத்த கேள்வி விளங்கு புகழ்க் கபிலன்' என்று புகழ்ந்துளான்.

## அத்தியாயம் 13

பொன்னி எனப்படும் காவிரிபாயும் பூவிரி பொழில் சூழ் சோழ நாட்டிலே உறையூரிலே சிறந்த வீரனும் புலவனுமாய்த் 'தித்தன்' என்று ஒரு சோழன் அரசாண்டு வந்தான். அவனுக்குப் பகைவர் பலராதலால், அவன்பிடவூர்கிழார் மகன் பெருஞ்சாத்தனைத் *துணைக் கொண்டு தானிருந்து அரசுசெய்த உறையூரை அணுகற்கரிய புறங்காடுடையதாகச் செய்து, வாழ்ந்து வந்தான். அவனுக்குப் பேரழகும் கற்பும் வாய்ந்த ஐயையென்றொரு மகளும் வலிமையும் வனப்பு மிக்கநற்கிள்ளி என்றொரு மகனும் பிறந்து, செல்வமாய் வளர்ப்பிக்கப் பெற்றனர். அவர்களுள் நற்கிள்ளி என்ற அப் புதல்வன் காளைப்பருவமெய்தியுங்கூட அரசருக்குரிய கல்வி, ஆண்மை, துணிவு கடைப்பிடி என்ற சூர லக்ஷணங்கள் யாதுமின்றிக் கோழை மனத்தினனா யிருந்தான்.

அதை நோக்கிய தித்தச் சோழன், மிக்க வியசனமுற்று, அக் குமாரனுக்கு ஆயுதப் பயிற்சியும் யானையேற்றங் குதிரை யேற்றம் முதலியனவும் கற்பிக்க, இந் நற்கிள்ளி அவற்றைக் கற்காது, மகளிர்போல உடம்

---

* இவன் முடி மன்னர்க்கு மகட் கொடைக் குரியவேள்.

பெல்லாம் போர்த்துக் கொண்டும், பலகறை, கழங்கு முதலியன ஆடிக்கொண்டும், அரண்மனையை விட்டு வெளிப்படாது, அறுசுவையுண்டி உண்டு காலங்கழித்து வந்தான். அதனால் அரண்மனையி லுள்ளார் யாவரும் இவனைப் 'போர்வைக் கோப் பெருநற்கிள்ளி' என்று இழித்துக் கூறலாயினர். அதனைக் கேட்ட அத்தித்தன் இம் மகன்மீது வெறுப்புற்று இவனைத் தன் நாட்டினின்றும் துரத்திவிட்டான். நாடிழந்த இவன் வேற்றுத் தேயம் பலவற்றினுஞ் சென்று நெடுங்காலம் புல்லரிசிக் கூழைத் தின்று திரிந்து கடைசியில் ஒரு நாள் பின் வருமாறு எண்ணுவானாயினன்: "நமக்கு உண்டாயிருக்கும் இவ் வின்னுமைக்கு நாமே காரணம்; நாம் தூங்கெயி லெறிந்த தொடித்தோட் செம்பியன் மருதனல்லவா? இன்று முதல் நாம் விற்போர், வாட்போர், மற்போர் முதலிய எல்லாப் போரிலும் தேர்ச்சிபெற்று, என்னினுயர்ந்தார் யாவருமில்லை யென்று உலகம் புகழ விளங்கக் கடவேம்!" என்று உறுதி செய்துகொண்டான். கொண்டவன் அவ் வுறுதிப்படி பிரதி தினமும் அவ் வித்தைகளிற் பயிற்சி செய்துவந்து, மிகச் சீக்கிரத்தில் அவற்றில் தேர்ச்சி பெற்றான். விசேஷமாக மற்போரில் இணையற்ற சூரனென்று இவன் பெயரெடுத்தான். "முயற்சி திருவினை ஆக்கும்" அன்றோ!

அதன்மேல் இவன் தன்னை வந்து அடுத்த பல வாலிபர்களுக்கும் அவ்வித்தைகளைப் போதித்து, அவர்களைச் சீடர்களாக்கிக்கொண்டு, அவர்களுடன் நாடு நாடாய்ச் சென்று, தனது பிரபாவத்தை ஆங்காங்குக் காட்டிப் பெரும் புகழ்பெற்று வந்தான்.

அப்படிச் செய்துவருங் காலத்திலே, முக்காவல் நாட்டிலே, ஆமூரென்னுமூரிலே, சிறந்த வலிமை படைத்தவனும் மற்போரில் ஒப்பாரும் மிக்காரும் இல்லையென்று புகழ் வாங்கினவனுமான ஒரு மல்லன் உளன் என்று கேள்வியுற்று, உடனே அவ்வாமூர்க்குச் சென்று, அம் மல்லனை இவன் போருக் கழைத்தான். அழைக்கவே, அவன் இவனைப் பார்த்து நகைத்து, "ஐயோ! சோழன் மகனே! விதி உன்னைப் பிடர்பிடித்து உந்த என்பால் வந்தனையே யல்லாமல், நற்காலத்திற்கு வரவில்லை" என்று இகழ்ந்து பேசிப் பின்பு இவனோடு போருக்கு ஆரம்பித்தான்.

சிறிதுநேரம் இருவரும் கண்டவர் வியக்குமாறு மற்போரின் பலபல வரிசைகளைக் காட்டிக் கொடும் போர் புரிந்தனர். அவர்களுடைய தோள் புடைப்பினாலும் தாளுதைப்பினாலும் விண் செவிடுபட்டது. கடைசியில் நமது நற்கிள்ளி அம்மல்லனைக்கீழேதள்ளி, மண்டியிட்ட தனது முழங்காலால் அவனது மார்பை அழுத்திக்கொண்டு, மற்றொரு காலால் அவன் கைகால் முதலியவற்றை அசைக்க வொட்டாமல் அமுக்கி, அவனை முதுகின்கண் வளைத்து, மூங்கிலைத் தின்னுவதற்கு முயலும் ஒரு யானையைப்போல, அவன் தலையும் காலுமாகிய இரண்டிடமும் முறிய மோதிக் கொன்றெறிந்தான்.

இவ்வருஞ் செய்தி உலகமுழுதும் பரவி, இவன் தந்தையான தித்தன் காதினுக்கும் எட்டிற்று. எட்டவே, 'போரென்னவீங்கும் பொருப்பன்ன' புயத்தானான அத்தித்தன் இவனிடத்துக் கொண்டிருந்த சினமெல்லாம் அடங்கினவனாய், இவனை வருவித்து அன்

புடன் தழுவிக்கொண்டு, "இன்றுதான் நான் புத்திரப் பேறுபெற்றேன்" என்று கொண்டாடிச் சோழராச்சிய பட்டாபிஷேகஞ் செய்வித்தான்.

தன் முயற்சியினாலேயே சிறப்பெய்திய பெருநற்கிள்ளி சிறந்த பதவியை எய்தித் தன்பால் காதல் கொண்டவளும், சிறந்த கல்வி கற்றவளும் பெருங்கோழி என்னு மூரிலுள்ள நாய்கனுக்கு அரும்புதல்வியுமான நக்கண்ணையை மணந்து, சுகித்திருந்தான்.

இவ்வாறிருக்கையில் வடுகர் நாட்டிலே குறும்பு செய்திருந்த கட்டி என்னும் அரசன் தான் முன்னம் கழுமலப் போரில் சோழன் செங்கணானால் தோல்வியுற்றுப் போனதை நினைத்து மனங்கொதித்துத் தனக்கு நண்பனான பாணன் என்ற வடநாட்டு அரசனைத் துணை சேர்த்துக் கொண்டு, ஓரிரவில் உறையூர் வந்து அதனைப் புறத்துள்ள காவற் காட்டில் ஒளிந்துகொண் டிருந்தான்.

அப்படி யிருக்கையில் சிறந்த புலவனும் கொடையாளியுமான அத்தித்தன் பால் பரிசு பெறவேண்டி, வந்த பல பாணரும் கூத்தரும் சூதரும் அதிகாலையிலே அரசனைத் துயிலுணர்த்தத் தம் கிணை முதலிய பல்லியங்களையும் கலகலவென முழக்கினர். அதைக் கேட்ட அக்கட்டியும் பாணனும், "ஓகோ! நாம் ஒளிந்திருப்பது அத்தித்தனுக்குத் தெரிந்து விட்டது போலும்! அவ

* நற். 19, 87; அகம். 6, 122, 152, 188, 226; புறம். 80-5, 352, 395. தொல். பொருள் சூ. 30, 68, 83, 472. நச். பேரா.

னது ரணபேரியின் முழக்கமே இவ்வளவு பெரிதானால், அவனுடைய படையின் தொகை எவ்வளவு பெரிதாயிருக்கவேண்டும்! இவனோடு நாம் பொருவது ஆபத்தாகவே முடியும்" என்று நினைத்துப் போர் தொடுக்காமலே ஓடிவிட்டார்கள்.

## மலையமான் திருமுடிக்காரி

நடுநாடெனப்படும் மலையமாநாட்டிலே திருக்கோவலூரினை இராஜதானியாகக் கொண்டு மலையமான் திருமுடிக்காரி என்றோரரசன் கோல்கோடாது ராச்சிய பரிபாலனஞ்செய்து வந்தான். அவன் புலவர்களிடத்தும் வறியவர்களிடத்தும் அந்தணர்களிடத்தும் பேரன்பும் பெருந் தயையுமுடையவனாய்த் தன் கையகத்துள்ள எதனையும் அவர்களுக்கு வீசி, 'இவ்வாறுங் கொடையாளி வேறுசிலர் உண்டுகொல்!' என்று உலகம் மருளும் படிப் புகழ்மாலை சூடிவந்தான். அவன் நாடு முழுவதும் வேள்வித் தீ வளர்த்த அந்தணர்க்குத் தானஞ் செய்யப்பெற்றதென்றும், தேர்கள் எல்லாம் புலவர்களுக்கு ஈயப்பெற்றன வென்றும், அதனால் அவன் கடையெழு வள்ளல்களில் ஒருவனாயினான் என்றுங் கூறுப. *

செங்கோலினையுடைய அரசனாலும் நாடு வறுமையுறாதலால், இக் காரியின் நடுநாட்டில் பஞ்ச மென்பதே பஞ்சமாயிருந்தது. இவன் நாட்டிலோடும் பெண்ணையாறு தெய்வத் தன்மை பெற்றதாயும் என்

* சிறுபாண்; அகம் 35; புறம் 152 4, 158.

றும் பிரவகிக்கும் ஜீவ நதியாயும் விளங்க, இவன் மலையான முள்ளூர்மலை பல்வளனும் கெழுமி, நறுமலர்க் கானங்கள் செறிந்து புகழ்பெற்றிருந்தது. மலையரணும் காட்டரணுமுடைய அந் நடுநாட்டிலே நம் காரி சிறந்த வீரனைப் தன் முள்ளூர்ப் புறத்தே ஒன்றுகூடித் தனை எதிர்த்த ஆரியரை வென்று ஓட்டி, மூவேந்தர்களாகிய சேரசோழ பாண்டியர்களாற் பெரிதும் போற்றப் பெற்று வாழ்ந்து வந்தான்.

இக்காரி மன்னன் 'வடமீன் புரையும் கற்பி' னளான தன் ஏகபத்தினியுடன் இல்லறம் வழுவாது நடாத்தி வர, அவனுக்குத் தன்னையே ஒத்த நற்குணமுடையராய்த் தெய்வீகன் என்றும் ஏறுதித் திருக்கண்ணன் என்றும் இரண்டு மைந்தர் பிறந்து, 'இவர் தந்தை என்னோற்றான்கொல்' என்னும் சொலலை உலகஞ் சொல்லுமாறு அறிவும் அருளுமுடையராய் விளங்கினர். இவ்விரு புதல்வரையும் அக்காரி இளமை முதல் போரிற பயிற்றுவிக்கக் கருதி அவர்களை உடனழைத்துக்கொண்டு, 'காரி' யென்னுந் தனது வாலுளைப் புரவியை யூர்ந்து, இரவே புறப்பட்டுச்சென்று பிறமன்னர் ஆனிரைகளைக் கவர்ந்து, ஆண்டுத் தன்னை யெதிர்த்த ஆன் கிழவரைத்தனது இணையற்ற விற்றிறத்தால்வென்றோட்டித் தனது முள்ளூர் மலையிற் கொணர்ந்து சேர்ப்பான்.*

இத்தகைய வீரனை அக்காரி முன்னம். ராஜசூயம் வேட்பெரு நற்கிள்ளிக்குத் துணையாய்ச் சேர

* நற். 170, 291; குறுந்தொகை 312; புறம 174; வில்லிபாரதம் பாயிரம் 8.

மான் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும் பொறையைப்போரிற் புறங்கொடுத் தோடுமாறு செய்தானென்று கூறியுள்ளோம். * அதன்பின் அக்காரி செய்த வீரச்செய்கைகளைக் கூறுவோம்: யானைக்கட்சேய்க்கு நெருங்கிய உறவினனும் சிறந்த வீரனும் வள்ளலுமாய் அஞ்சி அதிகமான் என்றோரரசன் கொல்லிக்கூற்றத்தேயுள்ள தகடூரில் அரசாண்டு வந்தான், அவன் தன் கிளைஞனை சேய்மாந்தரனுக்கு உற்ற அவமானத்தைப் பொறாதுத் தன்னையே ஒத்த சூரனும் வள்ளியோனும் அச்சேய்மாந்தரனுக்கு உறவினனுமான வல்வில் ஓரியென்பானுடன் சேர்ந்து நம் காரிமீது போர்தொடுக்கச் சித்தனாயிருந்தான். இச் செய்தியை ஒற்றர்மூலமாக வறிந்த காரியின் நண்பனான அச் சோழன் உடனே தன் சேனாபதியான மத்தி யென்ற பெருவீரனுக்கு ஆட்போக்க, அப்போது அம்மத்தி யானை வேட்டைமேற் காட்டிற்குச் சென்றிருந்தமையால் வாராதொழிய அதனாற் கடுஞ் சினங்கொண்ட சோழன், எவ்வேலையினையும் நிறுத்திவிட்டுப் போருக்கு எழுகவென அவனை ஏவ, அம்மத்தி வேட்டையைத் துறந்துவிட்டு வந்து ஒரு பெரும் படையுடன் காரியோடு கூடிக்கொண்டு கொல்லிக் கூற்றத்தை யணுகினன். அப்போது அவர்கட்குத் துணையாய்க் களங்காய்க்கண்ணி நார்முடிச் சேரல் தன் சேனாதிபதியான பிட்டன் என்பவனை அனுப்பினான். இச் சேரலைப்பற்றிப் பின்பு கூறுவோம்.

இம் மூவருங் கூடிய சேனை கொல்லிக் கூற்றத்திலே ஓரியோடு கூடியிருந்த அதிகனோடுபொருதது.

* சங். சிந். பக்.

அப்போரில் மத்தி அவ் வதிகமானை (இவனுக்கு எழினிஎன்றுபெயர்) வென்று, அவன் பல்லைப் பிடுங்கிவிட, காரி மன்னன் ஓரியைக் கொன்று, அவனுக்கு உரித்தான கொல்லி மலையைப் பற்றித் தனக்கு உதவிபுரிந்த சேரலனுக் கீந்துவிட்டான். மத்தியோ தான் எழினியின் பல்லைப் பிடுங்கின வீரச்செயலைப் பிரசித்தப் படுத்தத் தனது வெண்மணிவாயில் என்ற நகரத்துக் கோட்டை வாயிற் கதவில் அப்பல்லை அழுத்தி மகிழ்வாருயினுன். இவ்வாறு வெற்றி முழுவதும் நம் காரியின்புறமாக விருந்த போதிலும் அஃது பின்னர் அவனுக்கு தோல்விக்கும் ஏதுவாயிருந்தது. அதனை மேலே கூறுவோம்.

சோனுட்டில் சோழர் குடியில் வேறு ஓர் பகுதியினராய் அரசு செய்து வந்தவரில் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் என்பான் ஒருவன் அவ் வதிகமானுக்கு நெருங்கிய நண்பனுகவிருந்தான். ஆதலால் தோற்றுப் பல்லிழந்து ஓடிய அவன் அக் கிள்ளிவளவன்பால் அடைக்கலம் புக்குச் சிலகாலம் தங்கி யிருந்தான். அதற்குள் சேரநாட்டில் அரசு செய்த களங்காய்க் கண்ணி நார்முடிச் சேரனுக்கும் கிள்ளிவளவனுக்கும் பகை யுண்டாகுமாறு அவ்வஞ்சி செய்துவிடவே, அவ் வளவன் தனது பெரும்படையோடு கருவூர் மேற் சென்று, அதை முற்றுகைபோட்டு, அதைச் சூழ்ந்துள்ள காவற் காட்டு மரங்களை வெட்டிச் சாய்த்தான். அதைக்கண்ட அச் சேரலன் நடுநடுங்கிப் போய்த் தனது நட்பினனுன காரிக்குத் தூதர்மூலமாய்ச் செய்தி அனுப்பி விட்டுத் தான் தன் கோட்டைவாயிற்கதவினை அடைத்துக்கொண்டு உள்ளேயே இருந்துவிட்டான்.

அப்போது ஆங்கு வந்த அச்சேரன் தோழரான ஆலத்தூர் கிழார் என்ற புலவர் அக் கிள்ளிவளவனை நோக்கி, "வேந்தே! நீ இவ்வளவு சமீபமாக வந்து போர் தொடுக்கவும், அச் சேரலன் எதிர்த்துப் போர் கொடாது யிருக்கிறான். அவனோடு போர் செய்தல் உனது பெருமைக்குப் பொருத்தமன்று. சுத்தவீரனை ஒருவனுடன் பொருதலே உன்னையொத்த வீரர்களுக்கு அழகு" என்றார். கேட்ட சோழன், "இஃதொக்கும்" என்று கருவூரை யகன்று தன்னூரை யடைந்தான.

பின்பு, அவ்வாலத்தூர் கிழார் அச் சேரன்பாற் சென்று பேசிக்கொண்டிருக்க, அவ்வரசன் தனக்கு நட்பினனான காரி அப்போது தன் மக்களுடன் ஆங்கு வந்து உதவிக்கு இருக்கும தைரியத்தினல் தன் நிலை மையை மறந்து,| "புலவரே! பாரும் எனது பிரதா பத்தை! கிள்ளிவளவன் ஏதோ என்னை ஜயித்து விடு வான் போல 'அண்ணல் யானை அணிதேர் புரவி ஆட் பெரும் படையுடன்' இங்கு வந்தானே! யாது செய் தான்? எனது பராக்கிரமத்தைக் கேட்டானே இல்லை யோ! புலி முழக்கங்கேட்ட புலவாய்போல ஓடிவிட் டான்!" என்றான்.

கேட்ட ஆலத்தூரார் நகைத்து, "வேந்தே! நீஎன் வீணே சூரனொருவனை அவனில்லாத சமயத்தில் பழித் துரைக்கின்றனை? நீஎதிர்த்துப் போர் கொடாமையால், உன்னை அவன் மடிந்த உள்ளத்தோன் என்றிகழ்ந்து விட்டுப் போய்விட்டான் என்பதை நான் அறிவேன்; அதை நீ மறந்தனையோ?" என்றார்.

உடனே அச் சேரலன் கோபித்து, "ஓ புலவரே! அச் சோழன்மீது நான் போர் தொடுத்து, அவனைக் கொன்று வருகின்றேன், பாரும்" என்று சொல்லிக் காரியை உடன்கொண்டு, சோழ நாட்டின்மீது படையெடுக்கச் சித்தனாயிருந்தான். அதனை யறிந்த கிள்ளிவளவனும் யமன்போலச் சீறியெழுந்து, தனது படையோடு புறப்பட்டுக் கருவூர் சேர, இரு திறத்தினருக்கும் ஒரு கொடிய போர் நடந்தது. அதில் அச் சேரனும்காரியும் தோற்றோடிப் பெருஞ்சேர லிரும்பொறையிடம் அடைக்கலம் புக, அக் காரியினது மக்கள் இருவரும் அச் சோழன் கையிற் சிக்கிக் கொண்டனர். வெற்றி யெய்திய கிள்ளிவளவன் சின மடங்காது, கருவூருள் புகுந்து அவ்வூர்க் கோட்டையை இடித்து, ஊரை அழித்துவிட்டுத் தன் நாடுவந்து சேர, அவனோடிருந்த அஞ்சி காரியின் மீதுள்ள கடுங்கோபந் தணியானாய், அவன் மக்களை யானையின் காலில் இட்டுக் கொல்லும்படி அச்சோழனைத் தூண்டினான். தூண்டவே, அவ்வாறுசெய்ய அரசன் ஆணையிடக் கொலைஞர் அப்பிள்ளைகளைப் பற்றிக் கொலைக்களம் இழுத்துப்போயினர்.

இந்த விஷயத்தைக் கோவூர்க்கிழார் கேள்வியுற்று மிக்க பரபரப்புடன் உறையூர் வந்து சேர்ந்து, கொலைஞர் அப் பிள்ளைகளை யானைக்கு இடும் முன்னே அக் கிள்ளிவளவன்பாற் சென்று, "வேந்தே! நீ சிபியின்குலத்தினை யல்லையோ? அச்சிபி அற்பபக்ஷியாகிய புறாவைக்கூடக் காத்த அருளுடையான். இச் சிறார்களோ புலவர்களைக் காப்பதையே கடமையாகப் பூண்ட அருளாளனான காரி மன்னனது புதல்வர்கள். மேலும் இவர்கள், தமக்கு ஏதோ ஆபத்துவந்து விட்டதென்று முத

வில் அஞ்சி அழுது, பின்பு யானை கண்ட விநோதத்தால் அழுகையை மறந்த அவ்வளவு இளம் பிள்ளைகள், இப்பொழுதோ நாமிருக்கிற இச் சபையைக் கண்டு பயந்து புதிதாக அழுகின்றனர். ஒன்றுந் தெரியாத இச் சிசுக்களின் சிறுமையையும் உனது பெருமையையும் பார்; பின்பு உனது இஷ்டம்போலச் செய்; நீயோ வித்துவான், மிக்க வீரன்; உனக்கு அதிகம் சொல்ல வேண்டுவதில்லை'' என்றார்.

கேட்ட சோழராஜன் தன் குலப்பெருமையையும், அப் புலவரது சொல்லையும் நன்கு ஆலோசித்து, அப் பிள்ளைகளிடம் இரக்க முடையவனாகி, உடனே அவர்களை விடுவித்து விட்டான். அஞ்சிக்கு இச் சம்பவத்தால் மனம் பெரிதும் கொதிக்கலாயிற்று! தன்னை வென்று தன் பல்லைப் பிடுங்கி ஓட்டுதற்குக் காரணனாயிருந்த அக் காரிமேற் பழிவாங்கா திருப்பதா என்று அவன் நிமிஷந்தோறும் எண்ணிப் புழுங்குவானாயினான். அக்குறிப்பினை யறிந்த சோழன் அவ்வஞ்சிவசம் தன் படையின் ஒரு பகுதியை ஒப்படைத்து, "நீ போய்க் காரியின் ஊரை அழித்து உன் பகையினைத் தணித்துக்கொள்; இப்பேதைச் சிறார்களை விட்டுவிடலாம் என்றான்.

கேட்ட அஞ்சி, ஒருவாறு தெளிந்து, சோழன் படையுடன் சென்று கோவலூரை முற்றி, ஆண்டிருந்து கொடும் போர் பொருத, காரியின் சேனாபதி முதலியோரை யரிதில் வென்று, அவ்வூரை யழித்துப் பிறவரண்களையும் பொடி செய்து, ஒருவாறு சினமடங்கித் திரும்பினான். சிறிது காலம் அஞ்சிக்கு நல்ல கிரகம்

உச்சமாயிருந்தது. அப்போது அவன் பலபல அருஞ் செயல்கள் செய்தான். அதனை "அஞ்சி அதிகமான்" என்னும் கதையில் விஸ்தாரமாகக் கூறுவோம்.

இனிச் சோழன் கிள்ளிவளவன் குளமுற்றத்திலே துஞ்சினான். அவனோடு அஞ்சியின் வலியும் ஒடுங்கிற்று. இக் காலத்தே காரி தனக்குக் காலம் சேர்த்திருப்பதனைக் கண்டு காய்க் கண்ணிக்கும் பெருஞ்சேர லிரும்பொறைக்கும் உணர்த்தி அவர் துணையைப் பெற்று அஞ்சியை யெதிர்த்துச் சென்று அவனை வென்றொழித்துத் தன் நாட்டினை மீளவும் பெறறுக் களித்திருந்தான்.

இவன் மக்களிருவருள் ஏனாதித் திருக் கண்ணனைப் பற்றி முன்னமொரு முறை குறிப்பிடப்பட்டது. பின்னரும் இவர்களைப்பற்றி விரிவாய்க் கூறுவோம்.

## கரிகால் வளவன்

சோழவள நாட்டிலே உறையூரிலே சேட்சென்னி யென்ற ஒரு சோழன் அரசாண்டு வந்தான். அவனுக்கு வீரத்தில் மிக்கவனும், கொடையில் சிறந்தவனுமான இளையோ னென்றொரு தம்பியுண்டு. அவ் விளையோன் அழகு விளங்குவதும் பகைவர்க் கச்சம் விளைப்பது மான பல தேர்ப்படைகளை யுடையவனாய் மாற்றரசரைப் போரில் வென்று அவரது நாட்டைத் தன் வசமாக்கிக் கொண்டு, பெரும் புகழோடு விளங்கினமை

* பதிற். 32; 8 - ஆம் பத்து, பதி. அகம் 209, 211; புறம் 36,39, 46, 99, 158, 315.

யால், "உருவ பஃறேர் இளஞ்சேட் சென்னி" என்னும் காரணப் பெயர் பெற்றான்.

இவனுக்கு அழுந்தூர் வேளாளரான இரும்பிடர்த் தலையார் என்ற ஒரு வித்துவானுடைய சகோதரி வாழ்க்கைப் பட்டிருந்தாள். வேளிர் ஆவர், தம் நிலங் களைத் தம் கீழுள்ள குடிகளுக்குச் சிறிது சிறிதாய்ப் பகுத்துக்கொடுத்து உழுவித்து, அவர்களிடத்திருந்தும் இறையைப்பெற்றுக்கொண்டு உண்ணும் வகுப்பினர். இவர் "மண்டில மாக்களும் தண்டத் தலைவருமாய்ச் சோணாட்டுப் பிடவூரும், அழுந்தூரும், நாங்கூறும்; நாவூரும்; ஆலஞ்சேரியும், பெருஞ்சிக்கலும், வல்லமும், கிழாரும் முதலிய பதிகளிற்றோன்றி, வேளெனவும் அரசு எனவும் உரிமை யெய்தினோரும், பாண்டிநாட்டுக் காவிதிபட்ட மெய்தினோரும், குறுமுடிகுடிப் பிறந் தோர் முதலியோருமாய், முடியுடை வேந்தர்க்கு மகட் கொடைக்குரிய வேளாளராகுப." இவ் வேளாளருள் பிடவூர்கிழார் மகன் பெருஞ்சாத்தனைப்பற்றியும், ஆலஞ் சேரி அயிந்தனைப் பற்றியும் முன்னரே கூறியுள் ளோம். இவ்வேளிர் முற் கூறியாங்குநிலங்கடந்த நெடு முடி யண்ணல் வழியினராய்த் துவராபதியிலிருந்தும் அகத்தியராற் கொண்டுவரப்பெற்றவராதலினால் அக் குடியிலுள்ள கன்னிகைகளைத் தமிழரசர்களாகிய சேர சோழ பாண்டியர்கள் விரும்பி மணம்புரிவதிற் றடை யில்லை யென்க.

இவ்விளையோன் மணந்த அழுந்தூர் வேண்மாள் அழகிலும் கற்பிலும் சிறந்து, தன் கணவனுக்கு ஒத்த அன்புடையவளாய் விளங்க, அவரது இல்லற

வாழ்க்கை மிக்க இனிதாக நடைபெற்றுச் சிறிதுகாலத்திற்குள்ளே அவ் விளையோன் மனைவி கருத்தரித்தாள். அதை நோக்கிய அவ்விளஞ்சேட் சென்னி மிகக் களித்துத் தனக்குச் சற்புத்திரன் பிறக்கப்போகிறா னென்று களித்திருக்க, அதே காலத்தில் மூத்தோனான சேட்சென்னியின் மனைவியும் கருத்தரித்துத் தன்கணவனுக்குப் பெரு மகிழ்வூட்டினள். ராஜபத்தினிகளாகிய இருவர் கருப்பமும் நாளுக்கு நாள் முதிர்ந்து இருவர்க்கும் பிரசவகாலங் கிட்டிற்று. அப்போது அரசன் கோயிலுக்கு ஒரு சான்றோர் வர அவரைச் சேட்சென்னியும் இளஞ்சேட் சென்னியும் வணங்கி, "ஐயன்மீர்! சோழர் குடியை விளக்கும் மகன் எமக்குப்பிறப்பானா?" என்று வினாயினார். கேட்ட சான்றோர் சிறிது காலம் சும்மா விருந்து பின்பு, வேந்தர்காள்! இன்றே நும்மிருவர்க்கும் மைந்தர் பிறக்கவேண்டும்; ஆனால் இன்று தாழ்த்து நாளைப் பிறக்கும் மகன் இத் தமிழகத்தினை ஒரு குடையின் கீழாளுவான்; அவனுக்கு முடிசூட்டல் நலம்" என்றார்.

அதற்குச் சேட்சென்னியும் இளையோனும், "எங்களுக்குச் சோழராச்சிய பாரத்தினைத் தாங்க வலியுள்ள மகன் ஒருவன் வேண்டுமே யல்லது மூததோனே அரசுரிமையை யெய்தவேண்டும் என்ற முறையை நாங்கள் முக்கியமாகக் கருதவில்லை. இளையவனாயினும் தாங்கள் கூறும் ஓரையில் குணச்சிறப்போடு பிறக்குமவனே இந்நாட்டை ஆளக்கடவன். அவனே எமது தாயத்தை யெய்துக" என்றனர்.

சான்றோர், "நும் துணிவு நன்றாகுக" என்று சொல்லிப் போய்விட்டார். அவர் போய சிறிது நேரத்

திற்குள் சேட்சென்னியின் பெருந்தேவியும் இளையோன் கோயிலாளும் பிரசவ வேதனைக்குள்ளாக, மூத்தோன் மனைவி அன்று மாலையிலேயே ஒரு மைந்தனையீன்றெடுத்தனள். இம் மகன் பிறந்ததும், சேட்சென்னியும் அவனைச் சேர்ந்தாரும் முகம் வேறுபட்டுத் 'தாயமெய்திப் பிறப்பான் இளையோன் மகனல்லனோ' என்று மனம் புண்ணுற்று வாடியிருக்க, அழுந்தூர் வேண்மாளின் பிரசவ வேதனை சிறிது சிறிதாய்க் குறைந்து, அவள் அன்று கருவுயிர்க்காது, மறுநாளில் அச் சான்றோர் கூறிய சுபவேளையிற் குழந்தையையீன்றெடுத்தாள்.

'தாய் வயிற்றிருந்து தாய மெய்திப் பிறந்'த அம் மகன் மாயோன் போலும் அழகிய வடிவமும் மார்பிற் செம்பொறியு முடையவனாய்க் கண்டோர் கண்களைக் கவர்ந்து கொண்டு விளங்க, தாயுந் தகப்பனும் உடல் பூரித்துத் தமிழகம் ஒரு குடையின்கீழ் வந்து விட்டதென்றே பெருங் களிப்பெய்தினர். ஆனால் அவ்விளஞ் சேட் சென்னிக்குத் தமையனும், அவனைப் போலச் சோழர் குடிக்குரிய ஒன்பதின்மரும் பிறந்த அக் குமாரனுக்கு வரப்போகிற பெரும் பாக்கியத்தை நினைத்தும் பொறாமை கொண்டு, அக் குழவியையும் அதன் பெற்றோரையும் கொன்றுவிடப் பல வகையான சூழ்ச்சி செய்ய, இரும்பிடர்த் தலையாரின் அரிய காவலால் அவர்கள் அழிவுறா திருப்பவே, அவர்கள் தக்க ஒரு சமயம் பார்த்திருந்து, அவ் விளையோன் வசித்திருந்த மாளிகையில் தீவைத்து விட்டார்கள்.

விடவே, எல்லாம் பற்றி யெரிந்துபோய் இளையோனும் அவன் மனைவியும் ஒருசேரச் சாம்பராயினர். இளங்குழவியாகிய அவர்களது புதல்வனும் தீயினுற் பற்றப்பட்டுக் கால்கள் கரிந்து மரணமடையுந் தருணத்திலிருக்க, அக்குழவியின்மாமனாகிய இரும்பிடர்த் தலையார் அப்பெருந் தீயினுக்கு அஞ்சாது மாளிகையினுட் புகுந்து, வேகின்ற அப் பிள்ளையையெடுத்துக் கொண்டு வெளிப்பட்டு வந்து சேர, அதனைக்கண்ட அவ்விளம் பிள்ளையின் பகைவர் அப் புலவர் பெருந்தகையாரின் கையினின்றும் அதனை பறித்து' வஞ்சனையாற் கொன்று போடவேண்டுமென்றுசிறையிலிட்டுக் காவல் செய்தனர்.

அப்பொழுது பேரறிவாளராகிய அப் பிடர்த் தலையார் பலவகையான சூழ்ச்சிகள் செய்து, தம் சகோதரி மைந்தனை அப்பகைவர் கொல்லாமலிருக்கும்படி காத்து, உரியகாலத்தில் சிறையிலிருந்த அவ்விளையோன் மகனுக்கு இரகசியத்தில் வில்வித்தை வாள் வித்தை முதலிய க்ஷத்திரிய தர்மவித்தைகளை முற்றும் பயிற்றுவித்தார். அவன் அவற்றில் நன்கு பழகித் தேர்ச்சி அடைந்து, தக்ககாலம் வருமளவும் தன் வலியை அடக்கிக்கொண்டு சிறையிலேயே யிருந்து, சீர்த்தவிடம் கண்டஒருநாள், நுண்ணிய பல வுபாயங்களால் சிறைமதிலின் கதவினை யுடைத்து வெளிப்பட்டு, ஆங்குள்ள சிறைக்கோட்டக் காவலரை வாளுக்கிரையாக்கி, மறைந் தோடிவிட்டான்.*

*தொல. பொருள். சூ. 30. நச. பொருந். அடி 130,132; 'அரிமாசுமந்த' 'முசசககமமு' என்னும் பாடல்கள். பழ. 105. பட்டின. அடி 221-7· புறம் 4, 266.

அவனது பகைவரோ மனத்திற் கறுவுகொண்டு அவனை விடக்கூடா தென்று தொடரவே; அவன் பல்லிடங்களிலுந் திரிந்தும் புகலிடங் காணமல் "இனிச் சோணாட்டில் நாமிருப்பது ஆபத்துக் கிடமாகும்; சேர நாட்டிற் புகுந்து தலைமறைவாய்த் திரிவோம்; பின்பு காலம் வாய்த்தாற் பார்த்துக்கொள்வோம்" என்று உறுதி செய்தவனாய்க் கருவூருக்கு ஓடி ஆங்கு மறைந்து வசிக்கலாயினான்.

இவ்வாறாகச் சிலகாலம் கழிந்தது. சேட்சென்னியும் இறந்துபோனான். அவன மைந்தர் பலர் அரசுரிமை யெய்துதலைக் குறித்துத் தம்முள் பெருங் கலகப்பட்டுப் பின்பு அவர்களே, "நம் பட்டத்தியானையை அலங்கரித்து விடுவோம்; அஃது யாரை யெடுத்துவந்து சிங்காதனத்து நிறுவுமோ அவரையே நமக்கு அரசரென்று துணிவோம்" என்று தீர்மானஞ் செய்து,* கழுமலத்திற் பிணித்திருந்த அவர் பட்டத்தியானையை அலங்கரித்து விடுத்தனர்.

இத்தனை காலமாகக் கஷ்டகாலம்பிடித்து ஆட்டிய நம் இளையோன் மகனுக்கு இப்பொழுதுதான் நறகாலம் பிறந்தது! எவ்வாறெனில், கழுமலத்தினின்றும் புறப்பட்ட களிறு சோழர் குடிக்குரியோர் பலரையும் புறக்கணித்துவிட்டுச் சோணாடடையே கடந்து, சேரன் தலைநகரான கருவூரகத்தே புக்கு, ஆங்கு மாறுவேடத்துட னிருந்த நம இளஞ்சேட் சென்னி மைந்தனைக் கண்டு, அவன் கடிதிளையனா யிருத்தலையும் பொருட் படுத்தாது, தொழுது, தன் பிடர்த்தலைமீதேஎடுத்துக்

* இக் கழுமலத்தினை சீர்காழி என்பாரு முளர்.

கொண்டு, உறையூர் கொணர்ந்து சிங்காதனத்தில் நிறு விற்று. அக்களிற்றினது இச் செய்கையை ஆக்ஷேபித்துக்கூற ஒருவருக்கும் துணிவில்லாமற் போயிற்று. அப் புதுமையை இனிக்கூறுவோம். *

மதுரை நகரைத் தலைநகராகக் கொண்ட பாண்டி நாட்டிலே அக் காலத்திலே 'பெரும்பெயர் வழுதி' என்றொரு வேந்தனிருந்தான். அவன் வாட்போரில் ஒப்பாரு மிக்காரு மற்றவன். யானை யேற்றத்திலும் அவ்வாறே புகழ்படைத்தவன். அவன் தனது வலிய கையில் வாளேந்தி, யானையை யூர்ந்து, போர்க்களம் புகுந்து விடுவானானால் பகைவர் அவனைக் கூற்றமென்றே கண்டு நடுங்குவர். அதனால் அவன் "கருங்கை ஒள்வாட் பெரும்பெயர் வழுதி" என்று வழங்கப்பட்டான். அவனே பெருங்கொடையாளி. சொன்ன சொல்லைக் காக்கும் உறுதியுடையவன். புலவர்களிடம் பேரன்புடையவன். அவனை நம் இரும்பிடர்த் தலையார் முன்னாலோசனை செய்து நெருங்கிய நண்பனாக்கி வைத்திருந்தார்; அவனிடத்தில் அடிக்கடி சென்றும், உரிய காலங்களில் ஆழ்ந்த ஆலோசனைகளைச் சொல்லியும் அவனுக்கு தம்மிடத்தில் பெருமதிப் புண்டாகும் வண்ணம் செய்துகொண் டிருந்தார், அஃதோடு அவர் சோணாட்டில் நடப்பனவற்றை யெல்லாங் கவனித்து வந்து கூறும்படி பலபல ஒற்றர்களை ஏவியும், தாமும் மாறு வேடத்துடன் சென்று இராஜாங்கத்தில் நிகழும் நிகழ்ச்சிகளை நன்றாயாராய்ந்தும், தம் மருமான் கரிகாலனுக்கு அரசுரிமை கிடைக்கும் நற்காலம் எப்போது வருமென்று ஆவலுற்றிருந்தார்.

---

* பழமொழி 21, 62.

இவ்வாறிருக்கையிலேதான் முன்னம் நாம் கூறிய சேட்சென்னி இறந்து போகவும், அவன் கூமந்தர் அரசுரிமையின் பொருட்டுக் கலகப்படவும் சம்பவித்தது. இச்செய்தி நம் புலவர் பெருமானுக்கு மிகவும்பொருந்திய தொன்றா யிருந்தது. அவர் பெரும் பெயர் வழுதி என்ற அப் பாண்டியன் சமுகஞ் சென்று, வேந்தே! என் மருமான் கரிகாலன் என்பானே சோணாட்டின் அரசுக்கு உரிமை பூண்டவன் என்பதும், அவனைச் சேட் சென்னி முதலாயினோர் சிறை செய்தும், சுட்டும் வஞ்சித்துக் கொனறுபோட யத்தனித்தனர் என்பதும் திருவுளத்திற்குத் தெரிந்தனவே. இப்போது என் மருமான் கடவுளருளாற் பிழைத்துக் கருவூரிலே மாறு வேடத்துடன் அரசர்க்குரிய கலைகள் யாவுங் கற்று இராச்சிய பாரந் தாங்க வல்லவனாய் விளங்குகிறான். அவனையும் சோழா குடிக்குரியோர் பலரில் ஒருவனாக எண்ணி, அவனுக்குள்ள தாயபாகங் கொடுப்பிக்கவேண்டுவது தங்கள் கடமை. உரிய காலத்தில எனக்கு உதவி செய்வதாகக் கூறிய நின் சொல்லே உலகம் பிறழ்வதாயினும் பெயர்த்துக் கூறுயென்பது என் துணிபு" என்று வேண்டிக் கொணடார். *

பெரும் பெயர் வழுதியும் புலவர் சொல்வது நியாயம் எனக்கொண்டு, தன் பெரும் படையுடன் உறையூருக்குவர, அங்கே சோழர் குடிக்குரிய அரசர் தம்முண் மாறுபட்டுத் தம் பட்டத்து யானையை அலங்கரித்து விடுத்து, அது கொணருமவனை அரசனாக அங்கீகரிப்பதாக ஏற்பாடு செய்திருப்பதனைக் கண்டு, அவர்களை

* புறம் 3.

நோக்கி, "நீவிர் இவ்வரசுவா கொணருமவன் எக்குடியானாக விருப்பினும் ஒப்புவீரோ?" என்று கேட்டான்.

அவர்கள், "இவ்வரசுவா சோழர் குடிக்குரியாரையன்றிப் பிறரை அணுகவும் செய்யாது. இதன் உத்தம லக்ஷணத்தைக் கண்டு வியவாத யானை நூல் வல்லவர்கள் யாருமில்லை. இதன் எச் செய்கையையும் நாம் ஒப்புவோம். அதில் ஆக்ஷேபமில்லை" என்று கூறிப் பாகனை விளித்து, உவாவை அலங்கரித்து விடுக", என்றனர்.

அவன் விடவே, நாம் முற்கூறியாங்கு அவ் யானை கழுமலத்தினின்றும் புறப்பட்டு, கருவூரிடைப்புக்கு நம் கரிகாலனைக் கண்டு பணிந்து, அவனைத் தன் பிடர்மேல் அன்போடும் ஏற்றிவந்து உறையூர் சேர்ந்தது. ஆண்டிருந்த அரசகுமரர் யாவரும் கரிகால்வளவனை ராஜ வடிவுடன் கண்டவுடன் பேய்க்கோட்ப் பட்டவர் போல அச்சமும் மருட்கையுமுடையராகி; முகம்வேறுபட்டு, பாண்டியனெதிரே ஒன்றுங் கூற மாட்டாது, கரிகாலனையே அரசனாக ஏற்றனர். இவ்வாறு அவன் சோழவரசனானன். பிடர்த்தலையார் உடம்பு பூரித்தார்.

இனி அவனுக்குத் துணைவலியைச் சேர்த்துத் தர வேண்டியது நம் இரும்பிடர்த் தலையாரின் அடுத்த பொறுப்பாயிற்று. அக் காலத்திலே நாங்கூர்ப்பதியிலே தோன்றிய வேளிர் கூட்டத்தார் மிக்க வலிபடைத்த தண்டத் தலைவரா யிருந்தமையைக் கண்டு, அவர் குடியில் ஓரழகிய மங்கையை எடுத்து நம் கரிகாலனுக்கு மணம் புரிவித்தார். அச் சம்பந்தத்தினால் அவ் வேளிர்

களோடு, தன் மாமன் வர்க்கத்தினரான அழுந்தூர் வேளிர்களும் கரிகாலனுக்குத் துணைவராயினர்.*

இவர்களெல்லாரையும் அக் கரிகாலன் கொடை முதலியவற்றால் தனக்கு விசிதர்களாக்கிக் கொண்டு, உறையூரைப் போக்கி, காவிரிப்பூம் பட்டினத்திலே ராஜதானியை ஸ்தாபித்து, ஆங்கு வெகு சிறப்பாகராச்சியபரிபாலனம் செய்துகொண்டு வந்தான். இவன் புத்திக்கூர்மையும், நடுநிலைமையும் சொல்வன்மையும் மிகப் பிரசித்தமாக விருக்கப் பல சான்றோர்களும் அரசவைக்கு வந்து அரசனை ஆசிர்வதித்துப் போயினர்.

ஒரு காலத்திலே அச்சோழ நாட்டிலே தருக்கத்தில் வல்லவரா யிருந்த வித்துவான்களிருவர் தருக்க விஷயமான ஒன்றில் தம்முள் மாறுபட்டு, அரசவையிற் போய்த் தம் வழக்கைத் தீர்த்துக்கொள்ளுகிற தென்று கரிகாலன் நீதி செலுத்தும் கொலுமண்டபம் வந்து சேர்ந்தார்கள். அப்போது சிங்காதனத்தின் மீது வீற்றிருந்த அரசனைக் கண்டவளவில், "ஆ! ஆ! இவன் கடிதிளையனா யிருக்கின்றானே! இவனிடத்து நம்விவாத விஷயத்தைச் கூறினால், எவ்வாறு அதனை இவன்மனத்துள் ஏற்றுக் கொள்வான்? முதலில் விஷயத்தை வாங்கிக் கொண்டல்லவோ பிறபட்டு முறைசெய்ய வேண்டும்" என்று சொல்லி, ராஜ சபையைவிட்டு அகன்றார்கள்.

அகலவே, அதனைக் கண்ட கரிகாலன் அவர்களது உள்ளக் கருத்தைத் தன் நுண்ணிய அறிவினால் அறிந்து

* தொல். பொருள். சூ. 30 நச். பட்டினப்பாலை.

கொண்டு, ஞெரேலென உட்சென்று, நரைத்த சிகையும் தாடியும் கட்டிக்கொண்டு முதிர்ந்த கிழவன் போன்று வந்து, சிங்காதனத்து அமர்ந்து, அம் முதியோர்களை அழைப்பித்து, "உமது குறை யாது?" என்றான்.

அவர்கள் அக் கிழவன் முகத்துப் புத்திக் கூர்மையும் ராஜதேஜஸ்ஸும் விளங்குவதைக் கண்டு, "இவன் நம் வழக்கைத் தீர்க்க வல்லவனே யாவன், நாம்சொல்லலாம்" என்று துணிந்து சொன்னார்கள். கேட்ட கரிகாலன் மிக மகிழ்ந்து அவர்களது பேச்சிலேயே குணதோஷங்களை எடுத்துச் சொல்லி, இரு திறத்து வாதிகளும், "நியாயம்; நியாயம்" என்று சொல்லும் வண்ணம் தீர்ப்புச் சொன்னான். கேட்ட அவர்களும் சபையிலுள்ள பிறரும் மிகவும் மகிழ்வெய்தினர். *

உடனே கரிகாலன் தனது வேஷத்தை அவ்விடத்திலேயே களைந்துவிட்டுப் பழையபடி இளையனாய்த் தோற்றுவிக்க, கண்ட அம் முதியோர்கள் மிகவும் வியப்புற்று, "இவ்விளைஞனே இவ்வளவு புத்திக் கூர்மையாய் முறைசெய்தான்! ஆ! ஆ! சோழர் குடியின் பெருமை இது! புலிக்குட்டிக்குப் பாய்ச்சும், மீன் குட்டிக்கு நீச்சும் கற்பிக்க வேண்டுமோ!" என்று சொல்லி, அவ்வரசனை வாழ்த்திவிட்டுச் சென்றனர். *

இப்போது நம் வளவனுக்கு உள் நாட்டினைச் சீர்திருத்துவது முதலிற் செய்யவேண்டிய கடமையென்று தோன்றிற்று.† தன் ராஜதானியான புகார்ப் பட்டினத்து

* பொருந். அடி 188; மணி. 4. 107, 108.

* பழ. 21. † "காடுகொன்று நாடாக்கி" பட்டி. அடி.283.

விளைநிலம் நெடுங்காலமாக அளக்கப்படாமல் கண்டபேர் கண்டபடி அனுபவித்துக்கொண் டிருக்கின்றன ரென்பதனை யறிந்து, அவன் அதனைச் செவ்வியுற அளந்து இன்னார் இவ்வளவு நிலம் உழுதார்கின்றன ரென்று கண்டு, அவர் இறுக்க வேண்டிய செய்க்கடன் இத்துணையென்று வரையறுத்துப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று தீர்மானித்தான். அதற்காக அவனங்கு வாழும் குடிகளை யெல்லாம் வருவித்து அவரவர் வசமுள்ள நிலங்களினளவைக் கூறுமாறு கேட்க, அவரவர்கள் தாம் தாம் அனுபவிக்கும் நிலத்தின் அளவை யுரைத்தனர். ஆனால் அவர்களுள் ஒருவன் தான் களவினால் ஆண்டு வருகின்ற நிலத்தை மறைத்து, அரசனுக்கு அறிவியாதிருக்க, அரசன ஏதோ ஐயுற்று, ஒரு சான்றோனை நோக்கி, "நீர் இப்புகாரின் விளைநிலம் இத்துணையென்று அளந்து கூறுக" எனறு கட்டளை யிட்டான். அச்சான்றோன் அளந்து பார்த்த வளவில,களவினால் ஆண்டு வருபவன் நிலம் அகப்பட, அதைக் கண்டு, அவன், "அரசன் முன் இவனைக் கொண்டுபோய் விட்டால், பெரிய தண்டனைக்குள்ளாவான். இவன் இந் நிலங்களை வைத்துக் கொண்டு 'தனக்கென வாழாப் பிறர்க்குரியாள'' னாக விருக்கிறான். இவன் ஆள்கின்ற நிலத்தை நீக்கிக் கரந்து, 'நிலவளவிற் பேதமில்லை' என்று கூறி விடுவோம்'' என்று, அவ்வாறே கூறிவிட்டான்.

கரிகாலன் எல்லாவற்றையும் ஒற்றர் மூலமாகவறிந்து, அச் சான்றோனையும், நிலம் கரந்தார்கின்றானையும் சமுகத்திற் கழைத்து, "என்னை இருவீரும் மோசஞ் செய்தீர்கள்; உம்மைக் கடுமையாகத் தண்டிக்க வேணும்; ஆயினும நற்கருமத்திற்கு அந்நிலம்

பயன்படுவதால் மன்னித்தேன்'' என்று கூறியனுப்பி விட்டான். அவ் விருவரும், பார்த்திருந்த பிறரும் அரசனைப் பெரிதும் கொண்டாடினர். *

இவ்வாறு அக் கரிகாலன் நுட்ப புத்தியுடன் எல்லா ஜனங்களையும் ரஞ்சிக்கச்செய்து நாடாண்டு வருகையில், அவன் பகைவர் ஜனங்களுக்கும் மந்திரி பிரதானி முதலியோருக்கும் சுற்றத்தாருக்கும் அவனிடத்தில்வெறுப்புண்டாகும் வண்ணம் செய்து விடுவதால் தம் மெண்ணத்தை முடித்துக் கொள்ளலாமெனக் கருதி ஒரு சூழ்ச்சி செய்தனர்.

அக் காலத்திலே ஓராட்டிடையனுக்கு மிக்க அழகுவாய்ந்த ஒரு மகளிருந்தாள். அவளைப் பொருள் முதலியவற்றால் அப் பகைவர தம் வசமாக்கிக்கொண்டு, அவளுக்குச் சில விஷயம் போதித்து கரிகாலன் வழக்கமாய் வேட்டை யாடிவரும் காட்டில் சில ஆடுகளுடன் திரியுமாறு செய்தனர்.

அவள் அவ்வாறு திரிந்து வருகையில், ஒரு நாள் நம் கரிகாலன் வேட்டைக்குப் போய்த் திரும்பி மாலைப் பொழுதில் நகருக்கு வருகையில் இடையிலே அப் பெண்ணைக் கண்டு மயங்கி, ''ஓ மங்காய்! நீ யார்?'' என்றான். அவள் அவன் காதல் நோக்கைக் கண்டு, ஸங்கேதப்படி, ''ராஜனே யான் ஓர் அரசன் மகள்; . எங்கள் குலத்து விரோதிகளால் நாங்கள் துரத்தப்பட்டு, இக் காட்டை யடைந்தோம். என் பிதாவை ஒரு புலி விழுங்கிவிட்டது; நான் அநாதையாய் ஓரிடையன் மனையில்

* ''பூந்தண் புனற்புகார பூமிகுறி காண்டற்கு'' பழ. 153.

வாழ்ந்து வருகிறேன். என் வரலாறு இஃது'' என்று அழுதாள்.

கேட்ட கரிகாலன், அவள் விழியம்பு மார்பிற் றைக்க, அறிவிழந்து, "மடந்தாய்! நீ என்னை மணம் புரிவையானால், உன்னை நான் தக்கபடி வைத்து நடத்து வேன்'' என்றான். அதற்கு அவள் சம்மதிக்க, வேந்தன் அவளைத் தன் யானைமீது ஏற்றி வைத்துக்கொண்டு நகரஞ்சென்று, மணம் புரிந்துகொண்டான். அன்று முதல் அக் 'காப்பான் * மடமகள்' ராணியாகி ராஜ போகங்களை யெல்லாம் அனுபவித்து, தான் வந்த காரியத்தை முடித்துக்கொள்ளும் பொருட்டு, அரசனது சுற்றத்தாரையும மற்றப் பெரியோரையும் அவமதித்து வந்தாள். அதனால் அரண்மனையிலுள்ள பலருக்கும் கரிகாலன்மீது சிறிது வெறுப்புண்டாயிற்று. அதனை யறிந்த அரசன், அப்புதுராணி நடந்துகொண்ட சிலகுறிப்புக்களால் அவளது பிறப்பு விஷயத்திற் சிறிது ஐயங் கொண்டு, அதைச் சோதிக்க வேண்டுமென்னு மெண்ணமுடையனாகி, அவளறியாமல் ஜாக்கிரதையாய் அவளைக் கவனித்து வந்தான்.

ஒரு நாள் அப் புதுராணியின் சேடியருள் ஒருத்தி நல்ல பசுவின் பாலைக் காய்ச்சிக் கொண்டுவந்து, "மகாராணீ! நல்ல பால் கொணர்ந்தேன்; பருகியருள்க'' என்றாள். கேட்ட அவள் தான் சிறந்த செல்வத்தில் வளர்ந்தவளெனப் பிறர் கருதவேண்டுமென நினைத்து, அப் பாலைச் சிறிது வாயில் ஊற்றிக்கொண்டு, "சீச்சீ! இஃதென்னை ஆட்டுப்பால் போன்றிருக்கின்றதே! உங்கள்

* காப்பான் — ஆட்டு மந்தையைக காக்கும இடையன.

அரசன் கோயிலில் எல்லாரும் ஆட்டுப்பால்தான் குடிப் பதுபோலும்! எனக்கு இது வேண்டாம்'' என்று கொட்டிவிட்டாள். *

இதை மறைந்திருந்து கேட்டிருந்த அரசன் சட்டென உண்மையை ஊகித்தறிந்து, "இவள் இடையன் மகளே யாதல்வேண்டும்; அன்றேல் இவளுக்கு ஆட்டுப் பாலின் தன்மை எவ்வாறு தெரியும்?'' என்று அவ் விராணியைப் பயமுறுத்தி, அவள் வாயாலேயே பகைவர் செய்தசூழ்ச்சி முற்றும் அறிந்து, பின்புஅவளிடம் தக்கபடி ஒழுகினான். இதனை யறிந்த எல்லாரும் நம்கரிகாலன்மீது முன்னையினும் அதிக அன்பும் மதிப்பு முடையவராயினர்.

நம் கரிகாலனுக்கு நாங்கூர் வேண்மானை யன்றி வேறு பல மனைவியருமுண்டு. † அவர்களுக் கெல்லாம் பல புத்திரர் பிறந்திருந்தனர். அவ் விவரம் பின்பு கூறுவோம். நாங்கூர் வேண்மானுக்கோ ஒரே புத்திரி தான் பிறந்தாள். அவள் பெயர் ‡ ஆதிமந்தி என்பது. அவள் இளங்குழவியாய் இருந்தபோதே அவளை இரும்பிடர்த் தலையாரென்ற கரிகாலன் அம்மான் தம் மனைக்கு எடுத்துப் போய் அருமையும் பெருமையுமாக வளர்த்துச் சிறந்த புலமை வாய்ந்தவளாகச் செய்து விட்டார். அவள் தன் புலமைக்கு ஏற்பப் போழகும்,

---

* பழ. 285. † "மன்னன் கரிகால வளவன மகள்'' சிலப்.

‡ "பொருமுரணெதிரிய புதல்வர் ஓடி யாடவும, முறறிழை மகளிர முகிழ்முலை திளைப்பவும், செஞ்சாந்து சிதைந்த மார்பின்.........திருமாவளவன்'' பட்டி. அடி 295 8. சிலப். வஞ்சி அடி 11.

பெருங்கற்பு முடையவளாய், அடக்கமும் ஒழுக்கமும் நிரம்பிய கன்னியாரத்தினமாக விளங்க, அவளை ஆட்டனத்தி என்ற ஒரு *சேரவரசன் கரிகாலன்பால் இரந்து பெற்று மணந்து கொண்டான். இவ்வாட்டன் அத்தி தான் முன்னம் செங்கணானோடு கழுமலத்தில் போர் செய்தவன். அவன் நர்த்தன சாஸ்திரத்தில் மிகச் சதுரன். † அதனாலேயே ஆட்டன்(கூத்தன்) என்னும் அடைமொழியைப் பெற்றான். மேலும் அவன் ‡பரந்த மார்பும், உயர்ந்த தோளும், சுருண்ட குழலும், இருண்ட விழியுமுடையனாய், ஏற்றியல் நடையும் கூற்றியல் படையுங் கொண்டு ¶ஸர்வாங்கங்களிலும் ஆபரணங்க ளணிந்து, நாரீமணிகளை மயக்குறுப்பானாயினான். இச் சுந்தரனை மணந்த ஆதிமந்தி, தன்னை மகா பாக்கிய சாலியாக மதித்து, அவன் ஆடற்றகைக் கேற்பப் பாடற்றகை யுடையளாய்ப் பிறப்பும், குடிமையும், ஆண்மையும், பிராயமும், ரூபமும், அன்பும், நிறையும், அருளும், அறிவும் செல்வமுமெனப் பத்துவகை

* "வஞ்சிகோன்" சிலப். வஞ்சி. அடி 11.

† "யானுமோர் ஆடுகள மகளே யென்கைக்
கோடீ ரிலங்குவளை நெகிழ்த்த
பீடுகெழு குரிசிலுமோர் ஆடுகள மகனே" (குறுந் 31.)
"சுரியலம் பொருநக்" (அகம் 76.)

‡ "கழாஅர்ப் பெருந்துறை விழவி னாடும்
ஈட்டெழிற் பொலிந்த ஏந்துகுவவு மொய்ம்பின்
ஆட்டனத்தி" (அகம் 222)
"ஏறற்றியல் எழில் நடைப் பொலிந்த மொய்ம்பின்
தோட்டிருஞ் சுரியல் மணந்த பித்தை, ஆட்டனத்தி"

¶ "நறும்பூணத்தி" "கடுந்திறல் அத்தி" (அகம் 336,44,396.)

யிலும் ஒத்து, உலகம் புகழ இல்லுடைக் கிழமை புரிந்து வந்தாள். இவ் விருவரது அன்பின் மிகுதியைக் காணும் ஆசையினால் கரிகாலன் இவர்களைத் தன் நாட்டிற்குச் சந்தர்ப்பம் நேர்ந்தபோதெல்லாம் அழைத்து வந்து விருந்து செய்வித்து வந்தான்.

ஒரு காலத்திலே சோணாட்டிலே வருஷந்தோறும் நடைபெறும் காவிரிப் புதுப்புனல் விழவிற்கு அவ்வத்தி மந்தியர்களைக் கரிகாலன் அழைத்திருந்தான். அவர்கள் மகிழ்ச்சியுடன் புறப்பட்டுச் சோணாடடைந்து, மாயூரத்தின் கீழ்பாலுள்ள கழார் என்னும் ஊரிலுள்ள காவிரித் துறையில் கரிகாலன் தன் குடும்பத்துடனும் மந்திரி பிரதானிகளுடனும் வெகு சிறப்பாகத் திருவிழாவை நடாத்திக்கொண்டிருக்குமிடம் வந்து சேர்ந்தனர். அப்போது ஆட்டனத்தி மிகவழகாய்ப் பிரவகித்து வரும் காவிரியின் அப்புதுப் புனலிலே இறங்கித் தன் பாண்டிலும் மணி முதலியனவும் ஒலிப்பப் பலவகையான நர்த்தனங்களைச் செய்து தனக்கு அச் சாஸ்திரத்துள்ள வல்லமையெல்லாங் காட்டுவான் போல நீந்தினான் * அதனைக் கண்ணுற்ற கரிகாலன் முதலிய எல்லோரும் வியப்பும் மகிழ்வு மெய்தியிருக்கக் காவிரி திடீரென்று பெருக்கெடுத்து ஒரு சுழலில் அவனை அமுக்கிக் கடலிற் புரட்டிக்கொண்டுபோய்த் தள்ளிவிட்டது. இவ்

* "இன்னிசை, ஒண்பொறிப் புனைகழல் சேவடிப் புரளக்
கருங்கச்சு யாத்த காண்பின் அவ்வயிற்று
இரும்பொலம் பாண்டில் மணியொடு தெளிர்ப்பப்
புனல் நயந்து ஆடும் அத்தி" (அகம் 376.)

"விணைபொரு பெரும்புகழ்க்கான
தண்பதங் கொளளுந் தலைநாள்" (சிலப். கடல். 159, 60.)

விஷயத்தைக் கரிகாலன் முதலிற் றெரிந்து கொள்ள வில்லை. நீரில் மூழ்கிய அத்தி நெடுநேரமாக வெளிப் படாது போகவே அவர்கள் கவலை கொண்டார்கள். ஆதி மந்தி "ஐயகோ!" என்று அலறத் தொடங்கினாள். ஒரு நொடியில் ஆங்கிருந்த திருவிழாக் குதூஹல மெல் லாம் "ஹா! ஹா! ஹூ! ஹூ!" என்னும் கூக்குரலாக மாறி, ஒவ்வொருவரும் துக்கிப்பாராயினர்.

அத்தியின் தோளழகிலீடுபட்ட சிலர்; "ஆ! ஆ! அச்சுந்தரத்தோளனோ?" என்றனர்; தாளழகிலீடுபட்ட சிலர், "ஆ! ஆ! அத்தாமரைத்தாளனோ?" என்றனர்; முகவழகிலீடுபட்ட சிலர், "ஆ! ஆ! அச்சந்திரவத னனோ?" என்றனர்; நகையழகிலீடுபட்ட சிலர், "ஆ! ஆ! அச் சுரியிருங்குழலனோ?" என்றனர். இவ்வாறாக அக் கழார்ப்புறம் எங்கும் இரங்கற்குரலே எழுந்தோங்கிப் பரந்தது.

ஆதிமந்தி உயிரேயிழந்தாள் போன்று மூர்ச்சித்து விழுந்து விட்டாள். கரிகாலன் பல்லாயிரம் அரிப்புக் காரர்களை விட்டுக் காவிரியின் எல்லாத் துறைகளிலும், மடுக்களிலும், மரவேர்களிலும், மதகுகளிலும் தேடு வித்தான். கடலிற் கொண்டுபோய்க் காவிரி ஒளித்து விட, இங்குத் தேடினால் யாங்கன பகப்படுவான்? அரிப் புக்காரர்கள் தேடித்தேடிக் கைசோர்ந்து அத்தியகப் பட்டா னில்லையென்று அரசனுக்கு அறிவித்தனர். கரிகாலன் முதலிய எல்லாரும் மிக்க வியசனமுற்று ஊர் திரும்ப எண்ணி, ஆதிமந்தியைச் சமாதானஞ் செய்ய முயன்றனர். அவள் சித்தப்பிரமம் பிடித்துத் தன்னெதிரே நிற்பாரை, "ஆட்டனத்தியைக் கண்

டீரோ! அவனைக் கடல்கொள்ளவில்லை; காவிரிப் புன லும் அடித்துக்கொண்டு போகவில்லை; எங்கேயோ நர்த்தனஞ் செய்யப் போயிருக்கிறான்" என்று புலம்பு வதும் ஓடிஓடிப் பலவிடங்களிலும் தேடுவதுமாக அவர் களுடன் செல்லாமல் ஊரூராய்த் திரியத் தலைப்பட்ட னள். அவ்வாறு திரிந்துகொண்டே வீரர்கள் குழுமி யுள்ள விழாக்களிடங்களிலேயும், மகளிர்கள் கூடித் துணங்கையாடு மிடங்களிலேயும் புகுந்து, "என் காத லனைக் கண்டீரோ? என் காதலனைக் கண்டிரோ?" என்று கேட்டுக்கொண்டே காவிரி சென்ற வழியே சென்று கடலையடைந்து, கடற்கரையிலேயும் நின்று அவ்வாறு புலம்பிக்கொண் டிருந்தனள். *

---

* "காதலற் கெடுத்த சிறுமையொடு நோய்கூர்ந்து
ஆதி மந்தி போலப் பேதுற்று
அலந்தெனன் உழல்வென் கொல்" (அகம் 45)

"சுரியலம் பொருநனைக் காண்டிரோ வென
ஆதிமந்தி பேதுற் றினைய" (அகம் 76)

"ஆதி மந்தியின் அறிவு பிறிதாகி" (அகம் 135)

"மதிமருண்டு அலந்த ஆதிமந்தி" (அகம் 222)

"ஆட்டன் அத்தியைக் காணீ ரோவென
நாட்டின் நாட்டின் ஊரின் ஊரின்
கடல்கொண் டன்றெனப் புனலொழித் தன்றெனக்
கலுழ்ந்த கண்ணள் காதலற் கெடுதத
ஆதிமந்தி" (அகம் 236)

"மன்னன் கரிகால் வளவன்மகள் வஞ்சிக்கோன்
தன்னைப் புனல்கொள்ளத் தான்புனலின் பின்சென்று
கன்னவிற் றோளாயோ என்னக் கடல்வந்து" (சிலப். வஞ்சி. அடி 11-3.) தொல். பொருள். 54. நச். குறுந். 31.

இது நிற்க, காவிரியா லடித்துக்கொண்டு போகப் பட்ட அத்தியோ தெய்வாதீனமாக இறவாமல், குற்றுயிரினனுய்க் கடலில்மிதக்க ஆங்குவசித்திருந்த,மருதி என்ற பாடினி ஒருத்தி அவனைக்கண்டெடுத்துத் தன் இல்லத்திற் கொண்டுபோய் ஆசுவாசப்படுத்தி, முன் போல வலியும் வனப்பு முடையனுய்ச் செய்துவிட்டாள். அவன் அவளுடைய பாடலழகில் ஈடுபட்டும் அன்புடைமைக்கு நன்றி யுள்ளவனுகியும், அவள்விருப்பப்படி அவளோடு கூடவே கடற்கரையில் சிலகாலம் வசித்துவர, ஒருநாள் அம் மருதி தன இல்லத்தருகில் "அத்தியோ! அத்தியோ!" என்று புலம்புமொருபெண் குரலைக்கேட்டு, மிகவிரங்கித் தொனிகேட்ட வழியே சென்று ஆதிமந்தியைக் கண்டு, அருகிற் சென்று, "என்ன ஸம்மா உனக்குற்ற ஆபத்து?" என்றுகேட்க, உடனே ஆதிமந்தி தான் பிறந்ததும் வளர்ந்ததும், கணவனைத் தேடி வாழ்க்கைப்பட்டதும். இருவரும்கருத்தொருமித்து ஆதரவுடன்வாழ்ந்ததும், பின்பு கழாரிற் கணவனை யிழந்து கண்டவிடமெல்லாம் தேடிவருவது முதலாக எல்லாம் விரிவாய்க் கூறினள்.

கேட்ட மருதி மிகவும் மனமுருகித் தன்னிடத்திருக்கும் புருஷனே அவ் வாதிமந்தியின் கணவனுக வேண்டுமென்று ஊகித்து, உயிரை உடலின்றும் பறித்துக் கூற்றுவன் முன் நிறுத்துவது போல அத்தியைத் தன்இல்லத்தினின்றும் கொணர்ந்து வந்து ஆதிமந்தி முன் நிறுத்திக் காட்ட, பார்த்த ஆதிமந்தி உடனே சித்தப் பிரமம் தெளிந்து ஓடிச்சென்று கணவனைத் தழுவிக்கொள்ள, அவனும் அவளைத்தழுவிக்கொண்டு, "இறந்தவர் பிறந்த பயன் எய்தினர் கொலென்"னப்

பேரானந்தமுற்று, நெடுநேரம் ஒருவர் தோண்மேல் ஒருவர் ஆனந்தக் கண்ணீருகுத்து மகிழ்வாராயினர். அக் காட்சியைக்கண்டு நின்ற மருதி, "இனி நாம் ஆட்டனத்தியைக் காணப்போவதில்லை. அவன் இக் கற்புமிக்க கட்டழகியை விட்டு நம்மைக் கண்கொண்டு பார்க்கவுஞ் செய்யானே! இவ்வுடம்பு நமக்கு இனி வேண்டுவதின்று" என்று, கடலிற் புகுந்திறந்தாள்.*

அதனால் பெரிதும் துக்கமுற்ற ஆதிமந்தியும்ஆட்டனத்தியும் நெடுநேரம்புலம்பியிருந்து, பின்னர்த் தம் ஊர் சென்றடைந்தனர். கண்ட கரிகாலனும் பிறரும்அவ் வாதிமந்தியின் காதன் மிகுதியையும் கற்பின் சிறப்பையும் பெரிதும் வியந்து களிகூர்ந்தனர்.

இவ்வாருக நம் கரிகாலன் பல வழியாலும் வந்த ஆபத்து நீங்கி மேம்பாடுற்று, தன் நாட்டினைக்'கொலை கடிந்துங்'களவு நீக்கியும் கோல் கோடாதும் நீதி பிறழாதும் ஆண்டுவர, அவன் தாயாதிகளுக்கு நாளுக்கு நாள் பொருமை அதிகரித்தது. எவ்வாற்ருன் அவனை வென்று தொலைத்துச் சோழ ராச்சியத்தைக் கைப்பற்றிக் கொள்ளலாமென்று அவர்கள் இரவுபகலாய்ஆலோசிப்பாராயினர். நம் கரிகாலனுக்கு வலியிற் சிறந்தவரான இரு கூட்டத்து வேளிர்கள் அன்பின் மிக்க தண்டத் தலைவர்களா யமைந்து, கண்ணினைக் காக்கின்ற இமைபோல அவனைச் சூழ்ந்து காத்துவந்தமையால், அன்னார்க்கு வஞ்சியாது எதிர்நின்றுபொரக்கூடவில்லை.

---

* "மாதிரந் துழைஇ மதிமருண் டலந்த
ஆதி மந்தி காதலிற் காட்டிப்
படுகடல் புக்க பாடல்சால் சிறப்பின், மருதி" (அகம் 222)

அதனால் அவர்கள் சூழ்ச்சிகள் பல செய்து, சோனாட்டிலே மாந்தைஎன்றஊரைத் தலைநகராகக்கொண்டு அரசாண்ட சிறந்த வீரனும், வள்ளலும், தன் குடிகளைக் கண்போலப் பாதுகாத்து வருபவனுமான நெடுஞ் சேரலாதன் என்னும் சேர வரசனுக்கும் நம் கரிகாலனுக்கும் பெரும் பகையுண்டாகும்படி கலகமூட்டி விட்டனர்.

விடவே, அச்சேரன் தன் பகைவனை கரிகாலனது புத்திக் கூர்மையையும் துணைவலி முதலியவற்றையும் நன்கு ஆராய்ந்து, தனக்குத் துணையாகப் பாண்டியன் ஒருவனையும், வேளிர்களுள் நாங்கூர், அழுந்தூர் என்ற இரு கூட்டத்தார் ஒழிய வேறு பதினொரு கூட்டத்து வேளிரையும் சேர்த்துக் கொண்டு, சோனாட்டின் மீதுபடை யெடுத்து வந்தான். அவன் வருகையை நம் கரிகாலன் முன்னதாக வுணர்ந்திருந்தும், இடம் சீர்த்ததாக விருக்க வேண்டியதைக் கருதி, 'வெண்ணி' யென்னும் ஊர்ப்புறத்துத் தனது துணைவரோடு காத்திருந்தான். சேரனும் கடல்போன்று பரந்த தன் பெரும் படையுடன் ஆங்கு வந்துசேர, இரு திறத்துப் படையும் கைகலந்தது. அப்போது கரிகாலன் தன் பகைவர் படையைச் சின்னபின்னமாக்கி, தனது கூரிய வேலை அப்பெருஞ் சேரலாதன் மார்பிற் குறிவைத்து எறிந்தான். எறிகவே, அவ்வேல் அச் சேரலனது கவசத்தைப் பிளந்து, அவன் மார்பைத் துளைத்து, முதுகினுள்ளும் ஊடுருவிச் சென்றது. உடனே அச் சேரலன் மூர்ச்சித்து விழுந்து விட்டான். அதைக்கண்ட அவன் படை வீரரும் துணைக்கு வந்த பாண்டியனும் புறங்கொடுத்து ஓடிவிட்டனர். அதைக்கண்ட கரிகாலன்

துணைவர்களான அழுந்தூர் வேளிர் முதலியோர் மிகப் பெரிய ஜயகோஷஞ்செய்து கரிகாலனைப் புகழ்ந்தனர். *

சிறிது நேரத்தில் அப் பெருஞ் சேரலாதன் மூர்ச்சை தெளிந்து எழுந்தான். தனது முதுகிலுற்ற அப் புண்ணைக் கண்டான். ஆ! ஆ! சுத்தவீரன் புறப் புண்ணுறுவானோ! முதுகிற் புண்ணுற்ற ஒருவன் மானியாயின் உயிர் வாழ்வானோ! பெரு வீரனுக்கு, முகத்திலும் மார்பிலுமன்றோ புண்கள் உளவாயிருக் கும்! இப்புறப் புண்ணுடன் யான் உயிர்வாழேன்'' என்று முடிவு செய்துகொண்டான். உடனே தான் பிடித்திருந்தவாள் ஒன்றொழியத் தனது மற்ற எல்லாச் செல்வத்தையும் துறந்துவிட்டு, வடக் கிருப்பானாயி னான். †இச் சேரலாதன் கதையைப் பின்னர்க் கூறு வோம்.

இவ்வாறு கரிகாலன் ஜயசீலனாகி உலகத்தாராற் புகழ்ப்பெற்று விளங்க, அவன் தாயாதிகள் ஒன்பதின மரும் முன்னையினும் முகம் வெளுத்து, அகம் கரிந்து, புழுங்குவாராயினர். ஒருகால் அவர் ஒன்றுகூடி அக் கரிகாலனைத் தாமே எதிர்த்து ஒருகை பார்த்து விடு வோம் என்று முடிவுசெய்து ஒளியர், அருவாள்

---

* "காய்சின மொம்பிற் பெரும்பெயர்க் கரிகால்
ஆர்கலி நறவின் வெண்ணி வாயிற்
சீர்கெழு மன்னர் மறலிய ஞாட்பின்
*　　*　　*　　*
பதினொரு வேளிரொடு வேந்தர் சாய
மொய்வலி யறுத்த ஞான்றைத் தொய்யா
வழுந்தூர் ஆர்ப்பு" (அகம் 246.)

† புறம் 65, 66. அகம் 55. பொருந். அடி 143, 7.

வட தலையார், இடையர், ஐம்பெரு வேளிர் என்ற இவர்கள் கூடிய ஒரு பெரும் படையைத் திரட்டிக் கொண் டிருந்தனர். இச் செய்தியை நம் கரிகாலன் ஒற்றர் மூலமாக வறிந்து, தன் எதிரிகள் ஒன்று சேர்ந்து அதிக பலமுடையராவதற்கு முன்னரே அவர் களை அழித்து விடவேண்டு மென்று உறுதிசெய்து, அவர் குழீஇச் சதியாலோசனை செய்துகொண்டிருந்த வாகை யென்னும் ஊர்ப்புறத்தே தன் பெரும் படை யுடன் சென்று எதிர்த்தான். அப் பகைவரோ தாம் ஆலோசித்த காரியம் முற்றுப் பெறுவதன் முன்னரே இடையில் நேர்ந்துவிட்ட இவ் வனர்த்தத்தால் தலை தடுமாறி, எதிர்த்த பகைவன் முன் நின்று பொரமாட் டாது ஓடத்தலைப்பட்டனர். * அவ் வோடிய அவர்களை நம் வளவன் விடாது தொடரவே; அவர்கள் தம்கொடி முடை முதலியவற்றைப் போகட்டுவிட்டு மகதநாட்டில் அ. போது அரசு செய்து வந்த நம் கரிகாலன் பகைவ னான ஒரு வேந்தனிடத்து அடைக்கலம்புகுந்துகொண் டனர். கொள்ளவே, கரிகாலன், "நாம் பகைவர்களை உயிருடன் விட்டால் அவர்கள் விருத்தியாகிப் பின்னர் நம்மை யழித்து விடுவார்கள். ருணசேஷமும் பகை சேஷமும் வைக்கக்கூடாது" என்று கொண்டு, அவர் களில் அருவாள் வட தலையாரை முன்னதாக வென்று பணிவிக்கக் கருதி, அவர் நாடான தொண்டை மண்ட லத்திற் புகுந்து பொருவானாயினன். †

ஆங்கு இரு திறத்தார்க்கும் பெரும் போர் நிகழக் கடைசியிற் கரிகாலன் வெற்றிகொண்டு, அவர்களை ஒடுக்கி தன் வசப்படுத்தினன். அக் காலத்திலே அக்

* அகம 125; † பட்டி. அடி 275.

கச்சியம்பதியிலே காமக்கோட்டத்திலே காவற் றெய்வமாகக் கோயில்கொண் டெழுந்தருளி யிருந்த*வரப்பிரஸாதியான ஓர் ஐயனுரை நம் கரிகாலன் அன்புடன் பேணி வழிபட்டு உவப்பிக்க அச் சாத்தனர் உவந்து நம் வளவனுக்கு "செண்டு" என்னும் ஒரு படைக்கலத்தையருளி, "இதனுல் அடியுண்டுமெய்கலங்காதது இவ்வுலகில் எதுவுமில்லை" என்று அநுக்கிரகித்தார்.

கரிகாலன் பெற்றுக்கொண்டு, கோயிலை வலங்கொண்டு ஏத்தி, அங்கிருந்து புறப்பட்டு, ஒளியர் நாட்டினுட்புக்கு அவரை வென்று பணிவித்துப் பின்னர்த் தன் தண்டத் தலைவர்களான வேளிர்களையும் அருவாளர்களையும் ஏவிக் காழூரில் அரசுநடாத்திய கழுவுள் என்னும் இடையர் அரசனை வெல்வித்துப் பின்னர்ப்பிடவூர் வல்லம் முதலிய ஊர்களிற் குறும்பு செய்து வந்த ஐம்பெரு வேளிர்களையும் அடக்கித் தமிழ் நாட்டிற் பகைவர் எவருமில்லையெனச் செய்துவிட்டான். †

இனி வடநாட்டினும் தனக்குப் பகைவர் எவருமிருத்தல் கூடாதென்று அவன் உறுதிசெய்து, நல்ல

---

* "கசசி வளைக்கைசசி காமககோட் டமகாவல்
மெசசி யினிதிருக்கும் மெய்ச்சாத்தன்—கைச்செண்டு
கம்பக் களிற்றுக் கரிகாற் பெருவளததான்
செம்பொற் கிரிதிரிதத செண்டு"

சிலப். இந்தி· அடியார். மேற்.

† "ஒளியராவார் மற்றை மண்டிலத்திற்கு அரசராதற் குரியவேளாளர்" என்பர். நச். பட்டி. அடி 274. இவ் வொளியரின் ஒளிநாடு செந்தமிழ் நிலத்தின் தென்பாலதாகும்.

தொல். சொல். சேன. 398.

நாளில் வாள், குடை, வீரமுரசம் என்றவற்றைக்கைக் கொண்டு, தன் பெரும் படையுடன் அத்திசை நோக்கிப் புறப்பட்டான். அத்திசையில் தனக்குப் பகை நட்பு நொதுமல் என்ற முத்திறமாக வந்தவர்களுள் பகைவரை யழித்தும், நொது மலாளரை நட்பினராக்கியும், நட்பினரைச் சம்மானஞ் செய்து உவப்பித்தும், யாவர்க்கும் தலையாய வேந்தனாய் இமயமால் வரையின் காறும் சென்றான். அதன் அப்பாலும் சென்று தன் ஆணையைநிலைநாட்ட அவனுக்கு அப்போது ஒரெண்ண முதித்தது! உதிக்கவே, தன் கருத்து நிறைவேறா வண்ணம் மிகவுயர்ந்து பரந்து குறுக்கிட்ட அவ் விமயத்தின்மீது வெகுண்டு, காமக்கோட்டச் சாத்தனார் தந்தருளிய செண்டாயுதத்தால் அதனை அடித்தான்! *

அடியுண்ட அத் தெய்வமால்வரையோ சாத்தன் வாக்குக்கு மரியாதை செய்யக் கருதிச் சிறிது வழிவிலங்கினாற்போலத் திரிந்து நிற்கப் பார்த்த கரிகாலன், "இமையவருறையும் சிமயவரையன்றோ இஃது? இதனை நாம் பங்கப்படுத்தி விட்டோமே!" என்று துணுக்குற்று, "பண்டுபோல இது நிற்க" என மறுபடியும் அதனை அச் செண்டினாலே தைவந்து, தான்செய்த அவ் வீரச்செயலை உலகம் அறியும் வண்ணம் தன் புலி முத்திரையை அதன்மேற் பொறித்துத் தமிழ் நாடு நோக்கி மீண்டான். †

---

* சிலப். 5. அடி 98-110. பட்டி. அடி 274-82. அகம் 135.

† "செண்டு கொண்டு கரிகாலனொரு காலிலிமையைச்சிமய மால்வரை திரித்தருளி மீளவதனைப் பண்டு நின்றபடி நிற்க விதுவென்று முதுகிற்பாய் புலிப்பொறி குறித்தது மறித்த பொழுதே. கலிங். இராச. 1.

பல நாடுகளும் கடந்து *வச்சிரநாடு வந்ததும், அவ் வச்சிரக்கோன் தன்னாடு வந்த அக் கரிகாலன் தனக்கு நொதுமலாளனே யாயினும், நட்பினனாகுதலை விரும்பித் திறைப்பொருளாகத் தன் முத்துப்பந்தரைத் தந்தான். இப்பந்தர் அவன் குலமுதலோர் அசுரத் தச்சனாகிய மயனாற் செய்து கொடுக்கப்பெற்று பல்லாண்டாகவைத்திருந்த கருந்தனம். அதனைக் கரிகாலன் உவந்து அங்கீகரித்துப் பிரதியாக அவனுக்குப் பற்பல சம்மானங்கள் செய்து, அவன் நாட்டைவிட்டுத் தன் ஞாதியர் அடைக்கலம் புகுந்திருந்த மகத நாட்டின்மேல் போரேற்று வந்தான். அம்மகதன் நம் கரிகாலனுக்கு வடவாரிய வரசர் எல்லாரும் நட்பினரும் பரிகரருமா யிருத்தலைக் கண்டு அஞ்சிப் பணிந்து, தன முன்னோர் நாள் முதல் கருந்தனமாகச் சேமித்து வைத்திருந்த நவரத்தின கசிதமானதும் மயன் சிருஷ்டித்துக் கொடுத்ததுமான ராஜஸபை யொன்றைக் கொடுத்தான். அதன் பின்னர் நம் வளவன் உஜ்ஜயினி நகரத்திலுள்ள தன் பழைய நட்பாளனான வேந்தன்பால் வந்து, சிலநாள் தங்கி அளவளாவிக்கொண்டிருந்து, பின்பு தன் நாட்டுக்குப் புறப்பட, அவன் சூக்குமமான சிற்பவேலை யமைந்ததும் மணிகளழுத்தியதுமான ஒரு தோரண வாயிலைக் கொடுத்தனுப்பினான். இம்மூன்று அரிய பொருளையும் பெற்றுக்கொண்டு கரிகாலன் ஜயகோஷ முழங்கத் தன் நாடுவந்து, குடிகளாற் பெரிது கௌரவிக்கப் பெற்று அவர்களை மிகச் சிறப்புற ஆண்டுவந்தான்.

அவன் நகரான புகாரில், எடாத கோயிலும், நடாத யூபமும், இல்லாத செல்வமும், கல்லாத நூல்களும், உறையாத சான்றோரும், பறையாத பாவமும்

* இது சோணைக கரையிலுள்ளது.

எவ்விடத்து மில்லையென்றே சொல்லவேண்டும், 'நுதல் விழி நாட்டத்து இறையோன் (சிவபெருமான்) முதலாப் பதிவாழ் சதுக்கத்துத் தெய்வமீறாக' எல்லாத் தெய்வத்திற்கும் ஆலயங்களுண்டு. இவையே யன்றி, வெள்ளிடை மன்றமென்றும், இலஞ்சி மன்றமென்றும், கல் மன்றமென்றும், பூதசதுக்க மென்றும், பாவை மன்ற மென்றும் ஐந்து விசித்திர தெய்வசக்தி வாய்ந்த மன்றங்களும் ஸ்தாபிக்கப் பெற்றிருந்தன. *

அவற்றுள் வெள்ளிடை மன்றமென்பது பண்டப் பொதிகள் அடுக்கி யிருக்கும் வெட்ட வெளி. அப் பொதிகளின்மேல் இன்னாருடையதென்று பொறித்து விட்டால் அப் பொதியைக் களவு செய்து எடுத்துப் போக ஒருவராலும் இயலாது, ஏனெனில் அவற்றைக் களவு காணுமவர் மன்றத்தை நெருங்கியவுடன் அது அப் பொதியை அவர் தலைக்கேற்றி, அவரைப் பித்துப் பிடித்தவராக்கித் தலைச் சுமையுடன் ஊரைச்சுற்றி வரும்படி யடித்து, உடையவரிடத்துச் சுமையுடன் அவரை ஒப்படைத்துவிடும் இலஞ்சி மன்றமென்பது ஓர் அழகிய குளிர்ந்த மடு. அம் மடுவிற் குளித்துக் கரையேறினவுடன் கூனரும், குட்டரும்; ஊமரும், செவிடரும், மெய்யழுகிய கர்ம வியாதியாளரும் சுத்த சரீரமும் வலிமையும் வனப்பும் பெற்றுத் தம்மிடஞ் சென்றடைவர். கல் மன்றமாவது பெரிய ஸ்படிகக் கல்லொன்று நிற்கும் மன்றமாகும். இக் கல்லின் முன் நின்று தம் நிழலைக் காணுமவர் சூனியம் வைக்கப் பெற்று சித்தசுவாதீன மிழந்திருந்தாலும், மருத் தீட்டினால் துன்புற்றிருந்தாலும், பாம்பினாற் கடியுண்

* சிலப். இந்திர. அடி 111-338. பட்டி. 286; புறம் 224.

டிருந்தாலும் உடனே பிணி நீங்கிக் குணம்பெற்றுப் போவர்; பூத சதுக்கமாவது பூதமொன்று பிரதிஷ்டிக் கப்பெற்ற நாற்சந்தி. இச் சந்திகளின் வழியே வரும் ஒழுக்கம் வழுவிய சந்நியாசிகளும், விபசரிக்கும்பெண் டிரும், ராஜத் துரோகியரான மந்திரிகளும், பிறர் மனை நயக்கும் புருஷரும், பொய்ச் சாக்ஷிகூறும் பாதகரும், புறங்கூறும் அறிவிலிகளும் அப் பூதத்தின் பாசத்தாற் பிணிப்புற்று அறையுண்டு உண்ணப்படுவர். பாவை மன்றமாவது பதுமை ஒன்று நிற்கும் மன்றம். அம் மன்றத்திலே இருந்து நியாயம் பகரும் நீதிபதிகள், சாஸ்திர விதிக்கு மாறுகவாவது, ஒரு சார்பாகவாவது, நீதி செலுத்தினாலும், அரசன் கோல் கோடினாலும் அப் பாவை வாயால் ஒன்றுஞ் சொல்லாது தன் இரு கண்களினின்றும் நீர்வடித்து அழும். *

இவ் வைந்து வகை மன்றங்களே யன்றி, 'சோம குண்டம்', 'சூரிய குண்டம்' என இரண்டு வகைப் பொய்கைகள் உண்டு. இவ் விரண்டும் கடலொடு காவிரி சங்கமமாகு மிடத்தில் நெய்தல் மலர்கள் இதழ்விரிந்து மணம் வீசும் ஒருசோலையின் நடுவே இருந்தன. இக் குண்டங்களில் முழுகி, இதன் பக்கத்துள்ளதாகிய காமன் கோயிலை அணுகி, அத் தெய்வத்தினைத் தொழு வார் பிரிந்த தம் கணவரைக் கூடி இம்மையில் இன் புற்று, மறுமையில் போக பூமியிற் போய்ப் பிறப்பர். †

---

* சிலப். இந்தி. 111-38.

† "கடலொடு காவிரி சென்றலைக்கு முன்றின்
மடலவிழ் நெயதலங் கானற் றடமுள
சோமகுண்டஞ் சூரிய குண்டந் துறைமூழ்கிக்
காமவேள் கோட்டந் தொழுதார் கணவரொடு

இவ்வாறாகிய ஐவகை மன்றங்களையும், குண்டங்களையும் நம் கரிகாலன் முன்னோர் தம் புயவலியால் இந்திரன் நகரான அமராவதியைக் காத்து, அவனுக்கு அசுரரால் உண்டான இடரை நீக்கி, அதற்குக் கைம்மாறாக அவன்பாற் பெற்றனர். *

இத்தகைய புதுமையும் சிறப்பும் பொருந்திய பட்டினத்திலே நம் வளவன் கவலையின்றி வாழும் நாளிலே, தன் கீழுள்ள குடிகள் உழுது மேம்படவும், வாணிகஞ் செய்து ஓங்கவும் விரும்பி, அவ்விரு தொழிலும் சீர்பெற நடப்பதற்குக் காவிரி ஆற்றைவளம் படுத்தலே காரியமென்று துணிந்தான். உடனே தன் கீழுள்ள பல சிற்றரசர்களையும் வருவித்து, "நீவிர் இவ்வளவு இவ்வளவு தூரம் காவிரிக்கு அணைகட்ட வேண்டும்" என்று ஆணையிட்டான். அவர்கள் எல்லாரும் ராஜாஜ்ஞைக்கு அடங்கிக் கரைகட்டி வர, முகரி என்றும் பிரதாப ருத்திரன் என்றும் பெயரிய ஒரு குறுநில மன்னன் கட்டளையை இறந்து கரைகட்ட வாராது தருக்கியிருந்தான்.

அதனை அறிந்த கரிகாலன், அம் முகரியைப் போரில் தொலைத்துப் பற்றிவருமாறு சில வீரரையேவ,

---

தாமின் புறுவ ருலகத்துத் தையலாரா
போகஞ்செய் பூமியினும் போய்ப்பிறப்பர்"
"இருகாமத்து இணையேரி"
சிலப். கனு 57 - 62. பட்டி. அடி 39.

* அமரா பதிகாத் தமரிற் பெற்றுத்
தமரிற் றந்து தகைசால் சிறப்பிற்
பொய்வகை யின்றிப் பூமியிற் புணர்த்த
வைவகை மன்றம்" (சிலப். கடல். 14-17)

அக் குறுநில மன்னன் அவர்கட்கு அப்போது அகப் படாது மறைந்து கொண்டிருந்து பின்பு வெளிப்பட்டு வந்து, கலகஞ் செய்வானாயினான். அதனால் கரிகால் வளவன் சினந்து, "அவனுருவினைப் படத்து எழுதிக் கொணர்க" என்று உத்தரவிட, ஓவியர் அவ்வாறு எழுதிக் கொண்டுவந்து காட்டினர்; உடனே அவ் வுருவத்தில் மிகைக் கண்ணொன்றினைக் கண்டு, "இக் கண்ணே இவனது இம் மிகைக்குக் காரணம்" என்று, அக் கண்ணினைத் தன் வேலினாற் குத்தினான்.* உடனே நெடுந் தூரத்துக் கப்பால் அதுச்சிலிருந்த அம் முகரி திடீரென்று கண்கள் இழந்து குருடனாயினான்.

கண்ட அச் சிற்றரசன், "ஓ! ஓ! கரிகாலன் சாமானிய அரசனல்லன்! தெய்வசக்தி வாய்ந்தவனே யாவன்; அவனாணையைக் கடத்தல் தேவர்க்குமாகாது" என்று அஞ்சி ஓடிவந்து வணங்கிப் பிழை பொறுக்குமாறு வேண்டக் கரிகாலன் அருள் செய்ததன்மேல், அவன் காவிரிக்குச் சிறந்த ஒரு கரையை மற்றெல்லா அரசரையுங் காட்டில் தீவிரமாகவும் தூரமாகவும் கட்டி அரசனை மகிழ்வித்தான்.

---

*"தெள்ளருவிச, சொன்னிப் புலியே நிருததிக்கிரி திரித்துப் பொன்னிக் கரைகண்ட பூபதி" (விக்கிரம)

"தலையேறு, மண்கொண்ட பொன்னிக் கரைகட்ட வாராதாற் கணகொண்ட சென்னிக் கரிகாலன்" (குலோத்து)

'கணகொண்டான் பொன்னிக் கரைகாட்ட வாரானை என்கொண்ட சோழன்" (இராசகேச)

"தொழுது மன்னரே கரைசெய் பொன்னியிற்.........
இகைழிக்கவே அங்கழிந்ததும்" (கலிங. 20)

இவ்வாறு காவிரி உழவுக்கும் வாணிபத்திற்கும் பெரிதும் சாதனமாக அமையவே, உழுதொழிலாளரும் வணிகரும் பெருஞ் செல்வர்களாகி, அறத்தையேகருதி, வந்த விருந்தினரைக் குளிர நோக்குவதாலும் இதமான வார்த்தைகளைச் சொல்லுவதாலும் மகிழ்வூட்டி, அறு சுவை யுண்டி யளித்து அவர்களை அரிதிற் பிரிவர். அதனால் அவர் உழுத நிலம் வேலி ஆயிரமாக நெல் விளைந்து, அவை வைத்தற்குக் குதிர்களெல்லாம் இடம் பற்றாமல் கண்ட இடமெல்லாம் கொட்டப்பெற் றிருக்குமாம். * சோணாட்டு விளையுளையும் அஃதொழிந்த பிறர்நாட்டு விளையுளையும் வாசிகாட்டி அடியில்வருமாறு ஒரு பாடல் வழங்குகிறது. அஃது,

"ஏரியும் ஏற்றத்தி னாலும் பிறர்நாட்டு
வாரி சுரக்கும் வளனெல்லாம்—தேரின்
அரிகாலின் கீழுகூஉம் அந்நெல்லே சாலுங்
கரிகாலன் காவிரிசூழ் நாடு" என்பது.

அந் நாட்டார் வீடுகள் தோறும் விருந்தினர் பொருட்டுச் சோறாக்கிய கஞ்சி ஆறுபோலப் பரந்தொழுகி, காளைகள் முதலியன போர் செய்வதனால் சேறாகித்

* "பண்ணிய மாட்டியும் பசும்பதங் கொடுத்தும், புண்ணிய முட்டாத் தண்ணிழல்வாழ்க்கை" (பட்டி.203-4)
"கூனிக் குயத்தின் வாய்நெல் லரிந்து
சூடுகோ டாகப் பிறக்கி நாடொறுங்
குன்றெனக் குவைஇய குன்றாக் குப்பை
கடுந்தெற்று மூடையின் இடங்கெடக் கிடக்கும்
சாலி நெல்லின் சிறைகொள் வேலி
யாயிரம் விளையுட் டாகக்
காவிரி புரக்கும் நாடு" (பொருந். அடி 242 - 8)

தேரோடுவதனுல் தூசி எழுந்து, கோயில்களிலுள்ள சித்திரங்களை அழுக்கடையுமாறு செய்யுமாம். *வாணி பர்களோ தராசுபோல நடுவு நிலைமையுடையராய், பொய்பேசாது தம் சரக்கையும் பிறர் சரக்கையும் சம மாக மதித்து, கொள்வதும் அதிகமாகாது கொடுப்ப தும் குறையாகாது வியாபாரஞ் செய்வர். †

இவ்வாருக நம் வளவன் ஆணையால் வணிகர் தருமநிலையில் நிற்ப,சீனர்களும், யவனர்களும், துருக்கர் களும் பிறரும் தத்தம் தேயப்பொருளை மரக்கலங்களில் ஏற்றி வந்து, மருவூர்ப் பாக்கத்தில் தங்கி, வியாபாரஞ் செய்து நாட்டினை வளமுறச் செய்தனர். ‡வேற்றுத் தேயங்களிலிருந்து,கப்பலிற் குதிரைகளும்,வண்டிகளில் மிளகும் இமயமலையிலிருந்து சாம்பூநத மென்னும்

---

* "சோறுவாக்கிய கொழுங்கஞ்சி
யாறுபோலப் பரந்தொழுகி
யேறுபொருச சேறாகித
தேரோடத் துகள்கெழுமி.........
வேறுபட்ட வினையோவம்" (பட்டி. 44-9.)

† "உழவா, நெடுநுகத்துப் பகல்போல
நடுவுநின்ற நன்னெஞ்சினோர்
வடுவஞ்சி வாய்மொழிந்து
தமவும்பிறவும் ஒப்பநாடிக்
கொள்வதூஉ மிகைகொள்ளாது
கொடுப்பதூஉங் குறைகொடாது
பல்பண்டம் பகர்ந்துவீசும்
தொல்கொண்டித்துவென் றஇருக்கை"(பட்டி.205-11.)

‡ "மொழிபல பெருகிய பழிதீர் தேஎத்துப்
புலம்பெயர் மாக்கள் கலந்து இனிது உறையும்

ஆயிரத்தெட்டு மாற்றுத் தங்கமும், பற்பல வகையான மாணிக்கங்களும்,கீழ்த்தேயக் கடலிலிருந்து பவளமும் பொதியில் மலையிலிருந்து சந்தனக் கட்டைகளும், பாண்டி நாட்டின் கடற்கரையிலிருந்து முத்தும்,கங்கை நதி பாயும் இடங்களிலிருந்து யானை முதலியனவும், கடாரம் ஈழம் முதலிய தேயங்களினின்றும் பலவகை உணவு வகைகளும்,சீனத்தினின்றும் கருப்பூரம் பனிநீர் குங்குமம் முதலியனவும் வந்து வியாபாரம் நடந்தது. *

அரசனுடைய பொருளைப் பிறர் கொள்ளாமற் காத்தலிலே பேருக்க முடையரான அனுபவ முதிர்ந்த கடற்சுங்க உத்தியோகஸ்தர்கள் வேற்று நாட்டினின் றும் துறைமுகத்தில் வந்திறங்கின பல கோடிக் கணக் கான அப் பண்டப் பொதிகளைச் சூரியன் தேரிற் பூண்ட குதிரைகள் போலச் சோம்பலென்ப தில்லாமற்

........பட்டினம்" (பட்டி. அடி 216-1)

கயவாய் மருங்கிற் காண்போர்த் தடுக்கும்
பயனற வறியா யவனர் இருக்கையும்
கலந்தரு திருவிற் புலம்பெயர் மாக்கள்
கலந்திருந் துறையு மிலங்குநீர் வரைப்பு"(சிலப்.5.9-12.)

இம் மாக்கள் அன்றியும். பட்டு நெய்வோர் முதலாக ஷை காதையிற் கூறிய பல்வகை தொழிலாளரும் தொகுகிருந்தனர்.

* "நீரின் வந்த நிமிர்பரிப் புரவியும்
காலின் வந்த கருங்கறி மூடையும்
வடமலைப் பிறந்த மணியும் பொன்னும்
குடமலைப் பிறந்த வாரமும் அகிலும்
தென்கடல் முத்தும், குணகடல் துகிரும்
கங்கை வாரியும் காவிரிப் பயனும், ஈழத்துணவும்
காழகத் தாக்கமும்.........ஈண்டி" (பட்டி.185-92.)

கணக்கெடுத்து, புலி முத்திரையிட்டு, அவ்வவற்றிற்கு வாங்கவேண்டும் சுங்கத் தொகையைக் கடைப்பிடித்து நியாயமாக வாங்கி வந்தார். அப்படியே உள் நாட்டினின்றும் வேற்று நாட்டுக்குக் கப்பலில் ஏற்றுமதி செய்யப்படும் மூட்டைகளையும் கணக்கிட்டு, உசிதமான சுங்கம் வாங்கிக் கப்பலில் ஏற்றியனுப்ப வியாபாரிகளுக்குச் சிரமில்லாதபடி எல்லா வசதிகளும் செய்து கொடுத்தார்கள். *

இஃதிவ்வாறாக, நம் கரிகால்வளவன் நல்ல வித்துவான்களைப் பேணிக் கௌரவித்து அவர்களைக்கொண்டு பல நூல்கள் செய்வித்து வந்ததனால், நல்லாசிரியர்கள் பல்கி, வித்தையில் வாதஞ்செய்து பரவாதிகளை வெல்லக் கொடிகள் கட்டித் தருக்கித் திரிந்தனர். †இப் புலவர்

---

* "நல்லிறைவன் பொருள்காக்கும்
தொல்லிசைத் தொழில்மாக்கள்
காய்சினத்த கதிர்ச்செல்வன், தேர்பூண்ட மாஅபோல
வைகறொறும் அசைவின்றி
உல்குசெயக் குறைபடாது
நீரினின்று நிலத்தேற்றவும்
நிலத்தினின்று நீர்ப்பரப்பவும்... .. .....
அருங்கடிப் பெருங்காப்பின்
வலியுடைய வல்லணங்கினோன்
புலிபொறித்துப் புறம்போக்கி
மதிநிறைந்த மலிபண்டம்" (பட்டி. 120,36.)

† "பல்கேள்வித் துறைபோகிய
தொல்லாணை நல்லாசிரியர், உறழ்குறித்
தெடுத்த உருகெழு கொடி" (பட்டி. 169 - 71)

களேயன்றி இசைப் புலவர்களும் பாணரும் பொருநர் முதலியோரும் தன் சபைக்கு வந்து விட்டால் நம் வளவன் அவரை அன்போடு வரவேற்று, பெரும் பரிசில் நல்கி, அவர் திரும்பிச் செல்கின்ற போது எழுந்து ஏழடி பின்சென்று மீள்வான். *

இவ்வாறு இவன் லௌகிகத்துறையில் மேம்பட்டு விளங்கியதோடு வைதிக வொழுக்கங்களிலும் குறைவின்றி, செய்வன செய்து வந்தான். தனது கற்புமிக்க மனைவியர் பலருடன் கூடி விரதங்களை யனுஷ்டித்து, தர்மத்தை நன்குணர்ந்த அந்தணர்களின் மத்தியில், யாகக் கிரியைகளை ஐயந்திரிபற அறிந்த புரோஹிதர் சொல்லிக் காட்ட யாகசாலையிற் பல யாகங்களைச் செய்து முடித்து, அந்தணர் முதலியோர்க்கு விசேஷமான கோதானம் பூதானம் அன்னதான முதலியன செய்து அவபிரத ஸ்நானஞ் செய்து முடித்தான். †

நம் வளவனுக்குப் பல புத்திரர் உண்டென்று முன்னம் கூறினோம். சோழன் வேற்பஃறடக்கைப் பெருவிறற் கிள்ளியும், இராஜசூயம் வேட்ட பெருநற்கிள்ளியும் இவன் புதல்வராக வேண்டுமென ஊகிக்கப்படுகின்றனர். ஆதிமந்திதான் இவன் புதல்வியருள் ஒருத்தி என்று முன்னமே கூறினோம். * சேரன் செங்குட்டுவன் மாதாவான 'நற்சோணை' என்னும் பெயராள் இவன் புதல்வியாக வேண்டுமென்று ஊகிக்கப்படுகின்றனள். இவர்களோடும் பல மனைவியரோடும் இவன் பல்லாண்டு இன்புற்றிருந்தான். †

---

* "பருகு வன்ன வருகா நோக்கமொடு......கொளீஇ" "காலினேழடி பின்சென்று" (பொருந். 77, 78. 166)
† சிலப். பதி. அடி பதிற். 50. பதி.

இவன் மரணத்தினைக் கேட்டுப் பெரும் புலவர் அநேகர் மிக்க வியசன மடைந்தனர். கருங்குழல் ஆதனார் என்ற வித்துவான், இவ் வளவனது அரண மழிக்கும் ஆற்றலையும், பல மகளிரொடு போகந் துய்த்த இன்பச் சிறப்பினையும், பாணர் கூத்தர் முதலியோரை ஆதரித்த அன்பினையும் பெரிய பல யாகங்கள் செய்த சிரத்தையினையும் வருணித்துப் புலம்புவாராயினர். *

இவ் வளவன் செய்திகளைச் சிறப்பித்துப் பாடிய புலவர்கள் முற்கூறிய கருங்குழலாதனாரை யன்றி, மாமூலனாரும், கழாத் தலையாரும் பரணரும், நக்கீரரும் வெண்ணிக்குயத்தியாரும் முடத்தாமக் கண்ணியாரும், கடியலூர் உருத்திரங் கண்ணனாருமே யாவர். இவருள் முடத்தாமக் கண்ணியார் என்பவர் "பொருநராற்றுப் படை" என்ற நூலையும், கடியலூர் உருத்திரங்கண்ணனார் என்பவர் பட்டினப்பாலை யென்ற நூலையும் இவன் விஷயமாக இயற்றினார்கள். இவருள் கடியலூர் உருத்திரங்கண்ணனார் அந்தணர் என்று அறியப்படுகிறார். † அவரியற்றிய அப் பட்டினப்பாலை கேட்டு அவருக்குப் பதினாறு நூறாயிரம் பொன் பரிசளித்தான் ‡

---

* "அருப்பம பேணு தமாகடந் ததூஉம
துணைபுண ராயமொடு தசும்புடன் றொலைச்சி
யிரும்பா ணொக்கற் கடும்பு புரந்ததூஉம்
அறமறக் கண்ட நெறிமா ணவையத்து
முறைநற் கறியுநர் முன்னுறப் புகழ்ந்த
தூவியற் கொள்கைத் துகளறு மகளிரொடு......
வேத வேள்வித் தொழின்முடித் ததூஉம்" (புறம் 224)
அகம் 55, 125, 141, 246, 376; புறம் 65, 66;

† தொல். பொருள் சூ. 629. பேரா. ‡ கலிங். இரா. 22.

## காவிரிப்பூம் பட்டினத்துக் கற்புடையார்

பூம்புனற் புகார் எனப்படும அக் காவிரிப்பூம் பட்டினத்திலே பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னே வணிகன் ஒருவன் பெருஞ் செல்வமுடையனாய்த் தனது அன்பின் மிக்க மனைவியுடனும் அழகிய ஓரே புத்திரியுடனும் இன்புற்று வாழ்ந்து வந்தான். அக்காலையில் அவன் பூர்வஜன்ம கர்ம வயததால் இளமையிலேயே நோய்க் கோட்பட்டு, தனக்கும் மரணகாலம் ஸமீபித்திருப்பதை உணர்ந்து தன்னருமைப் புத்திரிக்கு நாயகன் ஒருவன் வேண்டுமே என்று ஆராய்கையில் கவலைகொண்டு, தனது ஸகோதரியின் புதல்வனே தனக்கு மருமகனாதற் குரியானென்று துணிந்து, அவனுக்கு அதனை அறிவித்து அவனை யழைத்துவர அவன் இருந்த ஊர்க்கு ஆட்போக்கினான்.

போக்கப் பெற்ற ஆள் நெடுந்தூரத்திலுள்ள அவ் வூரை அடைந்து, புகாரில் அவன் மாமனிருந்த நிலையையும் அவன் துணிவையும் உணர்த்தின வளவில், மருமான் பெரிதும் துக்கமுடையனாய்த் தன் மாமனைக் காணப் புகார்க்குப் புறப்பட்டான். அவன் அவ்வூர் வந்து சேர்ந்ததும் மாமனான வணிகன் இறந்துபோய் அவன் மனைவியும் உடன்கட்டை யேறினள் என்ற செய்தியைக் கேட்டுப்பெரிதும் துயர்க்கடலில் ஆழ்ந்து, அம்மாமன் மகளை ஆங்குள்ள சுற்றத்தார் விருப்பப்படி தன்னூர்க்கு அழைத்துக்கொண்டு புறப்பட்டான்.

இருவரும்நெடுந்தூரம் கடந்துகளைத்து,பொழுதுபடும் சமயத்தில் ஒருகாட்டின் மத்தியிலுள்ள கோயிலி

னருகிற் சென்று, அதற்குமேல் பிரயாணஞ் செய்யத் துணியாராய், ஆங்குள்ள ஒரு வன்னி மரத்தடியிற் படுத்துக்கொண்டனர். அப்போது ஓர் அசரீரிவாக்கு, "நீவிர் இவ்விடத்தேதானே மனைவியும் புருஷனுமாகுமின்" என்று உண்டாக, இருவரும், "இது கடவுள் ஆணையே" என்று, அவ்வன்னி மரத்தினையும் பக்கத்தேயிருந்த மடப்பள்ளியையும் சாக்ஷியாக வைத்துக் காந்தருவ மணம் புரிந்துகொண்டனர். மறுநாள் எழுந்து பக்தியுடன் கடவுளை வழிபட்டு, நித்திய கருமங்களை முடித்துக்கொண்டு வழிமேற்கொண்டு, சின்னாள்கட்குள் தம்மூர் சென்றடைந்தனர்.

இவ் வணிகனுக்கோ தன் மாமன் மகளையேயன்றி வேறு மனைவி ஒருத்தி இருந்தனள். அவளை அவன் இவளுக்கு முன்னரே மணந்திருந்தான். அவளுக்குப் பல மக்களுமுண்டாயிருந்தனர். இப்புது மனைவியும் தன் நாயகன் இல்லஞ் சென்ற சிலகாலத்திற்குள் ஒரு சற்புத்திரனை ஈன்றெடுத்தாள். இம் மகனும் வளர்ந்து சிறுதேரோட்டும் பருவமடைந்ததுந் தன் மாற்றாந் தாயின் மக்களோடு விளையாடி வந்தான். அக்காலத்து ஒருநாள் அம் மாற்றாந்தாயின் அப் பிள்ளைகட்கும் இம் மகனுக்கும் வாக்குவாதம் உண்டாகி, அப் பிள்ளைகள், "அடா பையா! உனக்கும் எங்களுக்கும் வெகு வாசியுண்டு; நீ எங்கள் பிதாவுடைய காமக் கிழத்தி மகன்; குலமடமாதராளோ நின்தாய்?" என்றனர்.

கேட்ட சிறுவன் மிக்க ரோஷமும் வெட்கமும் உடையவனாய்த் தன் தாயின்பாற் சென்று அதனை அறிவிக்க, அவளுந் துக்கமுடையவளாய், 'நான் காமக்

கிழத்தியல்லேன். கடவுளாணையால் வன்னி மரமும் மடைப்பள்ளியும் சாக்ஷியாகக் கணவனைக் கைப்பிடித் தவளே யாவேன்'' என்றனள்.

அதைக்கேட்டிருந்த அவள் மூத்தாளும் அவ ளைச் சார்ந்தாரும் அவ் விளையாளை நோக்கிச் சிரித்து, ''எக்கடவுள் ஆணையால் எந்த வன்னி மரத்தையும் மடப்பள்ளியையும் சான்றுவைத்து நீ நாயகனை மணந் தது? அவை இங்கு வந்து உனக்குச் சான்று பகரு மேல் நீ குலமகள்தான்'' என்று வாதம் செய்தனர்.

அதனால் அவள் பெரிதும் துக்கமுடையவளாகி, ''ஓ! கடவுளே! நீரே அசரீரியாய் என்னை இந் நாய கரை மணஞ்செய்துகொள்ளல் வேண்டுமென்று தூண்டிவிட்டு, இப்போது வேடிக்கை பார்ப்பது நியா யமோ? 'தெய்வந் தொழாது கணவனையே தொழு தெழும்; கற்புடையேனாய் இருப்பின் எங்கள் மணத் திற்குச் சாக்ஷியாய் இருந்த வன்னி மரமும் மடைப்பள் ளியும் இங்கு வந்து சான்று பகர்ந்திடுக'' என்றாள்.

உடனே 'இதோ வந்து விட்டோம்!' என்ற ஒரு அசரீரியின் குரலும், அவ் வன்னி மரமும் மடைப்பள ளியும் அங்கே வந்து தோன்றின. பார்த்த மூத்தாளும் பிறரும் விம்மிதமுடையராகி இளையாள் கால்களில் விழுந்து, பிழை பொறுக்குமாறு வேண்டினர்.

இளையாள் உடனே கோபமாறி, மூத்தாளை நமஸ் கரித்து, ''உன்னாலன்றோ என் கற்பு உலகப்பிரவசித்த மாயிற்று; நீயே எனக்குப் பரம பந்து'' எனச்சொல்லி, அது முதலாக அவளோடு அன்புடன் பழகி வந்தாள்.

அவள் புருஷனும் அவள்பால் முன்னையினும் அதிக அன்பினனாய் ஒழுகிவந்தான்.

முற்சொன்ன புகாரெனப்படும் காவிரிப்பூம் பட்டினத்திலே பண்டைக் காலத்திலே ஒரு கிருஹஸ்தன் சிறந்த கற்புடையாளும் வனப்புடையாளுமான தன் மனைவியுடன் இல்லறம் நடாத்தி வருங் காலத்திலே பொருளீட்டுங் காரியமாக அவன் அயல் தேசம் போக வேண்டியிருந்தது. அதனை அவன் தனது மனைவிக்கு உணர்த்திய பொழுது, அவள் தன் கணவன் பிரிவுக்கு மிகவருந்தி, "உம்மைப் பிரிந்து நான் எவ்வாறு உயிர்த்திருப்பேன்?" என்ன, அவன் அவளைச் சமாதானப் படுத்தி, 'கார்காலந் தொடங்குவதற்குள் வந்துவிடுவேன்' என்று வாக்குக்கொடுத்து, வேற்றூருக்குப் போயவிட்டான்.

அவன் போன பிறகு அக் கற்புடையாள் தனது கணவனையே நினைத்தவளாய், அவன் வருங்காலத்தைச் சுவரிற் கோடிட்டு எண்ணிக்கொண்டு துன்புற்றிருக்க, அக் காலையில், அயல் வீட்டுக்காரன் ஒருவன் அவளை அடிக்கடி சந்தித்துக் காதற் குறிப்போடும் நோக்கத் தலைப்பட்டான். அக்குறிப்பைத் தெரிந்துகொண்ட அக் கற்புடையாள், "ஆ! ஆ! இத்தூர்த்தன் நமது நாதன் இங்கு இல்லை என்றன்றோ இப்படி எல்லாம் செய்கிறான்! மேலும் நாம் இவன் கண்களுக்கு அழகிய முகம் உடையேமாயிருப்பதனால் தானே இவன் காமுற ஏதுவாகின்றது; நம்முடைய வனப்பு நம் கணவனை இன்புறுவிக்க வன்றோ பயன்படவேண்டும்; அவனில்லாத இக்காலத்து இவ்வனப்பு ஆபத்துக்கு முகாந்தரமாகின்

றது. ஆகையால், இதைக் கெடுத்துவிடலே உத்தமம்'' என்று தன் மனத்துள்ளே எண்ணி முடிவுசெய்து, சில விஷமூலிகைகளால் தன் முகத்தைக் குரக்கு முகம் போல விகாரமாக்கிக் கொண்டாள்.

கொள்ளவே, கண்ட அத் தூர்த்தன் விகாரமுக முடைய அவளை, "சிச்சீ! இவள் இப்படியா ஆய்விட்டாள்!'' என்று ஆசையொழிந்தவனாகி, அன்று முதல் அவளை நோக்காமலே போய்விட்டான். அதனால் அக் கற்புடையாள் மனமகிழ்ந்து, கவலையொழிந்து சில நாளிருந்தவளவில், குறித்தபருவத்தில் அவள் கணவன் வந்து சேர்ந்தான். சேர்ந்ததும், அவள் தனது திரிந்த கோலத்தைச் சஞ்சீவி மூலிகையினால் மாற்றிக்கொண்டு எப்பொழுதையும்விட மிக்க ரூபவதியாய் அவனருகில் நிற்க, அவன் ஏதோ விசேஷமிருக்கவேண்டு மென்று ஊகித்து, நடந்தவிருத்தாந்தத்தைக் கேட்டறிந்து, தன் மனைவியைப் பெரிதும் மெச்சிக் கொண்டாடினான். ஊரிலுள்ளாரும் அவளைப் பெரிதும் புகழ்ந்தனர்.

முற்கூறிய புகாரிலே ஒரு தெருவிலே பல சிறுமியர் ஒன்றுகூடிக் காவிரிக்கு நீராடச் சென்றனர். ஆங்கே அவர்கள் பலவகையாய் விளையாடிய பிறகு, வண்டலாற் பாவை பிடித்து அதற்கு பூச்சூட்டி மாலையணிந்து மகிழ்வாராயினர். அப்போது ஒருசிறுமிபிடித்த பாவை மிகச் சிறந்த ரூபமுடைய புருஷனாக அமைய, அதற்கும் அவள் பூச்சூட்டி, மாலை யணிந்துமகிழ, அதை நோக்கிய மற்றைச் சிறுமிகள் வேடிக்கைக்கா, "அடி! நீ பிடித்த பாவை உன் அழகிற்கேற்ற குமரனே யாவன். அவனையே நீ மணஞ்செய்துகொள்'' என்று பரிகாசஞ் செய்தனர்.

கேட்ட அச் சிறுமி, இவர்கள் கூறியனவற்றை உண்மையாகக் கொண்டு, திடமான பதிபக்தியை அப் பாவையின்பாற் செலுத்தி, உள்ளன்போடு வழிபடுவாளாயினள். பார்த்த மற்றைச் சிறுமிகள் கைகொட்டி நகைத்து, "அடி பைத்தியமே! நாங்கள் கேலிக்குச் சொன்னால் அதை நீ உண்மை என்று கொண்டாயே! நேரமாயிற்று; காவிரியிலும் நீர் பெருகுகின்றது; வா, வீட்டிற்குப் போவோம்" என்றனர்.

அதற்கு அப்பெண், பாவை உருவினராயினும் இவரை நான் பர்த்தாவாகக் கொண்டு விட்டேன். எனக்கு இல்லம் இனி இவரிருக்கும் இவ் விடந்தான்; உங்களோடுவாரேன்" என்றாள்.

கேட்ட அச் சிறுமிகள் விம்மிதமுற்று, அவளுறுதியினைக்கண்டு பிரமித்து நிற்க, காவிரி பெருகி அரையளவு ஜலம் வந்து, மற்றைச் சிறுமிகள் இழைத்த வண்டற் பாவைகளை எல்லாம் அழிக்க, இச் சிறுமியோ காவிரியை வேண்டி, "அம்மா! என் கணவரைக் காப்பாற்று; இவ்விடம் விலகிப்போ" என்று தொழுதாள்.

காவிரியோ அப்போதுதன் இரு கரைகளும் ஜலம் புரண்டு பெருக்கெடுத்தும், நடுவில் ஜலமில்லாமல் வற்றி, அச் சிறுமியின் வண்டற் பாவைக் கணவனைக் காத்தது. இவ் வதிசயத்தை ஊரிலுள்ளார் அனைவரும் வந்து பார்த்து, "ஆ! ஆ! இவள் கற்புடைமையை என்னென்று புகழ்வோம்! இவளைப் பெற்ற மாதா பிதாக்கள் தாம் என்ன பாக்கியம் பெற்றனர்!" என்று புகழ்ந்து ஆர்த்தனர்.

முற்கூறிய புகாரிலே வணிகர் மரபிலே ஒரு வணிகனும் அவன் மனைவியும் பரஸ்பரம் அன்பு முதிர்ந்தவராய் வாழ்ந்து வந்தனர். அக்காலத்திலே அவ் வணிகன் தன் பொருளை விருத்தி செய்யக் கருதித் தேசாந்தரஞ் செல்ல விரும்பி, அதனைத் தன் நாயகியிடம் அறிவித்து, 'நான் ஓரியாண்டிற்குள் வந்துவிடுவேன், அதுவரையில் நீ ஆற்றியிரு' என, அதற்கு அவள் "நீர் செல்லாமை யுண்டேல் எனக்கு உரையும், மற்று நும் வல்வரவு வாழ்வார்க்கு உரையும்" என்று கலுழ்ந்து, பின் தேற்றத்தேறி, "நானும் உடன் வருவேன்" என்றாள்.

அதற்கு அவன், "அன்பின் மிக்க நங்காய்! நான் கப்பலேறித் தேசாந்தரம் போகிறேன்; குலமட மாதரொடு கலத்திற் சேறல் அறத்தாறன்றே" என்றான்.

கேட்ட அவள், "அப்படியாயின், காலிற் சேறல் அறந்தானே; நீர் கலத்திலேறக் கடற்கரை போமளவும் நானும் உடன் வருவல்" என்றாள். அவளுடைய அவ் வன்பின் மிகுதியால் அவன் மறுத்து யாதுங்கூற மாட்டானாய், அவளோடு கடற்கரை வரையிற் சென்று, அரிதில் அவளைப் பிரிந்து, கலத்தில் ஏறினான்.

அவன் ஏறிய மரக்கலம் பாய்விரித்துப் புறப்பட்டதுதான் தாமதம் அடுத்த நிமிஷத்திலே அக்கற்புடையாள் தன்னைக் கல்லுருவாக ஆக்கிக்கொண்டு அவ்விடத்திலேயே நின்றுவிட்டாள். அவளோடு கூடவந்த அவள் சுற்றத்தார் எல்லாரும் அவளுடைய கற்புடைமைக்கு அதிசயித்து, "இனி இவள் இறந்தாள். நாம்

செய்வ தென்னை?'' என்று தம் இல்லம் சென்றடைந் தனர்.

இது நடந்து சிறிது குறைய ஒரு வருடமாயிற்று. அக் கற்புடையாள் கல்லுருவாகவே அம் மணல் மலி கானலிலே நின்றுகொண்டிருந்தாள். தேசாந்தரஞ் சென்ற அவ் வணிகன் பெரும் பொருளீட்டிக்கொண்டு முன் கப்பலிலேறிய விடத்தே வந்திறங்கினான். அவன் கால் பூமியில் பட்டதோ இல்லையோ அக் கற்புடை யாள் பண்டுபோலப் பெண்ணாகித் தன் நாயகனை இறு கத் தழுவி, நல்வரவேற்று இல்லங்கொணர்ந்து சேர்த் தாள். பார்த்த யாவரும் பெருவியப்பும் மகிழ்வும் எய்தின ரென்று கூறவும் வேண்டுமோ' *

முற்சொன்ன புகார் என்னப்படும் சோழவள நாட்டின் பிரதான நகரிலே பல்லாயிர வருடங்களுக்கு முன்னே ஒருகிருஹஸ்தன் மிக்க செல்வமுடையோ னாய்த் தன் இரு மனைவியருடனு மின்புற்றிருந்தான். அவ்விரு மனைவியருள்ளே மூத்தாள் நிரம்ப நற்குண முடையளாய்த் தனது இளையாள்மீது தங்கையிடத்தி ற்போல மிக்க அன்பு பாராட்டி வர, அவ்விளை யாளோ இத்தகைய நல்ல தன் சக்களத்தியைச்சிறிதும் நேசியாமல் உள்ளூறப் பகைத்து, எப்படியாவது அவ ளுக்குத் தீங்கு செய்ய வேண்டுமென்று தினமுங் கறுவிக்கொண் டிருந்தாள்.

---

* சிலப்பதிகாரம் வஞ்சினமாலை அடிகள் 5-6, 6-10.
 ௸ ௸ ௸ 19-23, 16-17.

ஒரு நாள் அவ் விருவரும் ஒரு கிணற்றுக்கு எதிரெதிராக இருந்துகொண்டு, பற்பல விதமாய்ப் பேசிக் கொண்டிருக்கையில், அவ் விளையாள் தனதுமூத்தாளை நோக்கி, "அக்காள்! இவ்வென் குழந்தையை வாங்கிக்கொள்; நான் சற்று அப்புறம் போய் வருகிறேன்" என்று, தான் உட்கார்ந்திருந்த அக்கிணற்றிற்கு மேலாகத் தன் குழந்தையைத் தூக்கி நீட்டித் தன் சக்களத்தியிடத்திலேகொடுத்தாள். கொடுத்தவள் நல்லெண்ணத்தோடு வஞ்சக மின்றிக் கொடுத்தவ ளல்ல ளாதலால், தனது மூத்தாள் அக் குழந்தையை நன்றாய்ப் பற்றிக் கொள்ளு முன்னேயே தான் பிடித்தபிடியை விட்டு விட, அக்குழவி அம்மூத்தாள் கையினின்றும் நழுவி, அக்கிணற்றில்விழுந்துவிட்டது. விடவே, இளையாள், "ஐயகோ! என் குழந்தையை இப்பாவி கிணற்றிலே போட்டு விட்டாளே! என்ன செய்வேன்! என்ன செய்வேன்! கடவுளே! நீயேசாக்ஷி! நான் அநாதை! உன்னையே நான் நம்பியுளேன்." என்று ஓலமிட்டாள்.

இவள் இட்ட கூச்சலைக் கேட்டு வந்து பார்த்த ஜனங்கள் யாவரும் அம்மூத்தாளை, "இவள்கொடியள், பாதகி!" என்று வைய, அம் மூத்தாள், "ஐயோ! நான் யாது மரியாத பேதை! என்மேல் நீங்கள் எல்லீரும் வீணே பழியைச்சுமத்துகிறீர்கள்! இப்போதே உங்கள் முன்னர் நான் பரிசுத்தை யென்று ருசுப் படுத்துகிறேன் பாருங்கள்!"என்று அவ்வீட்டினுள்ளே ஓடி, அங்கே தொட்டிலில் உறங்கிக்கொண்டிருந்த தன் குழவியை எடுத்து வந்து, அதையும் அக் கிணற்றிலே வீழ்த்தித் தானும் உள்ளே குதித்து, ஆங்கே அவள் கற்பின் சிறப்பால் இறவாது விளையாடிக்கொண்

டிருந்த இரண்டு குழந்தைகளையும் வாரி எடுத்துக் கொண்டு வெளியேறிவந்தனள். அக் குழந்தைகளோ சிறிதும் ஊறு எய்தாமல் சிரித்துகொண் டிருக்கக் கண்ட, யாவரும் "ஆ! ஆ! இம் மூத்தாள் அருங் கற்புடையாள். இவள் விஷயத்தில் நாம் பெரும் பிழை செய்தோம். இவ் விளையாளே கொடியாள்! தீவி!" என்று வைதனர். அவர்களுடைய புருஷனும் மூத்தாளைப் பெரிதும் கொண்டாடி, இளையாளைத் தண்டித்து விலக்கிவிடத் தீர்மானித்தான். அப்போது மூத்தாள் தன் புருஷனை வணங்கி, "நாதா! நம் குடி பெரும் புகழுறுமாறு செய்தவள் இவளல்லளோ? இவளைத் தேவரீர் விலக்க வேண்டாம்" என்று வேண்டினள். அவள் புருஷன் அம் மூத்தாளுடைய அப்பெருங் குணத்தை மெச்சி, இளையாளைச் சொற்பமாகத் தண் டித்து வைத்து நடத்த, அவ் விளையாளும் நாளடை வில் துர்க்குணங்கள் ஒழிந்து நல்லவளாயினாள்.

முற்கூறிய அப்புகாரிலே ஒரு தெருவிலே பெருஞ் செல்வர் வீட்டுச் சிறுமி ஒருத்தியும், மிக்க வறியவர் வீட்டுச் சிறுமி ஒருத்தியும் மிக்க சிநேகமாக விளையாடி வந்தனர். அவர்களது அந்நியோந்நியத்தைக் கண்ட வர்கள், "இவர்கள் இருதலைப் பக்ஷியைப் போல உயிர் ஒன்றுடையாராக விளங்குகின்றனர்" என்று வியந்த னர். இவ்விரு சிறுமியரும் க்ஷணநேரமும் ஒருவரை விட்டு ஒருவர் பிரியாமல் உண்ணுவதிலும் உறங்குவதி லுங் கூடச் சேர்ந்திருந்தனர்.

இவ்வாறிருந்த ஒருநாள் அவ்விருவரும் காவிரிக்கு ஸ்நானம் செய்யப் போய் ஆங்கே பலவகையான நீர்

விளையாட்டுக்கள் ஆடிய பிறகு வண்டலிழைத்து மகிழ் வாராயினர். அப்போது செல்வர் வீட்டுச் சிறுமி இழைத்த வண்டற்பாவை அழகிய ஒரு பெண்பாவை வடிவமாக அமைய, வறியவரகத்துச் சிறுமி இழைத்ததோ சூரலக்ஷணம் நிரம்பிய ஓர் ஆண்மகன்வடிவமாக அமைந்தது. அவ்வதிசயத்தை நோக்கி இருவரும் பெரு மகிழ்வுற்று, என் மகள்தான் அழகி என்று செல்வர் சிறுமியும், என்மகன்றான் புருஷன் என்று வறியவர்சிறுமியும் பெருமை பாராட்டுவாராயினர். அப்போது செல்வரகத்துச் சிறுமி, தன்தோழியை நோக்கி, "அடி! என் மகளும் அழகிதான்; உன்மகனும் உத்தமன்றான்; நம்மிருவருள் போராட்டம் வேண்டாம். கடவுளருளால் எனக்கு மகள் பிறந்து உனக்கு மகன் பிறந்தால், உன் மகனுக்கே என் மகள் மனைவியாவாள்; இது நிச்சயம்" என்றனள்.

அதற்கு அவ்வறியவர் வீட்டுச் சிறுமி பெரிதும் அதிசயித்து, "அம்மா தோழீ! நீ பாக்கியவானகத்துப் புதல்வி; நானோ தரித்திர னகத்துப் பெண்; உன் நல்ல குணத்தினால் என் இழிந்த அந்தஸ்தைக்கருதாது என்னோடு ஸமத்வம் பாராட்டி நட்புக்கொண்டிருக்கிறாய். மகட்கொடை ஒத்த குடியினருக்குள்ளேயே நேர்வது; நிரலல்லோர்க்குத் தருதல் முறையன்று; உனக்கு விருப்ப மிருந்தாலும் உன்னைச் சார்ந்தவர் வறியவளாகிய என் மகனுக்கு உன் மகளைக்கொடுத்தலை விரும்பார்" என்றாள். அதற்கு மற்றச் சிறுமி, "யார் எதைச் சொன்னாலும் நான் பிடிவாதமாக இருந்து இப்போது சொன்னபடியே செய்வேன்" என்றாள்.

இது நடந்து சில வருஷங்களாயின. அச் சிறுமிக ளிருவருக்கும் யௌவனப் பருவம் வந்தது; செல்வர் வீட்டுத் திருவனையாளை அவள் பெற்றோர் அவ்வூராள் வோனுக்கு மணம் புரிவித்தனர். வறியவர் வீட்டு மட நல்லாளை அவள் பெற்றோர் அவ்வூர்க் கணக்காயருக்கு மணஞ்செய்வித்து மகிழ்ந்தனர். கடவுளருளால் அக் காவிரிப்பூம்பட்டினம் புகழெய்த முன்னையவளுக்கு ஓ ரழகிய பெண் மகவும், பின்னையவளுக்குச் சிறந்தவோர் ஆண் மகவும் பிறந்து, தத்தம் பெற்றோரை மகிழ்வூட் டின. இப்படிச் சில வருஷங்களாயின; பிறந்த அப்பெண் மகவு வளர்ந்து மங்கையாகிப் பேரழகும் பெருமாண்பும் படைத்துக் கண்டோரனைவர் மனத்தையும கவர்ந்து கொண்டுவிளங்க, அப்பிள்ளையோ வளர்ந்து காளையாகிச் சகல கலைகளையும் ஓதியுணர்ந்து அடக்கமும் ஒழுக்க மும் நிரம்பினவனாய் விளங்கினான்.

இக்காலத்தே பிள்ளைக்கு மாதாவாகிய அக்கணக் காயர் மனைவி ஒருநாள் அவ்வூராள்வோன் இல்லத்தி னுக்குச் சென்று, அங்கேதன் தோழியாகிய அவ்வூ ராள்வோன் மனைவியால் அன்போடு வரவேற்கப்பெற்ற பிறகு, "தோழி! நீ முன்னம் வண்டலயர் விடத்து, 'யானோர் மகளைப் பெற்று, நீயோர் மகனைப் பெற்றால் அவளுக்கு உன் மகன் கணவனாகும்' என்றனையே! அது ஞாபகமிருக்கிறதா?" என்றாள்.

இச்சொல் அவ்வூராள்வோன் மனைவி காதில் காய்ந்த நீள்சலாகைபோலக் கதுவ, மற்றவ ளுள்ளந் தான் தீய்ந்தது; உடல் வெதும்பிச் சீறினள். பொங்கி யோங்கி, "என்னடீ சொன்னாய் பேதை! என்

குலப்பெருமை என்ன! உன் குலச்சிறுமை என்ன! பேதைப் பருவத்துப் பேசியவோர் வார்த்தையை நீ சாதிக்க வந்தாய்; சமர்த்தி நீ; போதுனைக்குப் போக வில்லை என்று புகுந்தாயோ என்னகத்தில்? ஏகம்மா இல்விற்கெழுந்து" என்றாள்.

கேட்ட கணக்காயர் மனைவி, மனம் மிக நொந்து, தன்னில்லத்திற்கு வந்து அன்றிரவு தன் கணவனுடன் நடந்ததைச் சொல்லித் துக்கமுற்றிருந்தனள். ஊராள் வோன் மனைவியோ வெகு கோபமாய் வெளியிற்போன தன் கணவன் வரட்டுமென்று காத்திருந்து, அவன் வந்த பிறகு அவனுக்குச் செய்யவேண்டிய உபசாரங்க ளனைத்துஞ் செய்தான பிறகு, அவன் ஸுமுகமாக விருக்கும் சமயத்தில் பண்டுத்தன் பேதைப் பருவத் துத் தனக்கும் கணக்காயர் மனைவிக்கும் நடந்த பேச் சையும், அப்போது அக்கணக்காயர் மனைவி வந்து மகட்கேட்டுப் போனதையும் உரைத்து வருந்தினள்.

இவ்விருவர் பேச்சினையும் கேட்டுக்கொண் டிருந்த அவர்களது புதல்வி, "ஆ! நமக்கு நாயகனார் முன்னமே அமைந்துள்ளாரே; அவரையன்றிப் பிறரை நாம் கன விலும் நினைத்தல் செய்யலொண்ணுதே; நம் தாய் செல் வச் செருக்கால் தான்செய்த வாக்குத் தத்தத்தினை மறந்து ஏதோ பிதற்றுகிறாள்" என்று, மறுநாட் காலையே எழுந்து கடவுளையும் வணங்காது, தன்பேழை யில் வைத்திருந்த கோடிப் புடவையை யுடுத்துக் கொண்டும் தலையை வாரி முடித்துகொண்டும், எல்லா ஆபரணங்களையும் அணிந்துகொண்டும், பூங்கொடி நடைகற்றுச் செல்வதுபோலத் தலைவணங்கிய படியே

அக் கணக்காயர் இல்லஞ் சென்று, அவர் புதல்வனைத் தனக்குக் கணவனாக ஏற்று ஆங்கிருந்துவிட்டாள்.

அதனைப் பார்த்த ஜனங்கள் யாவரும் பெரிதும் விம்மிதமுடையவர்களாய், 'இன்றன்றோ 'இற்பிறப் பென்பதென்றும் இரும்பொறை என்பதென்றும் கற் பெனும் பெயரதொன்றும்களிநடம்புரியக்கண்டோம்!'' என்று குதூஹலிக்க, அவ் வூராள்வோனும் அவன் மனைவியும் பெரிதும நாணமுடையவர்களாகி அக்கணக் காயர் இல்லத்திற்கு வந்து, பிழைபொறுக்குமாறு வேண்டிக்கொண்டு, பிறகு, தம்மகளை வாரி எடுத்து மார் போடணைத்து, ''எம் குடியை விளக்கவந்த கொம்பே! உன்னாலன்றோ யாம் உய்ந்தோம்! நீ நீடூழி வாழ்க'' என்று ஆசீர்வதித்து, சான்றோரை அழைத்துவந்து விதிப்படி அன்றே அவ் விருவருக்கும் மணவினை முடிப் பித்து, ஏராளமான சீதனங்களும் நல்கிப் பெருமை யுற்றனர்.

முற்கூறிய புகாரிலே பல்லாற்றானும் சிறப்புற்ற காப்பியம் என்னும் குடியிலே உதித்த ஓர் அந்தண னது மனைவியர் இருவருள் மூத்தாளான மாலதி என் பாள் தன்னுடைய சக்களத்தியின் மைந்தனை ஓர் இளங் குழவியை எடுத்துச் சீராட்டிக் கொண்டிருக்கை யில், ஆசைப் பெருக்கினால் மலடியான அவளுக்கும் பாலுண்டாக, அதை அவள் அவ்விளங் குழவிக்கு அன் போடும் ஊட்டினாள். ஊட்டவே, ஊழ்வினை வசத்தால் அக் குழந்தை பால் விக்கி மாண்டு போயிற்று. போக வே! மாலதி நடுநடுங்கி மெய் சோர்ந்து; ''ஐயோ! என்ன செய்வேன்! என் சக்களத்தி என்னை ஐயுறு

வாளே! தெய்வமே! என்னைக் காவாயோ!'' என்று புலம்பிக்கொண்டு, அவ்வூரிலுள்ள பல ஆலயங்களுக்கும் அவ்விறந்த குழவியை எடுத்துக்கொண்டு சென்று, ''கடவுளே! நான் இதனைக் கொல்லவில்லை யென்பதை நீவிர் அறிவீரே! என் சக்களத்தி என்மேற் பழி சுமத்தாவண்ணம் இக் குழவிக்கு உயிர்தந்து காக்க வேண்டும்'' என்று வேண்டினாள்.

என்ன வேண்டியும் அத்தெய்வங்கள் அவளுடைய துக்கத்தைத் தீராமையால், அவள் மகா சாஸ்திரன் என்னும் தெய்வத்தின் கோவிலிலே சென்று, ''ஓ! சாத்தனே! நீ தொண்ணூற்றாறுவகைச் சமய சாஸ்திரங்களையும் கற்றுச் சிறந்த கல்வியாளனென்று புகழ்பெற்றிருக்கின்றையே! யான் செய்த பிழையினால் இச்சிசு மாண்டதா? என் சக்களத்தி என்னைச் சும்மா விடாள்! நீதான் இதனைப் பிழைப்பித்துத் தரல் வேண்டும்; நீயும் என்னைக் கைவிடுவாயேல் உன் திருவடியிலேயே; என் உயிரை விட்டிடுவேன்'' என்று வேண்டிப்பலநாள் வரங்கிடந்தாள்.

அப்படிக் கிடந்தநாட்களில் ஒருநாளிரவு நள்ளிருளில் சுடுகாட்டினின்றும்ஒரு பிசாசு அம்மகா சாஸ்திரன் கோவிலிலே நுழைந்து, ''ஓ, மாலதி! பூர்வஜன்மத்தில் நற்கருமத்தைச் செய்யாதோருக்குத் தெய்வங்கள் உதவி செய்யா· நீ முன் ஜன்மத்திற் செய்த பெரும் பாவத்தின் பயனாக இப்போது அல்லல் உழக்கின்றாய்' இங்கே வீணாகப் பட்டினி கிடந்து உயிர்விடாதே அகத்திற்குப்போ''என்று சொல்லி, அம் மாதின் கையகத்திருந்த அச்சிசுப்பிணத்தைப் பறித்துக்கொண்டு போய்த் தின்றுவிட்டது.

விடவே, அதனால் ஆற்றொணாத் துயருழந்து அலறிப் புரண்டு கதறி ஓலமிட்ட அவளைக் கண்ட அம்மகா சாஸ்திர தெய்வம் பெரிதும் மனமிரங்கி, 'எல்லாத் தெய்வமும் இவள் விஷயத்தில் இரக்கமற்றுப் போயின. இவளை இப்படித் துன்புறவிடுதல் நமக்கு அழகன்று. எத்தகைய தானத்தினும் அபயதானம் சிறந்தது. அடைந்தார் துயரத்தைக் களையாத புருஷன் ஒரு புருஷனாவானா? இறந்துபோன இவளது குழந்தை திரும்பவும் உயிர் பெற்று வாராதாயினும், இவளுக்கு ஒரு புதல்வனை நாம் எப்படியாவது அளித்தே ஆக வேண்டும்; அஃது கூடாதாயின், நாமேதான் சென்று இவளுக்குப் புத்திரனா யிருந்துவிடுவோம்'' என்று நிச்சயித்து, அம் மாலதியை நோக்கி, "ஓ! அன்னாய்! நீ இல்லிற்குப் போ; போகும் வழியில் உன்பிள்ளை விளையாடிக்கொண்டிருக்கும்; நீ துயரொழி என்றது.

அதை அம்மாலதி கேட்டுக் களித்து, தன்னகத்தை நோக்கிச் சிறிதுதூரம் சென்றவளவில், வழியிலே இறந்ததன் குழவியே என்னும்படியான ஒரு குழவி விளையாடிக் கொண்டிருக்கக் கண்டு, தன் குழந்தையே உயிர் பெற்றெழுந்ததென ஆனந்தங்கொண்டு, அதை அன்போடும் எடுத்து மார்போடணைத்து, முத்தமிட்டுத் தன்வீட்டுக்குக்கொண்டுபோய்த் தன் சக்களத்திகையிற் கொடுத்துத் தன் மகிமையை வெளிப்படுத்தினள்.

Printed at the R. G. Press, G. T. Madras.

# பிழை திருத்தம்.

| பக்கம் | வரி | பிழை | திருத்தம். |
|---|---|---|---|
| 19 | 2 | என்றும் | என்னும் |
| 26 | 5 | யாசஙகளை | யாகஙகளை |
| 28 | 18 | இயலும், | இயலும் |
| 43 | 25 | அப்படிக்கொடுதத | அப்படிக்கொத்த |
| 46 | 3 | தறகான | தற்கான |
| 49 | 7 | கறற | கற்ற |
| 53 | 25 | வெடடி | வெட்டி |
| 54 | 5 | என்றன. | என்றனர். |
| 60 | 29 | செஙகட் | செஙகட் |
| 61 | 6 | ருப்பமுற்று. | விருப்பமுற்று. |
| 70 | 9 | உடன்சட்டை | உடன்கட்டை |
| 75 | 9 | கணவனிடததுப் | கணவனிடத்துப் |
| 79 | 4 | சோழா | சோழர் |
| 85 | 4 | ஸம்மா | அம்மா |
| 90 | 11 | பதது | பத்து |
| 91 | 22 | ஆயுளுளள | ஆயுளுள்ள |
| 98 | 21 | விசேஷஉற் | விசேஷ |
| 107 | 20 | புலவாய் | புல்வாய் |
| 127 | 15 | கழார்ப்புறம் | ~~கழார்ப்புரம்~~ |
| ,, | 20 | மரவேர்களிலும் | ~~மரவேரிகளிலும்~~ |
| 129 | 15 | ஸம்மா | அம்மா |
| 131 | 23 | எறிகவே | எறியவே |
| 132 | 22 | மொம்பிற் | மொய்ம்பிற் |
| 133 | 26 | திறத்தாற்கும் | திறத்தார்க்கும் |
| ,, | 28 | ஒடுக்கிதன் | ஒடுக்கித்தன் |
| 141 | 15 | சரக்கும் | சுரக்கும் |
| 144 | 8 | சிர | சிரம் |
| 160 | 6 | பதென்றும் | பதொன்றும் |

மற்றுஙகாணப்படின் திருத்திக்கொள்க.